
# நளினி

காவிரிக் கரை நாவல்



க.நா.சு.


நளினி
காவிரிக் கரை நாவல்
க.நா.சு.

க.நா.சு என்றழைக்கப்படும் கந்தாடை நாராயணன் சுப்ரமண்யம் தஞ்சாவூர் ஜில்லா வலங்கைமானில் 31.01.1912இல் பிறந்தவர். சென்னையிலும் டில்லியிலும் இவரது இலக்கிய வாழ்க்கை குடிகொண்டிருந்தது. இலக்கிய வட்டம், சூறாவளி, சந்திரோதயம் ஆகியவை இவர் நடத்தி வந்த இலக்கிய இதழ்கள். சிறந்த இலக்கிய விமர்சகராகவும் அயல்மொழி செவ்விலக்கியங்களை தமிழுக்கு அளித்த மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் வாசகர்களிடம் கவனம் பெற்றுள்ள க.நா.சு பல்வகைப்பட்ட நாவல்களையும் எழுதி சாதனை புரிந்தார். 'இலக்கியத்துக்கு ஒரு இயக்கம்' என்ற இவரது நூலுக்கு சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப் பட்டது. சிறுகதைகளும் கவிதைகளும் எழுதி வெளி யிட்டிருந்தாலும் தனது நாவல்கள் மூலமாகத்தான் க.நா.சு ஒரு சிறந்த படைப்பாளியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார். 'பொய்த் தேவு' இவரது பிரபலமான நாவல்; 'அசுரகணம்' ஆகச்சிறந்த நாவல்; 'அவரவர்பாடு' இவரெழுதிய மர்ம நாவல். இல்வாழ்க்கையை பொருட்படுத்தாது இலக்கிய வாழ்க்கைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்த க.நா.சு 16.12.1988இல் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார்.

# நளினி

காவிரிக்கரை நாவல்

க.நா.சு

சந்தியா பதிப்பகம்

சென்ன ை-

# ஒரு சொல்

க.நா.சுவின் நாவல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருக்கும். 'நளினி' சிக்கல்கள் எதுவுமில்லாத ஒரு சாதாரண நாவல்.

1959இல் வெளிவந்த நாவல் இது. இந்த காலக் கட்டத்தில் சிற்றன்னைகளுக்கு குறைவே இல்லை. அந்த கிராமங்களில் ஒவ்வொரு தாத்தாவுக்கும் தாழ்வாரத்திற்கு ஒரு மனைவி அதிகாரம் செய்து கொண்டிருப்பாள். மறுதாரம் இல்லாத மனிதர்கள் இல்லை என்று கூறும் அளவிற்கு காவிரி கரையோரத்து கிராமங்களும் அக்கிரகாரங்களும் இருந்தன. அப்படிப்பட்ட ஒரு அக்கிரகாரத்தின் கதை இது; அப்படிப்பட்ட ஒரு சிற்றன்னையின் கெடுபிடியில் வளர்ந்த சிறுமியின் கதை இது.

வாசற்படியே உலகம் என்று இருந்தவள் அச்சிறுமி நளினி. ஆனால் திருமணம் முடிந்த மறுநாளே படிதாண்டிச் செல்கிறாள் - ஒரு அயோக்கியனுடன் வாழ விரும்பாமல் - ஊரும் உலகமும் பொருட்டில்லை என்று.

சந்தியா பதிப்பகம்

## உள்ளே...


ஒரு சொல்

பூச்சி! பூச்சி! பூச்சி!

பட்டணத்து மாமா

போலீஸ் விசாரணை

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

தந்திக் குமாஸ்தா

பட்டணத்து பாங்கி

குருஸ்வாமி மறைந்தார்

பெரிய வக்கீல்!

விஜயபுரத்தில்

சீதாராமனும் குருஸ்வாமியும்

மூன்று வருஷங்களுக்குப் பிறகு

கல்யாணப் பேச்சு

மீண்டும் வந்தவன்

அடைத்த கதவு

# பூச்சி! பூச்சி! பூச்சி!

“நளினி! அடீ நளினி! எங்கேயடியம்மா தொலைஞ்சு போயிட்டே?” என்று குரல் கொடுத்தாள் சின்னம்மா.

“ஏன் சின்னம்மா? இதோ இருக்கேன். முதல் தடவை நீ கூப்பிட்டதே காது கேட்டது. ஏன் இன்னும் கேட்டுண்டே உள்ளே வரதுக்குள்ளேயே நீ எட்டுதரம், கூப்பிட்டுடறயே!” என்று கூறிக்கொண்டே குதித்துக் குதித்துக் கொண்டு உள்ளே வந்தாள் நளினி.

நளினிக்கு வயசு பத்திருக்கும் - இரண்டு, மூன்று மாசங்கள் அதிகமாகவே இருக்கும். ரொம்பவும் சிவப்பில்லை; மாநிறம் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால், முகத்திலே ஒரு குறுகுறுப்பும், அசைவிலே ஒரு அழகும் இருந்தன. ஒரு காலத்தில் பச்சையாயும், நன்றாகவும் இருந்த பாவாடையைக் கட்டிக் கொண்டிருந்தாள். பாவாடை இரண்டொரு இடங்களில் கிழித்து தைக்கப்பட்டிருந்தது. கழுத்திலே ஒரு பவழமாலை. தலைமயிர் எண்ணெய் பட்டு எத்தனை நாள் இருக்குமோ! ஆனால், அதை வாராமல் பின்னி வாழைநார் முடிந்திருந்தாள். நெற்றியிலே பொட்டில்லை. ஆனாலும் அதிலே ஒரு பள பளப்பு இருந்தது. கைகளிலோ கால்களிலோ ஒரு நகையும் இல்லை. கண்ணாடி வளையல்கூட அவள் கைகளை அலங் கரிக்கவில்லை. அவள் கண்கள் ஆழ்ந்தகன்று இருண்டு இருந்தன. சின்ன வாய். ஒவ்வொரு வார்த்தையைப் பேசும் போதும் அவள் வாய் ஒரு சிவப்பு வளையமாகத் திறந்து மூடியது.

‘நளினி! நளினி!’ என்று அவளைக் கூப்பிட்டு அதட்டிய சின்னம்மா நகைநட்டுகள் எல்லாம் ஏராளமாக அணிந்திருந்தாள். சற்று அதிகமாகவே அணிந்திருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். நல்ல சிவப்பு நிறம். விலை உயர்ந்த பகட்டான பட்டாடை அணிந்திருந்தாள். தலையை வாரிச் சீவி ஜில்லென்று பொட்டும் இட்டிருந்தாள். கொஞ்சம் பகட்டான ஸ்திரீ தான். வயசு இருபது இருபத்திரண்டுக்குள் தான் இருக்கும். அவர்

நளினியின் சின்னம்மா; அதாவது, நளினியினுடைய தகப்பனாரின் இரண்டாவது மனைவி.

நளினி தாயில்லாப் பெண். அவள் தாய் இறந்து இப்போது நாலைந்து வருஷங்களுக்கு மேலாகிறது. தனக்கு தாயார் ஒருத்தி இருந்ததே நளினிக்கு ஞாபகம் இல்லை என்றே சொல்லலாம். தாயன்பு என்றால் என்ன என்பதே அறியாமல் வளர்ந்து வருகிறவள் அவள். அது மட்டும் அல்ல; தாயன்பு தேவை என்றும் உணராதவள் அவள்.

நளினியின் சின்னம்மா - அவள் பெயரே சின்னம்மா தான் - சுபாவத்தால் கெட்டவள் அல்ல. ஏழ்மையான, அங்கத்தினர்கள் அதிகம் உள்ள குடும்பத்தில் பிறந்தவள். அந்தக் குடும்பத்திலே சிடுசிடுவென்று சதா சண்டை போட்டுக்கொண்டிருந்தால் தான் - அதாவது, ஏழெட்டுப் பேருடன் ஓயாமல் போட்டி போட்டுக் கொண்டிருந்தால் தான் ஒவ்வொரு வேளையும் வயிறார உண்ணமுடியும். வாழ்க்கை என்பது ஒரு போர் என்பதைச் சின்னம்மா தன் இளவயதிலிருந்தே உணரச் சந்தர்ப்பங்கள் படைத்திருந்தாள். அந்தப் போரிலே வெற்றி பெற வேண்டுமானால் ஓயாத வாயடி கையடி அடித்துதான் வெற்றி பெறலாம். வெற்றி ஒரு லக்ஷியம் - ஓயாத வாயடி கையடியே லக்ஷியம் என்றாகிவிட்டது அவளுக்கு! பதினாறு வயது வரையில் கலியாணமாகாமல் - எப்போதுதான் கலியாணம் ஆகும் என்கிற நிச்சயமும் இல்லாமல் - தெருவார் சொன்னது போல் ‘மாடு மாதிரி’ வளர்ந்து வந்த சின்னம்மா, ஒரு நாள் பணக்கார இடத்தில் - இளையாளாகத்தான் என்றாலும் பணக்கார இடம் ஒசந்த இடம் தானே! - வாழ்க்கைப் பட்டாள். பெண்டிழந்து விட்டு நாலைந்து வயது கூட நிரம்பாத சிறுமியை வைத்துக் கொண்டு அவஸ்தைப் பட்ட விசுவநாதய்யர் நல்ல இடம் பார்த்து, பொறுப்புத் தெரிந்த பெண்ணாக வேண்டுமென்று தேடி, தானாகவே வலிய வந்து அவளைக் கலியாணம் செய்து கொண்டார்.

நல்ல இடம்தான். வாழ்க்கை ஒரு போர் என்பதையே மறந்துவிட்டு, வாழ்க்கை நடத்தலாம் சின்னம்மா. ஆனால் பழைய பழக்க வேகம் அவளை விட மறுத்தது. கணவன் சாது. அவள் பேசுவதற்கு எதிர்வார்த்தை பேசமாட்டார். அவள் இட்டதே சட்டம். போராட, வாயடி கையடி அடிக்க,

அங்கு வீட்டிலே யாரும் இல்லை. ஒரு சிறு பெண்தான் இருந்தாள் - கள்ளங் கபடு அற்ற சிறுபெண். கோபித்துக் கொண்டாலும், அதட்டினாலும் அழத் தெரியாத சிறு பெண். மாற்றாந்தாய், படுத்துகிறாள் என்ற ஞாபகமே, பிறர் ஞாபக மூட்டினால் கூட, நளினிக்கு வருவதில்லை. அப்படியிருந்தும் நளினியைக் காணும்போதெல்லாம், வெட்டலாமா என்று தான் வரும் சின்னம்மாவுக்கு.

அப்படி ஒன்றும் கெட்டவளும் அல்ல அந்தச் சின்னம்மா.

தன் வயிற்றில் பிறந்தவள் அல்ல என்பதற்காக நளினியைக் கடுமையாக நடத்தினாள் அவள் என்று சொல்ல முடியாது. தன் வயிற்றில் பிறந்திருந்தாலும் அவள் அவ்வளவு கடுமையாகவே தான் இருந்திருப்பாள். மூத்தாள் பெண் என்பதற்காக அவளுக்குத் தலை வாராமல், நல்ல ஆடை உடுத்திவிடாமல் இருந்தாள் என்றும் சொல்வதற்கில்லை. தன்னைச் சிங்காரித்துக் கொள்ளவே போதில்லை சின்னம்மாவுக்கு- போது போதவில்லை. தன் பெண்ணையோ, மூத்தாள் பெண்ணையோ சிங்காரிக்க அவளுக்குப் போது எங்கிருந்தது.

சின்னம்மாவைச் சொல்வதில் லாபம் இல்லை. மனித சுபாவமே இதுதான் போலும். தீவிரமாக, சிந்தித்துக் கண்டு பிடிக்கக்கூடிய காரணம் எதுவும் இல்லாமலே, சில காரியங்கள் நடந்து வருகின்றன; சிலர் உறவுகள் பாதிக்கத் தான் பாதிக்கப்படுகின்றன. அதைப்பற்றி ஆராய்வது அவசியம் இல்லை.

ஆனால், நளினியைப்பற்றி அவள் கண் மறைவாக இருக்கும்போது கெடுதியே நினைக்காத சின்னம்மா, அவள் கண்ணெதிரே வந்தவுடன் காளிமாதிரியாகி விடுவாள்! அவள் உள்ளத்திலே ஆத்திரம் ஏதோ குடிகொண்டு மூண்டு மூண்டு எழும்.

இன்றும் அப்படித்தான். “சும்மா வாயாடிண்டு நிக்காதே, கழுதை! எத்தனை தரம் சொல்றது? வாசல் திண்ணையிலே உனக்கென்ன வேலை - எப்பப் பார்த்தாலும்! உள்ளே வெள்ளிப் பேலாவிலே சாதம் பிசைஞ்சு வைச்சிருக்கேன்; ராஜாவுக்கு சாதத்தை ஊட்டு! வயது ஆறது - சொந்தமா ஒரு பெண்ணைப் பெத்துக்க; இப்படி தினம் நிக்கறயே!” என்றாள்

சின்னம்மா.

நளினி பதில் ஒன்றும் சொல்லவில்லை. குதித்துக் குதித்துக் கொண்டே உள்ளே போய். இடுப்பில் ராஜுவைத் தூக்கி வைத்துக்கொண்டு, இடது கையில் வெள்ளிப் பேலாவை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

“அம்மு, சாப்பிடறயாடா?” என்று ராஜுவைக் கேட்டுக் கொண்டே கூடத்தில் நின்ற தன் சின்னம்மாவை லக்ஷ்யமே செய்யாமல் மீண்டும் வாசல் பக்கம் போய்விட்டாள்.

“நன்னாருக்குடி இந்தப் பொண் அடிக்கிற கூத்து!” என்று முணுமுணுத்துக் கொண்டாள் சின்னம்மா.

இதற்குள் அவள் கணவன் விசுவநாதய்யர், “அடியே! அடியே! வெந்நீர் எடுத்து வை; ஸ்நானம் பண்ணிவிட்டு ஆபீஸ் போகணும்” என்று கொல்லைத் தாழ்வாரத்திலிருந்து குரல் கொடுக்க, அதைக் கவனிக்க போய்விட்டாள்.

இடுப்பில் குழந்தையுடன் வாசலில் நின்று நளினி, குழந்தை சாப்பிடமாட்டேன் என்று பிடிவாதம் செய்வது கண்டு, பயமுறுத்தலாகவும் வேடிக்கையாகவும், “பூச்சி! பூச்சி!” என்று கூப்பிட்டாள்.

“ச்சி... ச்சி....” என்று மழலை பேசியது அவள் இடுப்பில் இருந்த குழந்தை.

சாப்பிடறயா; இல்லாட்ட, அம்முவை எல்லாம் பூச்சிக்குப் போடட்டுமா? என்று கேட்டாள் நளினி.

“.... ச்சி... சி... ஓடு” என்றது குழந்தை.

அந்தச் சமயம் பெண்ணின் குரல் கேட்டு, ‘பூச்சி’யே வாலை ஆட்டிக் கொண்டு நாலுகால்ப் பாய்ச்சலாக அங்கு வந்து சேர்ந்துவிடவே, குழந்தைக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கலகலவென்று சிரித்தது; கைகளையும் கால்களையும் போட்டு உதைத்துக் கொண்டது.

பூச்சிக்கு சாதத்தைப் போட்டு விடுவேன் என்று பய முறுத்திக் காரியத்தை சாதித்துக் கொள்ளப் பார்த்த நளினி ஏமாந்தாள். பூச்சிக்கும் சாதம்

போட்டால்தான் சாப்பிடுவேன் என்றது குழந்தை. பூச்சிக்குப் பாதி, குழந்தைக்குப் பாதி என்று சாதத்தை ஊட்டிவிட்டு வெள்ளிப் பேலா காலியான பிறகு, உள்ளே திரும்பலாமா என்று நளினி யோசனை பண்ணிய சமயம் தெருக்கோடியிலே ஒரு குதிரை வண்டி வந்தது. "அதோ பார், குதிரை வண்டி...." என்று குழந்தைக்குச் சொல்லிவிட்டு அவ்விடம் பேலாவும் கையுமாகக் குதிரை வண்டியைத் தானே பார்த்துக் கொண்டு நின்றாள் நளினி.

குதிரை வண்டி அவள் வீட்டிற்கு எதிரே வந்து நின்றது. அதிலிருந்து ஒரு வாலிபன் இறங்கினான். அவன் நளினி வீட்டுக்கு நேர் எதிர் வீட்டை நோக்கிப் போனான் வண்டிக் காரன் அவனுடைய பெட்டி படுக்கையுடன் பின் தொடர்ந்தான்.

"ராஜு, அந்த மாமாவைப் பார்த்தியாடா? பட்டணத்து மாமாவை!" என்றாள் நளினி சற்று உரக்க.

எதிர் வீட்டை நோக்கிப் போன வாலிபன் காதில் நளினி சொன்னது நன்றாக விழுந்தது. பட்டணத்து மாமா திரும்பினான், யார் அப்படித் தனக்குப் பட்டம் அளித்தது என்பதைப் பார்ப்பதற்காக. ஆனால் அவன் கண்ணில் அழுக்குப் படிந்த கிழிந்த பச்சைப் பாவாடை அணிந்திருந்த ஒரு பெண், இடுப்பிலே ஒரு குழந்தையுடன் எதிர் வீட்டிற்குள்ளே போவது தான் தெரிந்தது. அவள் முகம் அவனுக்குத் தெரியவில்லை.

"தேவலையே! வாயாடிப் பெண்ணாக இருக்கும் போலிருக்கே! வளர்ந்த பெண்ணாகவும் இருக்கிறதே!" என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் போனான் அவன்.

## பட்டணத்து மாமா

பட்டணத்து மாமா என்று நளினி விளையாட்டாகப் பெயர் சூட்டிய அந்த வாலிபன் உண்மையிலேயே பட்டணத் திலிருந்து வந்தவன் தான். விஜயபுரம் அக்கிரகாரத்தில் நளினி வீட்டிற்கு நேர் எதில் வீட்டில் அவனுடைய மூத்த சகோதரி வசித்துக் கொண்டிருந்தாள். அவளைப் பார்ப்பதற்காகத்தான் வந்திருந்தான்.

அவன் பெயர் சீதாராமன். அவனுக்கு வயசு இருபத் திரண்டுக்குள் தான் இருக்கும். ஒல்லியாக, உயரமாக, மூக்கும் முழியுமாக, பார்ப்பதற்கு நன்றாக இருந்தான். பி.ஏ. படித்தவன். மேலே கணக்கு வழக்கு என்று கொஞ்சம் அதிகமாகவும் படித்து இரண்டொரு பட்டங்களும் பெற்றவன். அவனுக்குப் பட்டணத்து பாங்கிகளில் ஒன்றிலே வேலையாகியிருந்தது. வேலை கிடைத்து ஒரு வருஷம் இருக்கும். லீவு கிடைத்த சந்தர்ப்பத்திலே, தன் சகோதரியைப் பார்த்துவிட்டு அவளுடன் இரண்டொரு நாள் தங்கிவிட்டும் போகலாம் என்று எண்ணி வந்திருந்தான் சீதாராமன்.

அவன் வந்ததில் அவன் அக்கா பர்வதத்தம்மாளுக்கு அளவற்ற திருப்தி, அவள் கணவர் வைதீகர்; கொஞ்சம் கட்டுப்பெட்டி என்றுதான் சொல்ல வேண்டும். சொல்ப நிலபுலன்கள் உள்ளவர். வைதீகத் தொழில் செய்து காலங் கடத்தியவர். வைதீகன் என்பதிலே ஏதோ கொஞ்சம் அகௌரவம் உண்டு என்று உள்ளூர அந்தரங்கத்தில் எண்ணி யிருப்பவள் பர்வதம்மாள். பட்டணத்து தம்பி வந்து தங்கள் வீட்டில் சிலநாள் தங்கிப் போவதனாலே விஜயபுரத்து அக்கிரகாரத்திலே தன்னுடைய மதிப்பு சற்றே ஓங்கும் என்று அவள் எண்ணியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அந்தத் தம்பியைப் பற்றி அவள் ஏற்கனவே தன் சிநேகிதிகள் பலரிடமும் கூறியதுண்டு. தம்பி என்றால் பட்டணத்துத் தம்பிதான் அவளுக்கு ஞாபகம் வரும். அந்தத் தம்பிக்கு மூத்தவனான இன்னொரு தம்பி தனக் கிருந்தது பர்வதத்துக்கே மறந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அந்தத் தம்பியும் வைதீகன்தான்; தஞ்சாவூரிலே புரோகிதம்

பண்ணிக்கொண்டிருந்தான்.

பட்டணத்து தம்பியின் வருகையைக் கொண்டாட பர்வதம் வெகுவாகப் பாடுபட்டாள். ஏதோ வீட்டிலிருக்கிற சாமான் களையே கடன் வாங்குகிற சாக்காக வெளியே சென்று அண்டையில் இரண்டொரு வீடுகளுக்கு தன் தம்பி வந்திருக்கிற விஷயத்தை நைஸாகச் சொல்லி விட்டு வந்தாள். இப்படி அவள் எதிர் வீட்டுச் சின்னம்மாளிடம் வந்து தன் தம்பியைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருக்கும் போது நளினியும் உடன் இருந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

“இப்போ சித்தே முன்னாடி குதிரை வண்டியிலே வந்து இறங்கினாரே, அவரா? உங்கள் தம்பியா அவர்?” என்றாள் நளினி.

பர்வதத்துக்கும், நின்று இன்னும் ஒரு நிமிஷம் தன் தம்பியைப்பற்றிப் பேசலாமே என்று ஆசை. “ஆமாம்! நீ பார்த்தயோல்லியோ? பாக்கறதுக்கு அழகாயிருப்பான்!.... நாழியாறது. பாவம்! பதினாறு மணிநேரம் ரயிலிலே வந்த அலுப்பு! சீக்கிரம் சமைச்சுப் போட்டா சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சம் அலுப்புத் தீரத் தூங்குவான்... ஆமாம் மாமி! உங்காத்திலே சேமியா இருக்கோ? இருந்தாக் கொஞ்சம் கொடுங்கோ. அது வந்ததும் வாங்கிண்டு வரச் சொல்லித் திரும்பத் தடுந்திடுரேன். என்னிக்கும் வராதவன் இன்னிக்கு வந்திருக்கான்; நாள் பார்த்து அது பக்கத்துக் கிராமத்துக்குத் தொலைஞ்சுடுத்து மிராசு பண்ண! எண்ணம்மா பண்றது?”

சின்னம்மா வீட்டிலே சேமியா இல்லை. பர்வதத்திற்கும் சேமியா அப்படி ஒன்றும் அவசியம் இல்லைதான். அப்படி என்ன மாப்பிள்ளையா வந்திருந்தான் சேமியாப் பாயஸம் பண்ணிப் போட? தம்பிதானே! ஏதாவது வேண்டும் என்று கேட்டுக் கொண்டு போனால்தானே சின்னம்மாவிடம் தன் தம்பியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் பேச இயலும்?

“உங்க தம்பி ஒருவாரம் இருப்பாரா?” என்று ஏதாவது கேட்கவேண்டுமே என்று சொரத்தில்லாமல் கேட்டு வைத்தாள் சின்னம்மா.

“அதென்னமோ வந்ததும் வராததுமா சொல்லிப்புட்டான். இரண்டொரு நாளிலே திரும்பணும்னு. பட்டணத்து பாங்கியிலே வேலை? இவன்

இல்லாமே அங்கே பாங்கியிலே எல்லாருமே திணறிப் போவாளோல்லியோ? சீக்கிரம் போகணும்னுதான் சொன்னான்" என்றாள் பர்வதம்.

தன் தம்பியைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டுப் போக பர்வதத்துக்கு மனமில்லைதான். ஆனால் எப்படியோ நிறுத்தி விட்டுக் கடைசியில் "போய்ட்டு மத்தியானமா வரேன்" என்று விடைப்பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

அவள் போன பின் சின்னம்மா சற்றுக் கேலியாகவே சொன்னாள். "பிரமாதமாகத் தம்பியைப் பத்திப் பீத்திக்கிறதுக்கு வந்துட்டா இங்கே! அதிசயத் தம்பிதான்! பட்டணத்திலே நாற்பது ரூபாய்க்கு லாட்டரி அடிச்சிண்டிருப்பான்! இங்கே...."

நளினி பேசாமல் இருந்திருக்கக் கூடாதா பாவம்! குறுக்கிட்டாள்; வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

"அவர் வண்டியிலேருந்து வந்து இறங்கச்சே நான் பார்த்தேன். நன்னாகத்தான் இருந்தார்" என்றாள் நளினி.

"பெரிய மனுஷி கணக்கா உட்கார்ந்துண்டு வம்பளந் துண்டு! போடி கழுதை! அண்டாவிலே ஜலம் இல்லே; கிணத்திலேருந்து இழுத்துக் கொண்டு வந்து கொட்டு!" என்று நளினியை அதட்டினாள் சின்னம்மா.

நளினி இங்கு சீதாராமனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது போலவே அங்கே எதிர்வீட்டில் சீதாராமனும் நளினியைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தான்.

"இன்னிக்கு நான் வந்து வண்டியிலேருந்து இறங்கச்சே எதிராளாத்திலே ஒரு பொண்ணு - பத்துப் பனிரெண்டு வயது இருக்கும்...." என்று சீதாராமன் தன் தமக்கையிடம் ஆரம்பித்தான்.

"ஊருக்கு வரத்துக்கு முன்னாடியே பொண்ணையும் பாத்து வச்சுட்டாயா? இனிமே முகூர்த்தத்துக்கு நாள் வைக்க வேண்டியதுதான் பாக்கியாக்கும்! வரட்டும்; அத்திம்பேர் வந்தவுடனே சொல்லி நாள் பார்க்கச் சொல்றேன்" என்றாள் பர்வதம் கேலியாக. ஆனால் பெருமையுடன். இந்தச் சமயத்தில்

தன் கணவர், வைதீகர் என்பதுகூடப் பெருமை அளிக்கிற விஷயமாக இருந்தது போலும் அவளுக்கு.

“போ அக்கா! அந்தப் பெண்ணு கொஞ்சம் வாய்த் துடுக்குக்காரின்னு பட்டுது எனக்கு. என்னைப் பார்த்துப் ‘பட்டணத்து மாமாவைப் பாத்தியாடா! என்று தன் இடுப்பில் இருந்த குழந்தையிடம் கேட்டுக் கொண்டிருந்தாள். என் காதிலே விழும்படியா வயசான பொண்ணு இப்படிக் கூச்சமில்லாம...” என்று சொல்லி நிறுத்தினான் சீதாராமன்.

“நல்ல பொண்ணுதான்; கள்ளங் கபடில்லாத பொண்ணு மனசிலே நினைக்கிறதை வாயிலே சொல்லிப் புடும். இளைய தாயார்கிட்டே மாட்டிண்டு சிரமப்படறது!” என்றாள் பார்வதத்தம்மாள்.

“ஐயோ பாவம்! நன்னாத் தலைவாரி நல்ல புடவை கட்டி தலைபின்னி விட்டா அழகாகக்கூட இருக்கும்” என்றான் சீதாராமன்.

அவனுடைய சகோதரி அவன் சொன்னதைக் காதில் வாங்காமலே சொன்னாள்! “தங்கமான பொண்தான். இங்கே அடிக்கடி வரும். போகும். ஆனால் இப்போ அவ இளைய தாயார் தர்பார் பண்றா; முன்னைப்போல வந்து போற தில்லை. எங்கிட்டே உசிரா ஒட்டிண்டிருக்கும். நம்ம எச்சுமுவும் அவளும் ரொம்ப சிநேகிதம்” என்றாள்.

“அத்திம்பேர் சாயங்காலம்தான் வருவாரோ?” என்று பேச்சை மாற்றும் உத்தேசத்துடன் கேட்டான் சீதாராமன்.

“அது போறதும் வரதும் ஒரு நிலையா என்ன? போனா போனதுதான். வந்தா வந்ததுதான்! ஏதாவது நிலையாச் சொல்லிப்புட்டுப் போற வழக்கம்தான் கிடையாதே! பாவம்! உனக்குப் பசிக்கிறாப்லே இருக்கும்! இரு. ஒரு நொடியிலே அடுப்பை மூட்டிச் சமைச்சுப் போட்டுடறேன்” என்று சொல்லிக்கொண்டே சமையல் அறையை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள் பர்வதம்.

சமையல் அறை வாசல்படியைத் தாண்டும்போது எதிர் வீட்டு நளினியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்த விஷயம் ஞாபகம் வந்தது அவளுக்கு. வாசற்படியிலேயே நின்று தன் தம்பியைப் பார்த்துச்

சொன்னாள்: “சீதா! நீ கெட்டிக்காரன் தாண்டா” என்றாள்.

“என்ன?” என்று சிரித்துக்கொண்டே கேட்டான் சீதாராமன்.

“அந்தப் பெண்ணைப்பத்தி மேலே என்னைப் பேச விடாமே ஒரு நொடியிலே பேச்சை மாத்திவிட்டாயே. நீ! இருந்தாலும் நீ கெட்டிக்காரன் தாண்டா!” என்றாள் பர்வதம்.

“பின்னே என்ன பண்றது? யார் அந்தப் பொண்ணுன்னு உங்கிட்ட கேட்ட குத்தத்துக்காக அதுக்கும் எனக்கும் கல்யாணம் பண்ணி வச்சுவிடறதுன்னு ஆரம்பிச்சுடறே நீ” என்று சொல்லிச் சிரித்தான் சீதாராமன்.

“இல்லே; சரியான ஜோடிதான்னு என் மனசிலேயும் பட்டது. அவளும் ரொம்பக் கெட்டிக்காரி தான்; உனக்கேத்த கெட்டிக்காரிதான்” என்றாள் பர்வதம்.

“எனக்கு அசட்டுப் பொண்தான் வேணும். கெட்டிக்காரப் பொண்ணைக் கட்டிண்டு அவஸ்தைப்பட என்னாலே முடியாதம்மா!” என்றான் சீதாராமன்.

அதற்குமேல் பேசிக்கொண்டு நின்றால் சமையல் காரியம் தாமதமாவிடும் என்று பர்வதம் அடுப்பு மூட்டப் போனாள். ஆனால் அவள் அடுப்பு மூட்டியாவதற்குமுன், அவர்கள் வீட்டு வாசல்கதவை யாரோ படபடவென்று அதிகாரத்துடன் தட்டும் சத்தம் கேட்டது. அவளுடைய மூன்றாவது பிள்ளை - ஏழெட்டு வயசுப் பையன் - போய்க் கதவைத் திறந்தான். சீதாராமன் கூடத்தில் ஊஞ்சலிலே உட்கார்ந்திருந்தான். பர்வதத்தம்மாள் கையில் கிரோஸின் சிம்மணியுடன் சமையல் அறை வாசற்படியண்டை நின்றாள்.

தெருவாசலுக்கப்பால் ஏழெட்டுப் போலீஸ்கார்களும், தெருவிலே ஏகமாகக் கும்பலும் நிற்பதைக் கண்டதுமே பர்வதத்தம்மாளுக்குப் பாதிப் பிராணன் போய்விட்டது! கையிலிருந்த சிம்ணி கீழே நழுவி விழுந்து அணைந்தது! “ஐயோ!” என்று கூவ வாயெடுத்தாள்: ஆனால் வாயிலிருந்து சப்தம் ஒன்றும் வெளிவரவில்லை!

## போலீஸ் விசாரணை

சாதாரணமாக என்றுமே விஜயபுரம் அக்கிரகாரத்திலே போலீஸ்காரர்களுக்கு வேலை இருந்தது கிடையாது. தப்பித் தவறி யாராவது போலீஸ்காரன் மேலண்டைக் கோடியிலிருந்த பிள்ளையார் கோயிலைத் தாண்டி அக்கிரகாரத்துக்குள் வந்து விட்டானானால், உள்ளம் பதைக்க அக்கிரகார வாசிகள் எல்லோரும் அவன் மெதுவாக நடந்து அக்கிரகாரத்துக் கீழண்டைக் கோடியிலிருந்த நாரத்தைத் தோட்டத்தைத் தாண்டி அடுத்து உள்ள மேட்டுத் தெருவிற்குள் நிரும்பும் வரையில், அவனையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆமாம், அடுத்து உள்ள மேட்டுத் தெருவிலே போலீஸாருக்குத் தினம் வேலை இருந்துகொண்டுதான் இருக்கும். சில சமயம் மேட்டுத் தெரு போகிற போலீஸ்காரர்கள் குறுக்கு வழி என்று எண்ணிக்கொண்டு அக்கிரகாரத்திற்குள் புகுந்து போவார்கள்.

அதைத் தவிர விஜயபுரத்தின் அக்கிரகாரத்தின் சரித்திரத்திலே, அதற்குள் போலீஸ்காரர்கள் வர, வந்து யாரையும் பயமுறுத்தச் சந்தர்ப்பமே ஏற்பட்டதில்லை.

அக்கிரகார வாசிகள் ரொம்பவும் ஏழ்மைவாய்ப்பட்டவர்கள் தான். அன்றாடம் ஏதோ எப்படியோ வயிறு நிரப்புவதற்கு வேண்டியதைச் சம்பாதித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் தான். சுபாவமாகவே தப்புத் தண்டா செய்து மாட்டிக் கொள்ளக் கூடாது என்கிற உள்ளம் படைத்தவர்கள். அப்படி எதுவும் செய்துவிடவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்த தில்லை. சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தாலும் அங்கிருந்தவர் களுக்குப் போதுமான துணிவும் கிடையாது.

உலகத்தில் மக்களுக்கிடையே எங்கும் உள்ளதுபோல அக்கிரகாரத்து வாசிகளிடையேயும் குரோதமும் அசூயையும், பொறாமையும் இல்லாமல் இல்லை. உள்ளுக்குள்ளேயே புகைந்து கொண்டிருந்தது - அவ்வளவுதான்.

சமூகத்தின் கட்டுப்பாடுகளும், விதிகளும் நிரந்தரமானவை. அசைக்க

முடியாதவை என்கிற கொள்கை படைத்தவர்கள் அவர்கள். வெளியுலகிலே யார் யாரோ எவ்வளவோ துணி கரமான காரியங்களைச் செய்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய காதிலும் விழுந்ததுண்டு. ஆனால் அதெல்லாம் ஏதோ காவியம் படிப்பதுபோல அவர்கள் உள்ளத்தைத் தொடாமல் போய்விட்டது.

அக்கிரகாரத்தின் சரித்திரத்திலேயே இடம்பெறக் கூடிய தான ஒரு சம்பவம் இன்று நடந்துவிட்டது! அக்கிரகாரத்து வாசிகளிலே மிகவும் பயந்தவரும், மிகவும் வைதீகருமான கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் வீட்டு வாசலிலே எட்டுப் போலீஸ்காரர்களும், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் வந்து நின்றார்கள். ஏதோ காரியமாகத்தான் வந்திருக்கிறார்கள் என்று தெருவாசிகளால் ஊகிக்காமல் இருக்க முடியவில்லை. எவ்வளவுதான் சாதுவானாலும், இன்றைய உலக நடப்பும் சமூக அமைப்பும் தெரியாமல் வாழ முடியுமா?

ஆனால் அக்கிரகாரத்துக்கு ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரியும். போலீஸாருடைய அலுவல் என்ன ஆனாலும் அது கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம் அல்ல என்பது நிச்சயம். முதல் காரணம். அவர் ஊரிலில்லை; பக்கத்துக் கிராமத்துக்குத் தன் நிலபுலங்களைக் கவனிப்பதற்காகப் போயிருந்தார். தவிரவும் அவரிடம் போலீஸாருக்கு எந்த அலுவலும் இருப்பது சாத்தியமான காரியமே அல்ல. கிருஷ்ணமூர்த்தி அய்யரின் சம்சாரம் பர்வதத்தம்மாளுடைய சுறுசுறுப்பால் அக்கிரகாரம் பூராவிலுமே அவள் வீட்டிற்கு அவள் தம்பி அன்று காலை வந்திருப்பது தெரிந்திருந்தது. இதுவரையில் தெரிந்து கொள்ளாதவர்களும் இப்போது தெரிந்துகொண்டார்கள். போலீசார் புதுசாக வந்திருந்த ஆசாமியைத் தேடிக்கொண்டு தான் வந்திருந்தார்கள் என்று நம்ப எல்லோருமே தயாராக இருந்தார்கள்.

ஆமாம்: போலீசார் சீதாராமனைத் தேடியே வந்திருந்தார்கள்.

அக்கிரகாரத்துக்குள் போலீசார் நுழைந்தபோது தெருவிலே நடமாட்டமே இல்லை. தெருக்கோடியில் பிள்ளையார் கோயிலுக்கு அடுத்தாற்போல ஒரு நாய் படுத்திருந்தது. ஆமாம். நமக்கு அறிமுகமான அதே பூச்சிதான், ஒரு

வீட்டுத் திண்ணையில் ஒரு சிறு பெண் - பத்து வயதிருக்கும். தூணில் சாய்ந்து கொண்டு, வாய் ஏதோ பாட்டின் அடியை முணு முணுக்க, உட்கார்ந்திருந்தாள். இந்தப் பெண்ணும் நமக்கு அறிமுகமானவள்தான் - நளினிதான் அது. தெருவிலே 'திடுதிப்' என்று பிரவேசித்த போலீஸ்காரர்களைக் கவனிப்பதற்காக நளினி எழுந்து நின்றாள்.

போலீஸ்காரர்கள் நளினி வீட்டிற்கு நேர் எதிரில் வந்து நின்றனர். சப்-இன்ஸ்பெக்டர் - அவர் சப் - இன்ஸ்பெக்டர் தான் என்பது நளினிக்கும் தெரிந்தது - தன் கையிலிருந்த ஒரு கடிதத்தைப் பிரித்துப் படித்தார். பிறகு திரும்பி நாலா பக்கமும் பார்த்தார். நளினி நின்றுகொண்டிருந்தது அவர் கண்களில் பட்டது. எதிர்வீட்டு வாசலிலே மற்றவர்களை நிறுத்திவிட்டு நளினியை நோக்கி வந்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

நளினி வயதுடைய மற்றப் பெண்கள் பயந்திருப் பார்களோ என்னவோ, நளினி பயப்படவில்லை! ஆனால், இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எப்படி நடந்துகொள்வது என்பதை அவள் அறிந்ததில்லை. ஆகவே, எதுவும் பேசாமல், அவராகவே பேசினால் பதில் சொல்லலாம் என்று நின்றாள்.

சப்-இன்ஸ்பெக்டர் அருகில் வந்து நின்றுகொண்டு கேட்டார்: "ஏங் குழந்தை. உம் பேரு என்ன?"

"நளினி."

"உங்கப்பா இருக்காரா ஆத்திலே?"

"ஆபீஸுக்குப் போயிருக்கா" நளினி.

"எந்த ஆபீஸ்லே வேலையாயிருக்கா உங்கப்பா?" என்று கேட்டார் சப் இன்ஸ்பெக்டர்.

"தபாலாபீஸ்லே, எங்கப்பா தந்திக் குமாஸ்தா" என்றாள் நளினி.

"ஓ! விசுவநாதய்யர் பொண்ணா நீ? தேவலையே! கெட்டிக்காரப் பெண்தான். தைரியமா, பயப்படாம பதில் சொல்றயே!" என்று சொல்லிவிட்டு சப்-இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னார்: "எதுத்தாத்திலே இன்னிக்குக் கார்த்தாலை புதுசா

யாரோ .....”

சப்-இன்ஸ்பெக்டர் கேட்டு முடிக்கும் வரையில் காத்திராமல் நளினி தானாகவே சொன்னாள்: “ஆமாம்; சீதாராமன்னு பெயராம். பட்டணத்திலே ஏதோ பாங்கிலே வேலையாக இருக்காராம்... இன்னிக்குக் கார்த்தாலை வந்தார் ” என்றாள்.

“சரி; அதுதான் கேட்டேன். சமத்துப் பொண்ணு நீ!” என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து திரும்ப யத்தனித்தார்.

இதற்குள் உள்ளேயிருந்த சின்னம்மாவின் காதில் நளினி யாருடனோ பேசிக்கொண்டிருப்பது விழுந்துவிட்டது. உள்ளிருந்த படியே, “நளினி! அடி, கம்மனாட்டி! யாரோடே போய் நின்னுண்டு வம்பளத்துண்டிருக்கே!” என்று கடுமையான குரலில் கேட்டுவிட்டு வெளியே வந்தாள். எதிரே போலீஸ் காரர்களையும், தன் வீட்டு வாசலில் சப் - இன்ஸ்பெக்டரையும் கண்டதும் பயந்துவிட்டாள்! மேல்துணியை இழுத்துப் போர்த்திக்கொண்டு கதவுக்கப்பால் ஒண்டிக் கொள்ள முயன்றவளாக, “ஆத்திலே புருஷா யாரும் இல்லேன்னு சொல்லியனுப் பேண்டி நளினி” என்று நளினிக்கு உத்தர விட்டாள்.

சின்னம்மா சொன்னதை நளினி காதில் வாங்கவே யில்லை. சப் - இன்ஸ்பெக்டரை “மாமா” என்று கூப்பிட்டு, “ஏன் மாமா? அவர் என்ன...?” என்று கேட்டாள்.

சப் - இன்ஸ்பெக்டர் பதில் சொல்லாமல் நகர்ந்துவிட யத்தனித்தார்.

நளினி தொடர்ந்து சொன்னாள்: “பார்த்தால் ரொம்ப நல்லவர் மாதிரிதானே இருந்தார்? எதுவும் தப்பான காரியம் செய்தவர் மாதிரி இல்லையே!” என்றாள்.

“பார்வைக்கு நல்லவா மாதிரி இருக்கிறவங்கயெல்லாம் நல்லவாளாகவே இருந்துவிட்டால் இந்த உலகம்...” என்று ஆரம்பித்தார் சப் - இன்ஸ்பெக்டர்.

“இல்லை மாமா! பார்வைக்கு உங்களையும்விட நல்லவர் மாதிரிதான் இருந்தார் ” என்றாள் நளினி.

“போக்கிரிப் பொண்ணு நீ! விசுவநாதய்யரைப் பார்த்தால் சொல்றேன்” என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து போய்விட்டார் சப் - இன்ஸ்பெக்டர்.

இதற்குள் தெருவிலிருந்த பெண்டு பிள்ளைகள், குழந்தை குஞ்சுகள் எல்லோரும் ஏதோ அசாதாரணமான ஒரு காரியம் நடக்கிறது என்று அறிந்துகொண்டு அதைப் பூராவையும் கவனிக்கவேண்டுமென்றே ஆவலுடன் தெருவுக்கு வந்து விட்டார்கள். தெருவோடு அச்சமயம் போக நேர்ந்தவர்கள், என்னவோ, ஏதோ என்று வேடிக்கை பார்க்க நின்று விட்டார்கள். நளினி வீட்டிற்கும் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் வீட்டிற்கும் இடையே பெரிய கும்பல் கூடிவிட்டது. போலீஸ் காரர்கள் ஒன்றிரண்டு பேர் வழிகளை விரட்டியும் கும்பல் கலைவதாக இல்லை.

சப்-இன்ஸ்பெக்டர் திண்ணையிலே கம்பீரமாக அமர்ந்தார். ஒரு போலீஸ்காரனை வீட்டுக் கதவைத் தட்டச் சொன்னார். அவன் படபடவென்று அதிகாரத்துடன் கதவைத் தட்டினான். ஏழெட்டு வயசுப் பையன் ஒருவன் வந்து கதவைத் திறந்தான். உள்ளே கூடத்தில் ஊஞ்சலில் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந் தான். சமையல் அறை வாசற்படியண்டை ஒரு ஸ்திரீ கையில் சிம்னி விளக்குடன் காட்சி அளித்தாள். வெளியே நிற்பவர்களைக் கண்டவுடனே அந்த ஸ்திரீயின் கையிலிருந்த சிம்னி கீழே நழுவி விழுந்து அணைந்தது.

“சீதாராமன் என்பது யார்?” என்று சற்று அதட்டலான குரலிலே போலீஸ்காரன் கேட்டான்.

“நான் தான்” என்று சொல்லிக்கொண்டு ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த வாலிபன் எழுந்து வாசல் பக்கம் வந்தான். அவன் குரல் சற்றே நடுங்கியது; நடை கொஞ்சம் தடு மாறியது. ஆனால் அவன் முகத்தில் கலவரமில்லை. ஏதாவது குற்றம் செய்துவிட்டு மாட்டிக் கொண்டவன் முகத்தில் தோன்றுவது மாதிரியான பீதி எதுவும் அவன் முகத்திலே தோன்றவில்லை.

சப்-இன்ஸ்பெக்டர் எதிரில் போய் நின்றான் சீதாராமன். எதிர்வீட்டு நளினி சொன்னது ஞாபகம் வந்தது சப் - இன்ஸ் பெக்டருக்கு. அவர்

சீதாராமனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தார். அவன் நல்லவன் மாதிரி தான் தோன்றியது. சீதாராமனிடம் சப்-இன்ஸ்பெக்டர் ஆங்கிலத்தில் சொன்னார்: "உங்கள் பாங்கியில் முந்தாநாள் இருபதினாயிரம் களவு போய்விட்டதாகவும், அதுபற்றி உன்னைச் சந்தேகிப்பதாகவும், உன்னை அரெஸ்ட் செய்யச் சொல்லியும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. உன்னை அரெஸ்டு செய்கிறேன். உன் சாமான்களைச் சோதனை செய்யவும் உத்தரவிருக்கிறது" என்றார்.

"இதில் ஏதோ தவறிருக்கிறது" என்று தழுதழுத்த குரலில் சொன்னான் சீதாராமன்.

"இருக்கலாம்: ஆனால் நான் என் கடமையைச் செய்ய வேண்டியவன். நீ குற்றம் செய்யாதது உண்மையானால் தானாகவே விசாரித்துவிட்டு விட்டு விடுவார்கள்" என்றார் சப் - இன்ஸ்பெக்டர்.

வீட்டையும், சீதாராமனின் சாமான்களையும் சோதனை போடச் சொன்னார் சப்-இன்ஸ்பெக்டர். பாங்கியில் கெட்டுப் போனதாகச் சொல்லப்பட்ட இருபதினாயிரம் கிடைக்க வில்லை. சீதாராமனின் பர்ஸில் இருபது ரூபாயும் சில்லரையும் தான் இருந்தது.

"இன்னும் சாப்பிடக்கூட இல்லையே அவன்" என்று அங்கலாய்த்தாள் பர்வதத்தம்மாள்.

"அதைப்பத்திக் கவலைப்படாதே அம்மா. நான் ஹோட்டலில் சாப்பாடு பண்ணி வைத்து விடுகிறேன். இன்றே இவரைப் பட்டணத்துக்கு அனுப்ப உத்தரவாகி யிருக்கிறது. பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு கிளம்பு" என்றார் சப்-இன்ஸ்பெக்டர், சீதாராமனிடம்.

தலையைத் தொங்க விட்டுக்கொண்டே கிளம்பினான் சீதாராமன். அவன் திரும்பித் தன் தமக்கையைக் கூடப் பார்க்கவில்லை.

அவள் கண்களில் நீர் தளும்ப நின்றாள். ஒரு வார்த்தையும் சொல்ல அவனுக்கு வாய் வரவில்லை. ஒரு நொடியில் அவள் சந்தோஷம் பூராவும் பறந்துவிட்டது. அவள் ஸ்தம்பித்து, செயலற்று நின்றாள்!

கூட்டம் எல்லாம் கலைந்து கடைசியில் நளினி வந்து ஆறுதல் சொல்லுகிற

வரையில் பர்வதத்தம்மாளுக்கு சுயப் பிரக்ஞை வரவில்லை.

நளினி சொன்னாள்: “கவலைப்படாதேங்கோ மாமி! அப்படி ஒன்னும் கெடுதலா நேர்ந்துடாது. தானே இன்னிக்கு விட்டுடுவா” என்றாள்.

பர்வதத்தம்மாளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை; கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

இதற்குள் எதிர் வீட்டிலிருந்து சின்னம்மாவின் உரத்த குரல் கேட்டது. “நளினி! அடீ, நளினி! எங்கேடியம்மா தொலைஞ்சு போயிட்டே நீ!” என்று சின்னம்மா உரக்கக் கத்திக்கொண்டிருந்தாள்.

# கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

அன்று மாலை கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வயல் வெளிகளில் தன் அலுவல்களை எல்லாம் பார்த்துக் கொண்டு வீடு திரும்பும்போது அஸ்தமன சமயம் ஆகிவிட்டது. இன்னும் இரண்டொரு நாழிகையில் இருட்டி விடும். அதி காலையில் வீட்டுப் பால் காபி ஒன்றரைச் சேர் சாப்பிட்டு போனதுதான். அதற்குப் பிறகு அவர் ஜலபானம் கூடப் பண்ண வில்லை. வரிந்து கட்டிக்கொண்டு ஆட்களுடன் நின்று வேலை செய்துவிட்டுத் திரும்பினார்.

விஜயபுரம் எல்லையை எட்டுகிறபோது பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்துவிட்டது. அக்கிரகாரத்துக்குள் வருகிற போது, வீடு சேர்ந்ததும் ஹாய்யாக ஸ்நானம் பண்ணி விட்டு, நாலு வாய் சாப்பிட்டுவிட்டு, அக்கடா என்று திண்ணையிலே துணியை விரித்துக் கொண்டு சிறிது நேரம் படுத்திருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டே வந்தார்.

தெருவாசிகள் எல்லாரும் - அதாவது அச்சமயம் அங்கிருந்தவர்கள் எல்லாரும் - தன்னை ஏதோ ஒரு தினுசாகப் பார்ப்பதுபோலப் பட்டது சாஸ்திரிகளுக்கு. முகத்திலே, தலையிலே ஏதாவது வைக்கோல் தூசு தும்பு ஒட்டிக் கொண்டிருக்கிறதோ என்று கைகளால் தடவிப் பார்த்துக் கொண்டார். பின்னர் என்ன?

வீட்டை அடைந்து கதவைத் தட்டினார். எதிர் வீட்டில் தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யர் வீட்டில் - அப்பொழுது தான் நளினி ஒரு சிறு கல் விளக்கை ஏற்றிவாசல் திண்ணைப் பிறையில் கொண்டு வைத்துக்கொண்டிருந்தாள். வாசல் திண்ணையிலே ஒரு சிறு பிறையில் ஒரு சிறு விளக்கை ஏற்றி வைத்துவிட்டால் எவ்வளவோ அலங்காரமாகத்தான் இருக்கிறது. எவ்வளவோ மங்களகரமாகத் தான் இருக்கிறது என்று எண்ணினார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். வானத்திலே நட்சத்திரம் சுடர் விடுவதைப் போல ஒரு சிறு கைவிளக்கு

தெருவுக்கே அலங்காரமாகி விடுகிறதே!

எதிர்வீட்டு நளினி வயசுதான் அவர் பெண் எச்சுமூவுக்கும். ஆனால் வீட்டு வாசலிலே விளக்கு ஏற்றி வைக்கவேண்டும் என்று எச்சுமுக்கு பிறகு சொன்னால் ஒழிய ஞாபகமே வராது. "அஸ்தமிக்கிற சமயம் ஆயிற்றே; வாசலிலே ஜலம் தெளித்துக் கோலமிட்டு ஒரு விளக்கையும் ஏற்றி வைக்கக்கூடாதோ? வீட்டிலே பெரியவள் ஒருத்தி இருந்தாளே! அவள் என்னதான் அப்படிச் செய்து கொண்டிருந்தாளோ! லக்ஷமீகரமான வேளையிலே வாசற் கதவு அடைத்துத் தாளிட்டிருப்பதா? என்ன குடித்தனம்! என்ன பொம்மனாட்டி!" என்று பசியின் வேகத்தால் அதிகரித்த ஆத்திரத்துடன் நினைத்துக் கொண்டார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

வாசற் கதவைச் சற்று ஆத்திரத்துடனேயே தட்டினார்.

அவருடைய பிள்ளை ராஜு - ஏழெட்டு வயசுப் பையன் வந்து கதவைத் திறந்தான். திறந்தவுடனேயே, அன்று நடந்த அசாதாரணமான சம்பவங்களைத் தன் தகப்பனாருக்கு ஒரே மூச்சில் சொல்லிவிட வேண்டும் என்ற ஆவல் துடித்தது அவனுக்கு.

"அப்பா! இன்னிக்கி போலீஸ்காராள்ளாம் நம்மாத்துக்கு வந்தா அப்பா! வந்து.... வந்து..." என்று மேலே எப்படி எந்த வரிசையில் எதைச் சொல்வது என்று அறியாமல் திண்டாடினான்.

சாதுக்கள் நிறைந்த விஜயபுரம் அக்கிரகாரத்திலே சாது என்று சிறப்புப் பெயர் பெற்றவர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். தப்புத் தண்டாவுக்கு வழி மறந்தும் போகாதவர். போலீஸ் காரர்கள் தன் வீட்டுப் பக்கம் வந்திருந்தார்கள் என்று கேட்ட வுடனேயே அவர் வெலவெலத்துப் போய்விட்டார்! தன் மனைவி ஏதோ சொல்ப அளவில், தவலை சொம்பு என்று அடகு வாங்கிக் கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்வதுண்டு என்று அவருக்குத் தெரியும். அது விஷயமாக ஏதாவது தவறு செய்துவிட்டு... தன் பெயரைச் சந்தி சிரிக்க அடித்து விட்டாளோ என்று சந்தேகம் வந்துவிட்டது அவருக்கு. அது ஒன்றுதான் குறைவாக இருந்தது. நிலம் சரியானபடி விளையவில்லை இவ்வருஷம்: வைதிகத் தொழிலும் இப்பொழுதெல்லாம் முன்போல் இல்லை. அதை மதிப்பவர்களே குறைந்து

கொண்டிருந்தார்கள் போல இருந்தது. சரிதான். போலீஸ் காரர்களும் சேர்ந்து கொண்டால் பிழைப்பு நடந்தாற்போலத் தான் என்று எண்ணமிட்டார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

அவர் பையன் ராஜு சொல்லிக் கொண்டிருந்தான்: "பட்டணத்திலேருந்து மாமா வந்தா இன்னிக்காத்தாலை; மத்தியானம் போலீஸ்காரா வந்து மாமாவை அழைச்சுண்டு போயிட்டா" என்றான்.

"மாமா வந்திருந்தானா? ஏண்டி! யாரு சீதாராமனா?" என்று கேட்டார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியார், ஊஞ்சலில் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருந்த தன் மனைவி பர்வதம்மாளை பார்த்து.

பர்வதம் பதில் அளிக்கவில்லை.

"ஏன் அப்பா? நளினி சொல்றா: நாளைக்கு மாமாவை விட்டுபுடுவான்னு விட்டுடுவாளா. அப்பா? இல்லாட்டா மாமாவை ஜெயில்லே போட்டுடுவாளா அப்பா," என்றான்.

ஜெயில் என்ற உடனே சும்மா படுத்திருக்க முடிய வில்லை பர்வதம்மாளுக்கு. விசித்து விசித்துக் கொண்டே எழுந்துவிட்டாள். நாள் பூராவும் அழுது அழுது அவள் கண்களெல்லாம் சிவந்து போயிருந்தன; அன்று பூராவும் சாப்பிடவும் இல்லை - சமைக்க அடுப்பு மூட்டப்போன சமயம் போலீஸ்காரர்கள் வந்துவிட்டார்கள். அன்று அவள் அடுப்பே மூட்டவில்லை. அவள் தலை அலங்கோலமாகப் பரந்து கிடந்தது.

அவளைப் பார்த்தவுடனே திடுக்கிட்டுவிட்டார் கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள். அவர் கர்நாடகப் பேர்வழி. இந்தக் காலத்திய காதல் - தத்துவமெல்லாம் அவருக்குத் தெரியாது. ஆனால், தன்னுடன் கிட்டத்தட்ட இருபது வருஷங்கள் வாழ்ந்து சுகதுக்கங்களைச் சரி அளவாகப் பகிர்ந்து கொண்டு, தன் குழந்தைகளுக்கும் தாயாகிவிட்ட அவள் கஷ்டப்படுவது அவர் மனத்தைப் பாதித்தது.

"என்னடீ நடந்தது? குழந்தை சொல்றது எனக்குப் புரியவில்லையே! நீதான் மனத்தைத் தேத்திண்டு நடந்ததைச் சொல்லு - ஆகவேண்டியதைப் பார்க்கிறேன்" என்று பரிவுடன் சொன்னார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

“எல்லாத்தையும் சமாளிக்க ஒரு பொம்மனாட்டியை விட்டுட்டு நீங்க நாள் பூராவும் எங்கேயாவது தொலைஞ் சுட்டா....” என்று முணுமுணுத்தாள் பர்வத்தம்மாள்.

“என்னடி பண்ணச் சொல்றே? நம்ம பிழைப்பு அப்படி யிருக்கே? தெய்வம் தலையிலே எழுதியிருக்கச்சே நம்ம என்ன பண்றது?” என்றார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். சற்று முன் அவர் குரலில் தொனித்த பரிவு இப்போது இல்லை. அவர் மனைவியின் குற்றச்சாட்டு அந்தப் பரிவை அழித்து விட்டது.

“கொஞ்சம் இடம் கொடுத்து விட்டால் போதுமே இந்தப் பொணங்களுக்கெல்லாம்... ஏதோ நடந்துவிட்டதே, அதைச் சரியாகச் சொல்லி, ஆகவேண்டியதைச் செய்யச் சொல்லணு மேன்னு இல்லையே! உம்; தவிர, நாள் பூராவும் சாப்பிடாமே கொள்ளாமே....” என்று சிந்தித்தார் அவர்.

அவருடைய பத்தினி கொஞ்சம் கொஞ்சமாகத் தட்டுத் தடுமாறிய குரலில் அன்று நடந்த சம்பவங்கள் பூராவையும் சொன்னாள். சீதாராமனைப் போலீஸ்காரர்கள் அன்று மாலை ரயிலிலேயே பட்டணம் அழைத்துப் போய்விட்டதாக நளினி விசாரித்துக்கொண்டு வந்து சொன்னதாகவும் சொன்னாள்.

இடிந்து போனவர்போல் அப்படியே ஊஞ்சலில் உட்கார்ந்துவிட்டார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். சீத்தாராமனை அவருக்கு என்றுமே பிடிக்காது. அவனுடைய அண்ணா - தஞ்சாவூரிலிருந்த ஜெயராமனைத்தான் அவருக்குப் பிடிக்கும். நல்ல யோக்கியன். கனாந்தம் அத்தியயனம் செய்திருந்தான். இந்த சீதாராமன் சிறுவயதிலிருந்தே தறிதலை என்று பெயர் வாங்கினவன்தான். பட்டணத்திலே போய் ஏதோ உத்தி யோகம் தேடிப் பிடித்தான் - அந்த உத்தியோகம் நிலைக்கும் படியான வழியிலே நடந்து கொள்ளக்கூடாதோ? சரி, உத்தியோகத்துக்கு ஹானி வந்ததோடு மட்டுமா போயிற்று? விஜயபுரத்தில் இருந்த அக்காளைத் தேடிக்கொண்டு உறவு கொண்டாடிக்கொண்டு என்றுமில்லாமல் வந்து, வந்த இடத்தில் போலீஸ்காரர்கள்

பிடித்துக்கொண்டு போக நேர்ந்ததை என்ன என்று சொல்வது? அவன் எப்படியாவது தொலைகிறான் என்றால், கூடத் தன்மானம் போய்விட்டதே என்றிருந்தது கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியாருக்கு. அவர் பிறர் கையைப் பார்த்து ஜீவனம் பண்ணுகிறவர்; அதுவும், விஜயபுரம் அக்கிரகாரவாசிகள் முகம் பார்த்துப் பிழைக்க வேண்டியவர். சங்கடமான நிலைமையில் கொண்டு வந்து விட்டுவிட்டானே அந்தப் படுபாவிப் பயல்!

“என்ன இருபதினாயிரம்னா இன்ஸ்பெக்டர் சொன்னார்?” என்று தன் காதில் ஒருதரம் விழுந்ததையே நம்பாதவராகக் கேட்டார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

பர்வதம் பதில் சொல்லவில்லை. அவள் வேறு ஒரு யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அந்த யோசனையின் முடி வாகக் கடைசியில் சொன்னாள்: “இதோ பாருங்கோ! சீதாராமனுக்கு உங்களையும் என்னையும் விட்டா வேறு யாரு கதியிருக்கா? நம்மதான் ஆகவேண்டியதைப் பார்க்கணும். என்ன செய்யணுமோ என்னவோ, தீர விசாரிச்சு…”

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் குறுக்கிட்டார்: “செய்யலாம்! நீயும் அடுப்பை மூட்டிச் சமை, நான் ஸ்நானம் பண்ணி சாப்பிட்டுவிட்டு அப்புறம் எதிராளாத்து விசுவாநதய்யரை என்ன செய்யறதுன்னு கேட்டுண்டு வரேன்.... என்னமோ பார்க்கலாம்” என்றார்.

அந்தமட்டும் தன் கணவன் தன் தம்பிக்கு உதவி செய்ய ஆட்சேபம் சொல்லாமல் ஒத்துக் கொண்டது பற்றிப் பர்வதத் தம்மாளுக்குப் பரம திருப்திதான். எப்படியாவது தம்பியைப் பற்றிச் செய்யவேண்டியதைச் செய்யற சாக்கிலே விஜயபுரம் அக்கிரகாரத்தை விட்டுச் சில நாட்களேனும் எங்கேயாவது போய்விட்டு வந்தால் தேவலை என்று எண்ணினாள் பர்வதம். அன்று காலை சீதாராமன் வந்த பொழுது அவன் எவ்வளவு பெருமையாக அக்கிரகாரத்து ஸ்திரீகள் எல்லோருடனும் பேசினாளோ, அவ்வளவுக்கவ்வளவு இப்போது அவர்கள் கண்களில் படாமல் இரவோடு இரவாகவே கிளம்பிவிட்டால் தேவலைபோல இருந்தது!

சமையல் காரியத்தைக் கவனிக்கப் போனாள்.

ஊஞ்சல் பலகையில் சிந்தனையில் ஆழ்ந்தவராக உட்கார்ந்திருந்த கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு அதிகநேரம் இருப்புக்கொள்ளவில்லை. எழுந்து வாசல் கதவைத்திறந்து  கொண்டு வெளியே திண்ணைக்குப் போனார். எதிர்வீட்டுத் திண்ணையில் விசுவநாதய்யர் உட்கார்ந்திருப்பது அவர் கண்ணில் பட்டது.

# தந்திக் குமாஸ்தா

தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யருக்கு இன்று ஆபீஸிலே வேலை ரொம்பவும் கடுமை. ஊரிலே உள்ள சாவு - கலியாணம். நல்லது - பொல்லாதது. லாப - நஷ்டம் எல்லாத்துக்குமாகச் சேர்த்து அவர் கட்டு கட அடித்துத் தானே யாகவேண்டும்? பிறருடைய சுபச் செய்திகளையும் அசுபச் செய்திகளை தந்தியிலே தட்டித் தட்டி, அதிலே பட்டுக் கொள்ளாமல் இருப்பதற்கான மனப் பக்குவம் பெற்று விட்டவர் அவர். தந்தியடிக்கும் யந்திரத்தைப்போல உணர்ச்சி யற்றவர்தான் அவரும்; வேண்டுமானால் எதிலும் பட்டுக் கொள்ளாத வேதாந்தியைப்போல என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால், பிறர் விஷயங்களிலே வேதாந்தியைப் போலவும். தந்தி யந்திரத்தைப் போலவும் ஆகிவிட்டாரே தவிர, தன் சொந்த விஷயங்களிலும் அப்படி ஆகிவிட்டார் என்று சொல்லி விட முடியாது. சற்றே ஆத்திரமும் கோபமும் அதிகம் உடைய மனிதர் என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்று விஜயபுரம் தபாலாபீஸீலே புதுப் போஸ்டு மாஸ்டர் வந்து வேலை ஒப்புக் கொண்டிருந்தார். புதுப் போஸ்டுமாஸ்டரும் பழைய போஸ்டுமாஸ்டரும் ஒத்துப் பேசிக் கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை - தந்தி யிலாகாவைத்தான் இருவரும் நிண்டி நிண்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அன்று பூராவும், உடனே நடக்க வேண்டிய வேலை கெட்டது என்பது மட்டுமல்ல; நச்சுத் தாங்காமல் விசுவநாதய்யருக்கு வாழ்க்கையிலே உத்சாகம் போய்விட்டதுபோல இருந்தது. பழைய போஸ்டு மாஸ்டர் புதியபோஸ்டு மாஸ்டர் இருவரையுமே மனமார திட்டிக் கொண்டு, மணி ஆறானாலும் வழக்கமாத் தபாலாஸில் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருபவர் அன்று உரிய காலம் ஆனதும் ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காமல் விடுவிடென்று வீடு நோக்கி நடந்துவிட்டார்.

அவர் வீட்டுவாசற்படி ஏறும்போது உள்ளிருந்து சின்னம்மாளின் குரல்

கேட்டது: “நளினி! அடீ நளினி! எங்கேடியம்மா தொலைஞ்சு போயிட்டே நீ?” என்று உரக்கக் கத்திக் கொண்டிருந்தாள் சின்னம்மா.

“பாவம்! அந்தப் பொண்ணைப் போட்டு எப்போ பார்த்தாலும் படுத்திண்டு!” என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே நுழைந்தார் விசுவநாதய்யர்.

நளினி தன் சின்னம்மாளிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தது விசுவநாதய்யர் காதில் விழுந்தது. நின்று கேட்டார். கொஞ்சுதலான குரலில் சற்று மெதுவாகவே நளினி சொல்லிக்கொண்டிருந்தாள்: “நான் எங்கேயும் தொலைஞ்சு போயிடல்லியே சின்னம்மா! கொல்லையிலே கிணத்திலேருந்து ஜலம் இழுத்து அண்டாவை ரொப்பச், சொன்னயே ரொப்பிண்டிருந்தேன்” என்றாள்.

சின்னம்மா எரிந்து விழுந்தாள்; “சரி சரி வாயாடிண்டு நிக்காதே போ! அஸ்தமிக்கப் போறது கொல்லைக் கதவைச் சாத்திப்பிட்டு வாசல்லே விளக்கு ஏத்தி வை, போ! உன்னோடு வாயாடிண்டு நிக்க எனக்குப் போது ஏது?” அவள் குரலில் தொனித்த கடுமை விசுவநாதய்யருக்குக் கோபமூட்டியது. “இந்தா! அவள் ஒண்ணும் வாயாடல்லெ! நீ தான் நாளுக்கு நாள் வாயாட ஆரம்பிக்கிறே; பாவம். அது என்ன பண்ணித்து! நீ கூப்பிடரத்துக்கு முன்னாடி அதுவந்து ஏன்னு கேக்கறது. கேட்பாரில்லையேன்னு விரட்டி விரட்டி அடிக்கறயே நீ! நன்னாருக்கா உனக்கு?” என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார் தன் மனைவியை.

“பொண்ணுக்குப் பரிஞ்சு பேச நீங்களும் ஆரம்பித்து விட்டேளோல்லியோ! அது உருப்பட்டாப்லேதான் போங்கோ!” என்றாள் சின்னம்மா வெடுக்கென்று.

“சித்தே அடக்கமாத்தான் பேசேன்; அப்படிப்பேசினால் உங்கப்பா ஆஸ்தியெல்லாம் போயிடுமோ?” என்றார் விசுவநாதய்யார்.

“எங்கப்பா ஆஸ்தி ஏதாவது சேர்த்து வைத்திருந்தால் இங்கே ஏன் இந்தப் படுகுழியிலே என்னைத் தள்ளியிருக்கப் போறா? தெய்வத்துக்குத்தான் தெரியும்....” என்று சொல்ல வந்ததை முடிக்கக் கூட முடிக்காமல் விசிக்க

ஆரம்பித்து விட்டாள் சின்னம்மாள்.

அவளுக்குப் பக்கபலமாக ராஜூவும் அவள் காலைக் கட்டிக்கொண்டு சற்று உரக்கவே அழ ஆரம்பித்துவிட்டான்.

“ஆபீசிலேதான் அவஸ்தைன்னா. வீட்டுக்கு வந்தால்... ஆபீசிலேயே இருந்துவிட்டால் தேவலைன்னு இருக்கு!” என்று முணுமுணுத்தார் விசுவநாதய்யர். பிறகு “உன்னை என்ன சொல்லிவிட்டேனாம் நான். பெரிசாக? என்னவோ அந்தச் சின்னப் பொண்ணைப் பிரமாதமா கோவிச்சுக்கறயே - கொஞ்சம் பிரியமாகத்தான் அதோட பேசிண்டு இருக்கப் படாதான்னு கேட்டால், என்னவோ ஆத்திரம் பொத்துண்டு வந்துடுத்து - அழ ஆரம்பிச்சுட்டா என்னதான் பண்றது?” என்றார் அதட்டலாகவும், கெஞ்சுதலாகவும்.

விசிப்பதை நிறுத்திவிட்டுப் பதில் எதுவும் சொல்லாமல் நின்றாள் சின்னம்மாள்.

விசுவநாதய்யர் சொன்னார்: ‘ஆபிசிலே இன்னிக்கு வேலைத் தொந்தரவு ரொம்ப ஜாஸ்தி. லேசா மண்டையை இடிக்கிறது. பால் இருந்தால் காபி போட்டுக் கொடு.’

காபி போட்டுக்கொண்டு வர சின்னம்மாள் சமையலறைக்குள் போனதும் விசுவநாதய்யர் சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு கொல்லைப்புறம் போய்க் கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்து தாழ்வாரத்துத் தூணில் சாய்ந்து கொண்டு முற்றத்தில் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு “அப்பாடா!” என்று சாய்ந்தார். வாசல் திண்ணையில் விளக்கேற்றி வைத்துவிட்டு நளினி வந்தாள்.

“அப்பா! இன்னிக்கு எதித்தாத்திலே....” என்று ஆரம்பித்தாள் நளினி.

“இங்கே வா நளினி” என்று விசுவநாதய்யர் அவளைத் தன்னருகில் அழைத்து அருகில் அணைத்தாற்போல உட்கார வைத்துக்கொண்டு தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்தார். அவள் முகமும் கண்ணும்தான் எவ்வளவு அழகா யிருந்தன! அவள் அம்மாவைப் போலவேதான் இருக்கிறாள் இவளும் என்று பெருமையுடன் எண்ணினார்

அவர். தலை வாரிப் பின்னிப் பூ வைத்தால்...?

“ஏம்மா நளினி, காலாகாலத்திலே தலைவாரிப் பின்னிப் பொட்டு இட்டுக்கப்படாதோ நீ!” என்றார் விசுவநாதய்யர்.

‘இனிமேல்தான் அப்பா!’ என்றாள் நளினி. பிறகு அவசரம் அவசரமா அன்று நடந்ததை எல்லாம் சொல்ல முற்பட்டாள்: “எதிராளாத்துக்கு இன்னிக் காத்தாலை பட்டணத்திலேருந்து ஒரு மாமா வந்தா. அந்த மாமாவை ஏதோ பாங்கிலே களவாடிபுட்டார்னு மத்தியானமா போலீஸ்காரா வந்து அழச்சிண்டு போயிட்டா” என்றாள் நளினி.

“யாராத்திலே? கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியாத்திலேயா?”

“இன்னிக்கு ஏதோ போலிஸ் தந்திபோச்சு, கைது செய்தாகிவிட்டது; பட்டிணத்துக்கு இரவு ரெயிலில் கொண்டு வருகிறோம்னு. எதிராளாத்திலே யாரு?...” என்று ஆச்சரியத் துடன் கேட்டார் விசுவநாதய்யர்.

“பர்வதம் மாமிக்குத் தம்பியாம்; பட்டணத்திலே ஏதோ பாங்கியிலே வேலையா யிருக்கிறாராம்” என்றாள் நளினி. சற்று நேரம் கழித்துச் சொன்னாள்; ‘எனக்கென்னவோ அவரை பார்த்தால் திருடியிருக்கப்பட்டவராகத் தோணல்லே!’ என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது சின்னம்மாள் வந்து விட்டாள்.

சின்னம்மாள் டம்ளரில் காபியை விசுவநாதய்யர் பக்கத்தில் வைத்துவிட்டுச் சொன்னாள்: “இன்னி முழுக்க இதான் காரியம் இவளுக்கு! எந்தாத்திலே எந்தக் கரியாப் போறவன் எப்படிப்போனால் இவளுக்கென்ன? ஊர் வம்பை யெல்லாம் விலைக்கு வாங்கிண்டு வராள்; சொன்னாத் தெரியமாட்டேங்கறது. அந்தப் போலீஸ்காரனோடே எல்லாம் சரிக்குச் சமமா வார்த்தையாடிண்டு நிக்கறா; நீங்க கண்டிக் கிறதோ கிடையாது. நான் கண்டிச்சா கோவிச்சுக்க வேறே ஆரம்பிச்சுடறேள்” என்றாள்.

“இல்லே அப்பா! அந்த சப்-இன்ஸ்பெக்டர் வந்து நீ யார் பொண்ணுன்னு என்னைக் கேட்டார்; நான் பதில் சொன்னேன்!” என்றாள் நளினி.

“அது சரி; கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்?...” என்று விசாரித்தார் விசுவநாதய்யர்.

“அவர் ஆத்திலே இல்லவேயில்லை. கார்த்தாலை கிராமத்துக்குள் போனவர் இப்போத்தான் சித்த முன்னாடி நான் வாசல்லே விளக்கேத்திண்டிருக்கச்சே வந்தார்” என்றாள் நளினி.

“ஐயோ பாவம்! மானமான மனுஷன்; ரொம்ப சாது. அவருக்குத்தான் ரொம்பவும் கஷ்டமாயிருக்கும்” என்றார் விசுவநாதய்யர்.

எதிர்வீட்டுக் காரியங்களுக்கு அவர் அப்படிப் பரிவது சின்னம்மாவுக்குப் பிடிக்கவில்லை. “நம்ம கவலை நமக்குத் தலைக்கு மேலே கிடக்கு! அவாத்துக் காரியத்துக்கெல்லாம் நாம் கஷ்டப்படறதுன்னு ஆரம்பிச்சா அவ்வளவுதான் - நம்ம காரியம் எதுவும் நடக்காது” என்றாள்.

“அவாள் ஒத்தாசையும் நமக்கு என்னிக்காவது வேண்டித் தான் இருக்கும்” என்று சொல்லிவிட்டு, காபி டம்ளரைக் காலி பண்ணிவிடாமல் அதில் ஒருவாய் காபியுடன் நளினியிடம் கொடுத்து, “சாப்பிடம்மா” என்றார்.

“.இப்படிச் செல்லம் கொடுத்துக் கொடுத்துத்தான் அது உருப்படாமேப் போயிண்டிருக்கு” என்றாள் சின்னம்மாள்.

விசுவநாதய்யர் பதில் சொல்லவில்லை. எழுந்து வாசல் பக்கம் போனார். நளினியும் டம்ளரில் இருந்த காபியை மடக்கென்று குடித்துவிட்டு அப்பாவுடன் வாசல் திண்ணைக்கு வந்தாள். என்றைக்கும் போலிருந்தால் சின்னம்மாள் நளினியைக் கூப்பிட்டிருப்பாள். ஆனால், ஏனோ இன்றுகூப்பிடத் துணிய வில்லை.

எதிர்வீட்டுக் கதவு சாத்தியிருந்தது.

நளினி ஏதேதோ சொல்லிக்கொண்டே யிருந்தாள். அதில் பாதி விசுவநாதய்யர் காதில் விழவேயில்லை. விழுந்ததில் பாதி அவர் மனசில் உரைக்கவேயில்லை. அவர் ஏதோ ஆபிஸ் ஞாபகத்தில் ஆழ்ந்திருந்தார். நளினி அன்றைக்கு நடந்த அபூர்வ சம்பவத்திலே மனம் லயித்து என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

எதிர்வீட்டுக் கதவைத் திறந்துக்கொண்டு கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வெளியே வந்தார். திண்ணையில் நின்று ஒரு நிமிஷம் தயங்கினார். பிறகு படி இறங்கித் தெருவைக் கடந்து விசுவநாதய்யரை நோக்கி வந்தார்.

“சாஸ்திரிகளா! வாங்கோ, உட்காருங்கோ! ஏதோ இன்னிக்குப் பெரிசா நடந்து போச்சுன்னு கேள்விப்பட்டேன்.... இப்பதான் நளினி சொன்னாள்” என்றார் விசுவநாதய்யர்.

திண்ணையைத் தட்டிவிட்டு உட்கார்ந்தார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். “என்னவோ எங்காவது கண்காணாத இடத்திலே நடந்திருந்தா எனக்கு ஒண்ணும் சிரமம் இருந்திராது. இன்னிக் கின்னு. இந்தக் காரியத்துக்குன்னு அந்தப் பிள்ளையாண்டான் என் கிரகத்தைத் தேடிண்டு வந்திருக்க வேண்டாம்! என்ன பண்றது - என் கிரகசாரம்!” என்றார் சாஸ்திரிகள்.

“என்னவோ, எல்லாம் நல்லபடியா முடியணும்னு ஈசுவரனைப் பிரார்த்திக்க வேண்டியதுதான்; நம்மவேறென்ன பண்ணமுடியும்?” என்றார் விசுவநாதய்யர்.

“அவர் அப்படிப்பட்டவர்னு பார்த்தாத் தெரியல்லை மாமா!” என்றாள் நளினி.

“அவனுக்கு வேறு யாரும் இல்லை; ஏதாவது வழக்காடற தானால் நம்பதான் செய்யணும்னு என் ஆமடையாள் சொல்றா, எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியல்லே; உங்களைக் கேட்டால் தெரியும்னு...”

“எனக்குத்தான் என்ன தெரியும். இதெல்லாம்பற்றி? யாராவது வக்கீலைப் பார்த்து... நான் வேணும்னா சொல்றேன் - நாளைக்குப் பார்க்கலாம். வைத்தியநாதன் தம்பி ஸ்ரீனிவாசன் வந்திருக்கான். அவன் பட்டணத்திலே பெரிய வக்கீல்னு சொல்றா; நாளைக் காலம்பற வாங்கோ; நம்ம ரெண்டு பேருமாகப் பார்த்து என்ன செய்யறதுன்னு விசாரிப்போம்” என்றார் விசுவநாதய்யர்.

“இன்னிப் போதுக்கு இன்னும் சாப்பாடுகூட ஆகல்லே; இனிமேல்தான் போய் ஸ்நானம். சாப்பாடு எல்லாம்” என்றார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

“என்னவோ, நம் இஷ்டப்படியா நடக்கிறது எல்லாம்? போய்ச் சாப்பிடுங்கோ; கார்த்தாலை வாங்கோ. வக்கீலைப் பார்க்கலாம்” என்றார் விசுவநாதய்யர்.

# பட்டணத்து பாங்கி

“பட்டணத்திலுள்ள அநேக பாங்கிகளிலே எது சிறந்தது. எது பணமும், நாணயமும், நாகரீகமும், மரியாதையும் கொண்டது?” என்று யாரையாவது கேட்டால் பதில் சொல்ல வெகுவாகத் தயங்குவார்கள். ஒன்றுக்கொன்று போட்டி போடக் கூடிய பல பாங்கிகள் இருக்கின்றன. ஆனால் எது மிகவும் திறமையற்றது, பாங்கி என்கிற பெயருக்கே லாயக் கற்றது. நாணயமோ, பணமோ இல்லாதது? என்று கேட்டால் யாரும் உடனே பதில் சொல்லிவிடுவார்கள் - தயங்காமல் கொள்ளாமல் உடனே பட்டணத்து - பாங்கிதான் என்று பதில் அளித்துவிடுவார்கள்.

ஆனால் சமீப காலம் வரையில் - அதாவது ஒரு வாரத்துக்கு முந்தி வரையில் - பட்டணத்து பாங்கி என்கிற பெயரே யாருக்கும் தெரியாமல்தான் இருந்தது. ஆனால் இந்த ஒரு வாரத்திலே அது பெயரும் புகழும் பெறக்கூடிய வகையில் பல காரியங்களைச் சாதித்துவிட்டது.

கேவலம் ஒரு இருபதினாயிரம் ரூபாய் திருட்டுப் போனதைச் சமாளித்துக் கொள்ள முடியாமல், பாங்கியை மூடிவிட்டார்கள் என்றால் அதைப் பாங்கி என்று எப்படிச் சொல்வது? இருபது கோடியா, இருபது லக்ஷமா கொள்ளை போனது? இரண்டும் இல்லை; இருபதினாயிரம்! அதைச் சமாளிக்க முடியாமல் பாங்கி முறிந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டவுடனேயே பட்டணம் நகைக்கத் தொடங்கி விட்டது. அந்தப் பாங்கியிலே பணம் போட்டிருந்தவர்கள் சொல்பப் பேர்வழிகள்தான்; அதுவும் மிகவும் சொற்பப் பணம் தான் போட்டிருந்தார்கள். அவர்களுக்கு பணம் போன துக்கம் ஒருபுறம் இருக்க, இந்தப் பாங்கியில் போய்ப் பணம் போட்டோமே என்கிற உணர்ச்சிதான் அதிகமாகத் தலைதூக்கி நின்று நகைக்கத் தூண்டியது.

இட வசதி அதிகம் கிடைக்காத இந்த நாட்களிலே மிகவும் நல்ல இடத்தில், வசதியான பெரிய இடத்தில்தான் பட்டணத்துப் பாங்கி குடியேறியிருந்தது. பெரிய கூடத்தில் பளபளக்கிற தேக்குமரத் தடுப்புக்கு மேலே பித்தளைக் கிராதிகள் கண்ணைப் பறித்தன. இரண்டு சேவகர்கள்

பம்பரம் போலச் சுழன்று கொண்டிருந்தனர்; அவர்கள் சற்றே வெளிச்சமான இடத்துக்கு நடந்தால் போதும் - அவர்கள் டவாலி வில்லைகள் டால் வீசின. நாலைந்து குமாஸ்தாக்கள் ஓயாமல் ஒழியாமல் எப்பொழுதும் பெரிய பெரிய புத்தகங்களைத் தூக்கமாட்டாமல் தூக்கிப்போட்டுப் புரட்டிக்கொண்டிருந்தார்கள். எல்லா பாங்கிங் அலுவல்களும் உண்டு என்று விளம்பரம் செய்வார்களே அது போல, அந்த பாங்கிலும் எல்லா பாங்கிங் அலுவல்களும் உண்டு. அதுமட்டுமல்ல; சின்ன பாங்கிகளில் உள்ளதுபோல் ஒரே ஆசாமி எல்லா அலுவல்களையும் பார்த்துக் கொண்டான் என்றும் இல்லை. ஒவ்வொரு அலுவலுக்கும் ஒவ்வொரு குமாஸ்தா உண்டு. ஒவ்வொரு குமாஸ்தாவும் - சம்பளம் இருபத்தைந்து ரூபாய் என்றாலும் - ஜோராகச் சட்டை போட்டுக்கொண்டு, ஜோராகக் கிராப் சீவிக்கொண்டுதான் வந்து கொண்டிருந்தார்கள். யாராவது தப்பித் தவறி வருகிற மனிதரையும் ஒவ்வொரு ஜன்னலிலும் கால்மணி நேரமாவது காக்க வைக்கிற தோரணையிலும் குறைவில்லை.

இந்த பாங்கியின் மானஜிங் டைரக்டர், ஏஜெண்டு எல்லாம் ஒருவரே. அவர் பெயர் குருஸ்வாமி. பெயருக்குப் பின்னால் நாலைந்து பட்டங்கள் இருந்தன. இந்த பாங்கிக்கு முன்னால் அவர் பல கம்பெனிகள் ஆரம்பித்துத் திவாலாக்கி யிருப்பவர் என்பது பட்டணத்தில் பலபேருக்குத் தெரியாது. ஏனென்றால் குருஸ்வாமி அதற்குமுன் கல்கத்தா, லாகூர் போன்ற வடக்கத்தி இடங்களில் இருந்து வியாபாரம் செய்தவரே தவிர, பட்டணத்தில் அவருக்கு அதிகமாக நட மாட்டம் இருந்ததில்லை; தனி நண்பர்களும் இருந்ததில்லை. குருஸ்வாமியின் பேச்சு வியாபகத்தில், அவர் நடையுடை பாவனைகளில் மயங்கிச் சிலர் இரண்டொரு வருஷங்களுக்கு முன் அவரை வைத்து ஒரு பாங்கி நடத்த ஒப்புக்கொண்டார்கள். வடக்கே நிலைமை தெளியாது, இனி அங்கே சமாளிப்பதற் கில்லை என்று அறிந்துகொண்ட குருஸ்வாமி இந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

ஆரம்பத்தில் நல்லெண்ணத்துடன்தான் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் அந்த நல்லெண்ணம் அதிக காலம் நீடிக்கவில்லை. அவசரத்

தேவைகளுக்குப் பாங்கி, பணத்தைக் கையாட குருஸ்வாமி தயங்கவில்லை. ஒன்றிரண்டு தரம் கையாடிய பிறகு தொழில்முறை சரியாகத் தெரியாத சகோதர அப்பாவி டைரக்டர்கள் கவனியாதது கண்டு, தயக்க மில்லாமலே கையாடவும், அவசியம் இல்லாதபோதும் பணம் எடுக்கவும் தலைப்பட்டார்! ஆயிற்று; பட்டணத்து பாங்கி மூடப்படவேண்டிய சந்தர்ப்பத்தைக் குருஸ்வாமி ஏற்படுத்திக் கொண்டார். தகுதியான சந்தர்ப்பத்தில் தான் மாட்டிக் கொள்ளாதிருப்பதற்கு ஏதாவது யுக்திசெய்துவிட்டு நழுவி விடுவது என்பதுதான் அவருடைய வேலைத் திட்டம்.

விதி குறுக்கிட்டது. அவர் என்ன பண்ணுவார்?

சீதாராமன் - ஆமாம், விஜயபுரம் அக்கிரகாரத்திலிருந்த வைதிக சிரோமணி கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் சம்சாரம் பர்வதத்தம்மாளுடைய சகோதரனான சீதாராமன் - வேலை யில்லாமல் பட்டணத்துக்கு வந்து தெருத் தெருவாகத் திரிந்து கொண்டிருந்தவன். அகஸ்மாத்தாக ஒரு ஹோட்டலில் காபி சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் குருஸ்வாமியைச் சந்தித்தான். பிறகு அவர் பட்டணத்து பாங்கியின் ஏஜெண்டு என்று தெரிந்துகொண்டு சந்தித்தான் நாலைந்து தடவைகள் வெகு மரியாதையாக. பிறகு ஒருநாள் தன் கஷ்ட நிலைமையைச் சொல்லி, தனக்கு அவர் பாங்கியில் வேலை போட்டுத் தர வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டான். குருஸ்வாமிக்கு அவனிடம் ஏதோ பற்றுதல் விழுந்தது; வேலைக்கு எடுத்துக் கொண்டார்.

சீதாராமன் வந்ததனால் என்று சொல்வதற்கில்லை. ஊரெங்கும் பணப் புழக்கம் அதிகமானதன் காரணமாகப் பட்டணத்து பாங்கியிலும் ஓரளவு பணம் புரண்டது. வெகு சீக்கிரமே கடையைக் கட்டிவிட்டுக் கிளம்பிவிடுவது என்று எண்ணியிருந்த குருஸ்வாமி, இன்னும் கொஞ்சம் காத்திருந்தால் நிறையப் பணம் கிடைக்கும்போலிருக்கிறதே என்று எண்ணிக் காத்திருந்தார். அவர் காத்திருந்தது வீண் போகவில்லை. பட்டணத்துப் பாங்கியிலேகூடக் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் பெருகிக்கொண்டிருந்தது.

அவ்வளவு குமாஸ்தாக்களும் இருந்தார்கள் என்று பெயரே தவிர அவர்களையும் மீறி குருஸ்வாமியே பணம் போடுகிறவர்கள், வாங்குகிறவர்கள் எல்லோரையும் கவனித்துக் கொள்வார். அவருக்கு அதிலே ஓர் உண்மையான அக்கறை யிருந்தது! வழக்கம்போல் அப்படிக் கவனித்துக் கொண்டிருக் கையில் ஒருநாள் யாரோ ஒருவன் பாங்கு திறக்கையிலேயே ரொக்கமாக ஒரு பை நிறையப் பணம் கொண்டுவந்து அந்தப் பாங்கியிலே கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்றான்; இருபதினாயிரம் ரூபாய் கொண்டு வந்திருந்தான் அவன், அவன் எதற்காகத் தன் பாங்கியைத் தேடி வரவேண்டும் என்பது குருஸ்வாமிக்குச் சற்று ஆச்சரியமாகவே யிருந்தது. அவன் எதற்காக வந்திருந்தால் என்ன? அவன் எவ்வளவுதான் யுக்திக்காரனானாலும், அவனையும்விட யுக்திக்காரனில்லையா குருஸ்வாமி?

இதைப்பற்றித் தீவிரமாக யோசிக்கத் தொடங்குவதற்கு முன்னரே அன்றுமுதல் ஒரு வாரத்திற்கு லீவு வேண்டும் என்று சீதாராமன் ஒரு விண்ணப்பம் கொண்டு வந்து தந்தான். சீதாராமன் ஒரு வாரம் ஊரில் இருக்கமாட்டான் என்பதுபற்றி குருஸ்வாமிக்குச் சந்தோஷம் என்றே சொல்ல வேண்டும்; லீவு கொடுத்துவிட்டார்.

பாங்கி வேலைகள் வழக்கம்போலவே நடந்தன. அன்று வசூலான பணத்தையெல்லாம் மத்தியானம் மூன்று மணிக்கு வாங்கித் தன் பெட்டியில் வைத்துப் பத்திரமாக இரண்டு பூட்டுக்களையும் பூட்டினார் குருஸ்வாமி. நாலு மணிக்கு ஆபீஸிலுள்ள குமாஸ்தாக்களெல்லோரும் கிளம்பத் தயாராகி விட்டனர். சீதாராமன் மாத்திரம் ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தான்; பழைய வியவகாரங்கள் ஏதாவது எழுத வேண்டியது பாக்கியிருக்கும் என்று எண்ணினார் குருஸ்வாமி.

அவர் காபி சாப்பிட்டுவிட்டு வந்து பார்க்கும் போது சீதாராமனும் போய்விட்டான். அவன் தன் சகோதரி விஜய புரத்தில் இருப்பதாகவும் அங்கு போவதாகவும் எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தான். ஐந்து மணி வரையில் ஏதோ தபாலிருந்து - சொந்தத் தபால் - எழுதி முடித்தார். பிறகு பூட்டிக் கொண்டு வெளியே கிளம்பினார்.

இரவு ஒன்பதுமணி வரையில் அவருக்கு ஒன்றும் சந்தேகம் தட்டவில்லை. ஒன்பது மணிக்குச் சாப்பிட்டுவிட்டுத் துப்பறியும் நாவல் ஒன்றைப் படிக்க ஆரம்பிக்கையில் ஏதோ ஞாபகம் வந்தது. அவர் பாங்கிக்கும் வீட்டுக்கும் அதிக தூரம் இல்லை - நடந்தே போய்விட்டார். வாசல் காப்போன் இன்னும் சாப்பிட்டுவிட்டு வந்து படுக்கவில்லை. கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே போய்ப் பெட்டியை திறந்து பார்த்தார். கட்டு நோட்டுகளையும் காணவில்லை.

சரியாக இருபதினாயிரத்துக்கு நோட்டுக்கள் இருந்தனவே!....

# குருஸ்வாமி மறைந்தார்

இருபதினாயிரத்துக்கு நோட்டுக்களும் ஏதோ சில சில்லரைகளும் இருந்தன. அவற்றில் நோட்டுக்களை மட்டும் காணவில்லை.

சிறிது நேரம் பிரமித்துப்போய் நின்றார் குருஸ்வாமி எப்படிப் போயிருக்கும்? யார் எடுத்திருப்பார்கள்? என்று சிந்திக்க அவருக்கு அதிக நேரம் தேவையாக இல்லை.

சீதாராமன் தான் எடுத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டார், அவர் ஒரு நொடியில், அன்று எல்லாக் குமாஸ் தாக்களும் போன பிறகும் அங்கு வேலை இருக்கிறது என்று தங்கியிருந்தவன் அவன்தான். காவல்காரன்கூட இல்லாத சமயத்தில் குருஸ்வாமியும் காபி சாப்பிடப் போயிருக்கும் போது பாங்கில் தனியாக இருந்தவன் அவன்தான். அவன் முன்பின் கேட்காமல் அன்று - அந்த இருபதினாயிரம் பாங்கில் கட்டப்பட்ட தினத்தன்று அவன் திடீரென்று லீவு கேட்ட தற்குக் காரணம் என்னவாக இருக்கலாம்? வேறு என்ன இருக்கமுடியும்?...

இதற்குள் பாங்குக் காவலாளியும் வந்துவிட்டான். அவனுக்கும் விஷயத்தைத் தெரியப்படுத்திவிட்டு குருஸ்வாமி டெலிபோன் மூலம் போலீஸாருக்குத் தகவல் கொடுத் தனுப்பினார். அரைமணி நேரத்திற்குள் போலீஸார் வந்து விட்டார்கள்.

தன் சந்தேகங்களைத் தெளிவாகவே குருஸ்வாமி போலீஸாருக்குத் தெரிவித்தார். அவர் சீதாராமனைச் சந்தேகித்ததே சரி என்று போலீஸ் அதிகாரிகளுக்குப் பட்டது. விஜயபுரம் போலீஸாருக்கு சீதாராமனின் விலாசத்தைத் தெரிவித்து அவனை உடனே கைது செய்து சென்னைக்குக் கொண்டு வரும்படி உரிய அதிகாரிகளிடம் உத்தரவு வாங்கி அனுப்பிவிட்டுப் போலீஸ்காரர்கள் போய்விட்டார்கள்.

தன்னுடைய முயற்சிகளும் யுக்திகளும் பலிக்காமல் போய்விட்டனவே என்று குருஸ்வாமிக்கு அளவு கிடந்த வருத்தம். சிறிது நேரம் ஆழ்ந்து

யோசித்தபின் சீதாராமனைப் பற்றி அவருக்கேற்பட்டிருந்த சந்தேகம் மறைந்துவிட்டது. சீதாராமன் அப்படிச் செய்திருக்கக் கூடியவனல்ல. யாரோ தன் உத்தேசங்களை அறிந்திருந்தவன்தான் அப்படிச் செய்திருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. இந்த இருபதினாயிரம் போனதை வைத்து அதிகாரிகள் பாங்கிக் கணக்குகளைச் சோதனை போடுவார்கள். குருஸ்வாமியின் பழைய விவரங்க ளெல்லாம் வெளிவந்து விடும். சீதாராமனுடன் அவனும் ஜெயிலுக்குப் போகும்படி நேர்ந்தாலும் நேர்ந்துவிடும்....

இரவு பூராவும் தூங்காமல் யோசனைகள் செய்தார் குருஸ்வாமி.

மறுநாள் காலையில் வழக்கம்போல் பாங்கி திறந்ததும், எல்லா அலுவல்களையும் நேரிலேயே கவனித்தார். சீதா ராமனை மறுநாள்தானே போலீஸார் கொண்டு வருவார்கள் என்று போலீஸைக் கூப்பிட்டு விசாரித்தார். பாங்கி டைரக்டர்களுக்கு இருபதினாயிரம் திருட்டுப்பற்றிச் சொல்லி விட்டு, திருடியவன் பதுங்கிவிடாதிருப்பதற்காக அத்திருட்டை ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். போலீஸுக்கும், பாங்கி ரைடக்டர்களுக்கும் அது நியாயம் என்றே பட்டது. இதற்குள் மணி பன்னிரண்டாகி விட்டது. சாப்பிடப் போனார் குருஸ்வாமி. பிறகு பன்னிரண்டரை மணிக்குத்தான் தலைமைக் குமாஸ்தாவுக்குச் சீட்டுக் கொடுத் தனுப்பினார். தனக்கு உடம்பு சரியாக இல்லை என்றும், மாலையில் பாங்கிக்கு வரவில்லை என்றும், பாங்கி அலுவல்களைத் தலைமைக் குமாஸ்தாவே பார்த்துக் கொள்ளலாம் என்றும் சீட்டு எழுதி அனுப்பினார். அன்று மாலைப் பொழுது வரையில் அவர் செய்ய நினைத்திருந்த ஏற்பாடுகளைச் செய்யப் போதுமான பொழுது இருந்தது.

மாலையில் பாங்கி சாத்தும் வேளையில் மறுபடியும் போலீஸைப் போன்லே கூப்பிட்டு ஏதோ பேசிவிட்டு எல்லாக் கதவுகளையும் சாத்திக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினார் குருஸ்வாமி.

பட்டணத்து பாங்கிக் கட்டிடத்திலிருந்து கடைசித் தடவையாக அவர் வெளிப்பட்டது அதுதான்.

மறுநாள் காலையில் விஜயபுரத்திலிருந்து கொண்டுவரப் பட்ட

சீதாராமனைப் பந்தோபஸ்து செய்துவிட்டுப் போலீஸார் மேலே கேஸ் எடுப்பது எப்படி என்று விசாரிக்க குரு ஸ்வாமியைத் தேடியபோது குருஸ்வாமியைக் காணவில்லை!

அன்று பட்டணத்து பாங்கி பன்னிரண்டு மணிக்குத் தான் திறக்கப்பட்டது. பாங்கிக் குமாஸ்தாக்கள் ஆச்சரியத்துடன் வெளியே நின்றார்கள் - பத்தரைமணி யிலிருந்து, இரண்டு நாட்களுக்குமுன் பாங்கியில் இருபதினாயிரம் கொண்டுவந்து போட்ட அதே ஆசாமி ஒரு ஐந்நூறு ரூபாய் பணம் வாங்க வேண்டும் என்று வந்து, அவனும் பூட்டியிருந்த கதவுக்கு வெளியே, பாங்கிக் குமாஸ்தாக்களுடன் காத்திருந்தான்.

பாங்கி டைரக்டர்களையும் மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு போலீஸார் ஸ்தலத்துக்கு வரும்போது மணி பன்னிரண்டு. குருஸ்வாமியின் வீட்டில் பாங்கிச் சாவிகள் மேஜைமேலே கிடந்தன. அவற்றுடன் வந்து பாங்கிக் கதவுகள் திறக்கப்பட்டன. அன்று அலுவல்கள் எதுவும் நடக்காது என்று கூறிப் போலீஸார் பாங்கிக் குமாஸ்தாக் களையும் டைரக்டர் ஓரிருவரையும் உள்ளே விட்டுவிட்டுக் கதவைச் சாத்தி விட்டார்கள்.

இருபதினாயிரம் போட்டுவிட்டு ஐந்நூறு ரூபாய் வாங்கிப் போக வந்திருந்தவன் வெளியே வராந்தாவில் இரண்டு நிமிஷம் நின்றான். உடனே வக்கீலைக் கேட்க வேண்டியது தான். இருபதினாயிரத்துக்கும் ஆபத்து வந்துவிட்டது என்று அவனுக்குப் புரியச் சிறிது நேரம் பிடித்தது.

பாங்கிப் பணப் பெட்டியில் முதல்நாள் மீதியிருந்த சில்லரையையும் இப்போது காணவில்லை. வழவழவென்று தேய்ந்து போயிருந்த ஒரு விக்டோரியா காலத்துக் காலணா தான் கிடந்தது.

“பணம் இருந்த இடத்தை முழுவதும் காலிபண்ணி விடக் கூடாதே என்று காலணாவைப் போட்டுவிட்டுப் போயிருக் கிறான்” என்றார் பாங்கி டைரக்டர்களில் ஒருவர்.

“நம்ப மானேஜிங் டைரக்டர் நல்லவர் தான்” என்றார் வேறு ஒருவர்.

தன் மேஜைமேல் எல்லோர் கண்ணிலும் படும்படியாக ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தான் குருஸ்வாமி. அதில் அவன் பின்வருமாறு

எழுதியிருந்தான்:

“என்னை நீங்கள் தேடுவதில் லாபம் சிறிதும் இராது. நான் என்னுடையது என்று திட்டம் போட்டிருந்த இருபதினாயிரத்தை அவன் அடித்துப்போனது எனக்குச் சகிக்கவில்லை. அதைத் தேடிக்கொண்டு போயிருக் கிறேன். அந்த இருபதினாயிரத்துடன் சேர்த்து என்னால் பாங்கிக்குச் சேரவேண்டிய தொகை முப்பத்திரண்டா யிரத்து நானூத்துச் சொச்சம்.”

தங்கள்

குருஸ்வாமி,

இவ்வளவையும் கண்ட பிறகு போலீஸ் அதிகாரி கேட்டார்: “விஜயபுரத்திலிருந்து கொண்டு வந்திருக்கிற பையனை என்ன செய்வது? இந்த அயோக்கியர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு அவன்தான் திருடியிருப்பான் என்று அரெஸ்ட் செய்ய உத்தரவு வாங்கினேன்!”

“அவனை விசாரித்து விட்டுவிடுவதுதான் நல்லது” என்றார் டைரக்டர்களில் ஒருவர்.

போலீஸ் லாக்கப்பிலேயிருந்த சீதாராமனைப் பட்டணத்து பாங்கிக்கே அழைத்து வந்தார்கள். போலீஸ் அதிகாரி உரிய தோரணையில் அவனை விசாரித்தார். ஆனால் அவன் தனக்கு அந்த இருபதினாயிரத்தைப் பற்றியோ, குருஸ்வாமியைப் பற்றியோ எதுவும் தெரியாது என்று ஒரேடியடியாகச் சாதித் தான். அவன் சொல்வதை நம்ப மறுக்கப் போதிய சாக்ஷியமும் இல்லை. ஓடிப்போன குருஸ்வாமியே திருடன் என்று தீர்மானிப்பதில் யாருக்கும் எவ்வித ஆக்ஷேபமும் இராது. அதுவும் ருஜுவாகாமல் போகும் வரையில் அப்படியே வைத்துக் கொள்வதே நியாயம் என்றும் பட்டது எல்லோருக்கும்.

சீதாராமனைத் தீர விசாரித்துவிட்டு விடுதலை செய்து விட்டார்கள்.

பாங்கி டைரக்டர்களில் ஒருவர் மற்றவர்களைவிட சிறிது கெட்டிக்காரர். அவர் சீதாராமனைச் சொந்த ஹோதாவில் விசாரித்தார். “குருஸ்வாமி எதற்காக முதல் நாள் உன்பேரில் குற்றம் சாட்டிவிட்டு மறுநாள் மறைந்திருக்க வேண்டும்? பணத்தை அவரே எடுத்திருந்தாரானால் ஏன்

ஒரு நாள் தாமதித்தார்! உடனே அவர் போயிருக்கலாமே!” என்றார்.

பாங்கி டைரக்டராயிற்றே என்று சற்று மரியாதை யாகவே, “எனக்கு எப்படித் தெரியும்? குருஸ்வாமியின் காரியங்களை நான் எப்படிச் சொல்லமுடியும்?” என்றான்.

பிறகு அவன் மனத்திலிருந்த இன்னொரு விஷயத்தை அவன் அந்த பாங்கி டைரக்டரிடம் சற்றுப் பிரத்யேகமாகவே பிரஸ்தாபித்தான். “கையில் பத்துப் பன்னிரண்டு ரூபாய் தான் இருக்கிறது. அடுத்த மாதச் சம்பளத்தில் அட்வான்ஸாக ஏதாவது பணம் தரச் சொன்னால் தேவலை” என்றார்.

கெட்டிக்கார டைரக்டர் சொன்னார்: “அதெப்படி யப்பா முடியும்? அடுத்த மாதம் நம்ப பாங்கி நடக்கிறதா என்கிறதே சந்தேகம் அந்தப் பாவி குருஸ்வாமி எங்கள் தலையிலும் கையை வைத்துவிட்டுப் போய்விட்டானே” என்றார்.

பணம் பெயராது, உத்தியோகமும் போனமாதிரிதான் என்று கண்டு கொண்டவுடனே சீதாராமனின் பாவனையும் மாறிவிட்டது. அந்த டைரக்டர் அவனை வேறு ஏதோ கேள்வி கேட்டவுடனே, “போமையா! சும்மா தொண தொணத் துண்டு” என்று பதில் கூறினான்.

கெட்டிக்கார டைரக்டர் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது.

போலீஸ் அதிகாரியிடம் விடைபெற்றுக் கொண்டு சீதாராமன் வெளியேறினான்.

ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு, மத்தியானம் சினிமா ஒன்றைப் பார்த்துவிட்டு, சினிமாக் கொட்டகையிலிருந்து வெளியேறும் போதுதான் சீதாராமன் அன்றிரவே மீண்டும் விஜயபுரம் போவது என்று தீர்மானித்தான். முதல் நாள் தன் தமக்கை வீட்டில் போலீசார் வந்தது முதல் அவள் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள் என்பது ஞாபகம் வந்தது இவனுக்கு. மிகவும் சாத்வீகமான வைதிகரான அவள் புருஷனுக்கு அவனால் விஜயபுரம் அக்கிரகாரத்தில் மதிப்பே குறைந்திருந்தாலும் குறைந்திருக்கும். அவன் அன்றே விஜய புரம் திரும்பினானானால், ஒன்றுமே இல்லை

விஷயம் - ஏதோ தவறுதலாக நேர்ந்துவிட்டது என்று எல்லோர்க்கும் வெளிப்படையாகத் தெரிந்துவிடும். இதை உத்தேசித்தே விஜயபுரம் போவது என்று தீர்மானித்தான் சீதாராமன்.

அப்பொழுது மணி ஆறு அடித்தது. ரயிலுக்குப் போவதற்கு இன்னும் இரண்டு, இரண்டரை மணி நேரம் இருந்தது. சென்னையில் அவன் செய்ய வேண்டிய காரியங்களுக்குப் போதும் அந்த நேரம். இரண்டொருவரைப் பார்க்க வேண்டி யிருந்தது; இரண்டொரு இடங்களுக்குப் போக வேண்டி யிருந்தது. அவ்வளவையும் முடித்துக் கொண்டு சரியான சமயத்துக்கு ஸ்டேஷனுக்கு வந்துவிட்டான் சீதாராமன்.

ஒரு கத்தை நோட்டுகளிலிருந்து இரண்டு நோட்டுகளை அலட்சியமாக விட்டெறிந்து விஜயபுரத்திற்கு இரண்டாவது வகுப்பு டிக்கட் வாங்கினான் சீதாராமன்.

கும்பலோடு கும்பலாக மறைந்து நின்று இதைக் கவனித்த குருஸ்வாமியை சீதாராமன் பார்க்கவே இல்லை! பார்த்திருந் தாலும் லக்ஷ்யமே செய்திருக்க மாட்டான் அவன்.

# பெரிய வக்கீல்!

விஜயபுரத்துக்குத் தன் அண்ணன் வீட்டுக்கு வந்திருந்த போது ஸ்ரீனிவாசனை எல்லோரும் - அதாவது விஜயபுரத்தில் எல்லோரும் - பெரிய வக்கீல் என்றுதான் எண்ணிக் கொண்டிருந் தார்கள். ஆனால் விஜயபுரத்திலே விசுவரூபம் எடுத்த சீனிவாசன் சென்னைப் பட்டணத்திலே சாதாரண மனிதனையும் விடச் சின்னவனாகத்தான் காட்சியளித்தான்.

விஜயபுரத்திலேயாகட்டும் வேறு இடத்தில்தானா

கட்டும் - அவனுடைய அண்ணன் வைத்தியநாதனுக்கு மதிப்பு ஒரே மாதிரிதான். அவனுக்கு ஒரு மளிகைக் கடையிருந்தது. சுமாரான மளிகைக்கடை - ரொம்பச் சின்னதுமில்லை. மிகப் பெரியதுமில்லை. தினசரி இருபது முப்பது ரூபாய்க்கு வியாபாரம் ஆகும். அதற்குமேல் அதிக வரும்படியுள்ளவன் போல வைத்தியனாதன் வேஷம் போடுவதும் இல்லை. அவனுடைய அந்தஸ்தும் மதிப்பும் விஜயபுரத்திலே எல்லோருக்கும் தெரியும்.

அண்ணனைப் போலவேதான் தம்பியுமிருப்பான் என்று தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யரைப் போலவே விஜயபுரம் அக்கிரகாரவாசிகள் எல்லோரும் எண்ணியதிலே ஆச்சரியம் ஒன்றுமில்லை. “வைத்தியனாதன் தம்பி ஸ்ரீனிவாசன் வந்திருக் கான்; அவன் பட்டணத்திலே பெரிய வக்கீல்னு சொல்றா. நாளைக் காலம்பற வாங்கோ. நம்ப ரெண்டு பேருமாப் போய்ப் பார்த்து என்ன செய்யறதுன்னு விசாரிப்போம்” என்று விசுவநாதய்யர் எதிர்வீட்டுக் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம் சொல்லியபோது மனத்தில் ஸ்ரீனிவாசனைப் பெரிய வக்கீல் என்று நினைத்துதான் சொன்னார்.

இருவரும் போய்ப் பார்த்தபோதும் ஸ்ரீனிவாசன் பெரிய வக்கீல் மாதிரியேதான் பேசினான். அவன் பேச்சை மட்டும் கொண்டு மதிப்பிடுவது என்று வந்துவிட்டால் பட்டணத் திலேயே அவனைவிடப் பெரிய வக்கீல் கிடையாது என்று சொல்லும்படியாக இருக்கும். கட்டுக் கட என்று தந்தி ஆங்கிலம் அறிந்த விசுவநாதய்யருக்கும் ஆங்கிலமே அறியாத வைதிகப்

பிச்சுக் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியாருக்கும் அவன் பேச்சு பிரமிப்பைத் தருவதாகத்தான் இருந்தது. அவர்கள் அர்த்தமே புரிந்து கொள்ள முடியாதபடி உச்சரிக்கக்கூட முடியாதபடி எவ்வளவு வார்த்தைகளை அவன் எவ்வளவு லாகவமாக உச்சரித்தான்! உபயோகித்தான்!

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் மிரண்டு போனதிலே ஆச்சரியம் இல்லை. தன் மனைவியின் தம்பி சீதாராமனிடம் அவருக்கு உள்ளூர நல்ல அபிப்பிராயமே கிடையாது. என்றாலும் அதற்காக அவன் எக்கேடு வேண்டுமானாலும் கெடட்டும் என்று விட்டுவிட்டிருக்கவும் முடியாது அவரால். இயற்கை யிலேயே பிறர் கஷ்டத்தைத் தம்மாலான அளவுக்கு நிவர்த் திக்க வேண்டும் என்கிற ஆசையும் கொள்கையும் உள்ளவர் அவர் தம் உறவுக்கே வந்துவிட்ட ஓர் ஆபத்தை தவிர்க்க முன்வந்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது மட்டுமல்ல. அவர் அப்படித் தாமாக முன் வந்திராவிட்டால் அவருடைய தர்மபத்தினி பர்வதத்தம்மாள் சும்மாவிட மாட்டாள்; அவளுக்கு அந்தத் தம்பியிடம்தான் பிரியம் அதிகம்!

பட்டணத்துப் பெரிய வக்கீலின் பேச்சைக் காலையில் கேட்டு விட்டு வந்த பிறகுதான் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி யாருக்கும் தெரிந்தது - தன் மைத்துனன் எவ்வளவு பெரிய குற்றத்தை - இல்லை குற்றங்களைச் செய்திருக்கிறான் என்பது. பாங்கிலிருந்து இருபதினாயிரம் ரூபாய் திருடி விட்டான் என்று மட்டும் எண்ணியிருந்தார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். வக்கீல் ஸ்ரீனிவாசனின் பேச்சைக் கேட்டை பிறகு சீதாராமனின் குற்றம் பன்மடங்காக நூறு மடங்காகப் பெருகிவிட்டது. வக்கீல் ஸ்ரீனிவாசன் சரமாரியாக வர்ணித்தான் அவன் குற்றங்களை. அவை குற்றங்களாக மட்டுமில்லாமல் ஏதோ சட்ட புஸ்தகத்தின் நம்பர்களாகவும் உருமாறி விசுவரூபம் எடுத்துக் காட்சியளித்தன. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் மனத்திலே. அந்த வார்த்தை மழையிலே திக்குமுக்காடிப் போனார் அவர்.

‘அப்படியானால் ஒன்றும் செய்வதற்கில்லையாக்கும்? ஈசன் விட்ட வழி. என்ன பண்றது?’ என்று எழுந்திருந்து கிளம்பிய கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளை மடக்கி உட்கார வைத்து மீண்டும் பேசினார் வக்கீல். ஈசன் விட்ட வழியல்ல விஜயபுரத்தில் இல்லாவிட்டாலும் சென்னைப்

பட்டிணத்தில் எல்லாமே வக்கீல் சீனிவாசன் விட்ட வழிதான். வேறு வழி கிடையாது என்பது கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் மனசிலே பசுமரத்தாணிபோலப் பதிந்தது. அடாடா! வக்கீல் சீனிவாசன் என்று ஒருவன் இப்பூவுலகில் சென்னை மாநகரில் இருக்கும் போது, பாவம்! புத்திகெட்ட மனிதர்களே. என்ன மடத்தனம் என்று கடைசியில் எண்ணத் தொடங்கிவிட்டார் சாஸ்திரிகள்.

வெகு விநயமாக, விழுந்து நமஸ்காரம் செய்து அபிவாதயே சொல்லாத குறையாக சாஸ்திரிகள் சொன்னார்: “என்னமோ எங்களுக்கு எதுவும் தெரியாது. நீங்களாகப் பார்த்துக் கருணை பண்ணியாகணும். பிள்ளையாண்டானைக் காப்பாற்றிக் கொடுப்பது உங்கள் பொறுப்பு” என்றார்.

வக்கீல் சீனிவாசன் தாழ்மையுடனே சொன்னார். “என்னவோ என்னாலானது செய்கிறேன்.” சிறிது நேரம் யோசித்துவிட்டுப் பிறகு சொன்னார்: வேலைத் தொந்தரவு தாங்காமல் சிலநாள் நிம்மதியாக அண்ணாவோடே இருந்து விட்டுப் போகலாம்னு வந்தேன். வந்த இடத்திலேயும் வேலைத் தொந்தரவு தொடர்ந்து வரது. நம்ம சௌகரியத்தை மட்டும் கவனித்தால் போதுமா? நமக்கு ஏதோ கொஞ்சம் உள்ளது. பொருள் அறிவு எல்லாத்தையும் தான், கடவுள் பரோபகார்த்தமாகத்தானே கொடுத்திருக்கிறார்? மறுபடியும் பட்டணம்போய் நுகத்தடியிலே தலையைக் கொடுக்க வேண்டியது தான். தவிரவும் உங்களைப் போன்றவர்களுக்குச் செய்யாமே வேறு யாருக்குத் தான் செய்யப்போகிறேன்?”

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்குப் புரியவேயில்லை - தன் நன்றியை அந்தப் பெரிய வக்கீலுக்கு எப்படித் தெரிவித்துக் கொள்வது என்று அவர் எழுந்தார்; விசுவநாதய்யரும் எழுந்தார்.

சாஸ்திரிகள் சொன்னார்: - “நான் வரட்டுமா? போய்ப் பட்டணத்துக்குக் கிளம்ப மூட்டை முடிச்செல்லாம் ஏற்பாடு செய்கிறேன், அவளும் வருவாள்...”

வக்கீல் சீனிவாசன் கேட்டார்; “சாயந்திரத்துக்குள்ளே எல்லாம் ஏற்பாடாகி

விடுமா?” என்று.

“எதெல்லாம்?” என்று ஆச்சரியத்துடன் கேட்டார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

சாஸ்திரிகளுடைய அந்தக் கேள்வி சீனிவாசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒன்று அவர் பெரிய அப்பாவியாக இருக்கவேண்டும். அல்லது பணக்காரராக இருக்க வேண்டும் - எதுவாகயிருந்தால் அவருக்கென்ன? இரண்டுமே லாபகர மானதுதான்.

“இன்று சாயங்காலம் கிளம்பினால் நாளைக்காலையில் பட்டணம் போயிடறோமா?” என்றான் சீனிவாசன்.

“ஆமாம்” என்றார் சாஸ்திரிகள். ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என்று.

“உடனே ஏற்பாடு செய்து பெயில் வாங்கலாம். மற்றப்படியும் நடவடிக்கை எல்லாம் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கையிலே ஐந்நூறு ரூபாய் இருந்தால் போதும். மேலே வேண்டுமானால் பிறகு பார்த்துக்கொள்ளலாம்” என்றார் சீனிவாசன்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் மூர்ச்சை போட்டு விழுந்து விடாமல் நிமிர்ந்து நின்றதையே பெரிய ஆச்சரியம் என்று தான் சொல்லவேண்டும். அவர் இதயம் ஐந்நூறு.... ஐந்நூறு.... ஐந்நூறு என்று ஒவ்வொருதரமும் சொல்லிக்கொண்டே அடித்துக்கொண்டது. மூச்சுத் திணற வாய் திறவாமல் நின்றார் அவர்.

அவர் மௌனத்தைத் தனக்குச் சாதகமாக அர்த்தம் செய்து கொண்டான் சீனிவாசன். “வீட்டிலேயும் நன்றாக விசாரி யுங்கள். சீதாராமன் என்னென்ன சொன்னான் என்று விசாரித்துக் கொள்ளுங்கள். முக்கியமாக ஏதாவது அக்காளிடம் கொடுத்துப் பத்திரமாக வைக்கச் சொன்னானா என்று விசாரியுங்கள்” என்றான்.

இதெல்லாம் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் காதிலேயே விழவில்லை. அவர் ஐந்நூறு - ஐந்நூறு - ஐந்நூறு ஜபத்திலேயே ஆழ்ந்திருந்தார்.

சீனிவாசன் மேலும் சொன்னான்: “நாழியாகிறது. நானும் கிளம்புவதாக இருந்தால் அண்ணாவிடம் ஜோலி பேச வேண்டியது நிறைய இருக்கிறது. சாயந்திரம் வாருங்கோ சாஸ்திரிகளே” என்றான்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் விசுவநாதய்யரும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். வழியிலே விசுவ நாதய்யரை விசாரித்தார் சாஸ்திரிகள், “ஐந்நூறு ரூபாயா பிடிக்கும்?” என்று.

விசுவநாதய்யர் ஆறுதல் கூறினார். “அப்படி ஒண்ணும் ஆகாது. இருந்தாலும் ஆபத்து சமயத்துக்குத் தயாராகத்தானே இருக்கணும்? அதுவும் பட்டணத்துக் கரையிலே செலவு கொஞ்சம் ஜாஸ்திதான் ஆகும். ஐந்நூறு வேண்டாம். இருநூறு, முன்னூறு எடுத்துக் கொண்டு போறதுதான் நல்லது” என்றார்.

“இருநூறு முன்னூருக்கு நான் எங்கே போவேன்?” என்கிறார் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

விசுவநாதய்யர் இதற்குப் பதில் எதுவும் சொல்ல வில்லை. தவிரவும் அவர் ஆபீஸ் போக நாழியாகி விட்டது. அவசர அவசரமா சாஸ்திரிகளைப் பிரிந்து வீடு சென்றார்.

விசுவநாதய்யர் வீட்டுக்குள் வந்ததுமே நளினி கேட்டாள்; “ஏன் அப்பா! வக்கீல் என்ன சொன்னார்?”

வழக்கத்துக்கு விரோதமாக விசுவநாதய்யருக்கே நளினி யிடம் கோபம் வந்தது. “போடி கழுதை! போய் இலையைப் போடச் சொல்லு. நாழியாறது. குளிச்சுட்டு வரேன். சாப்பிட்டு விட்டு ஆபீஸ் கிளம்பணும்” என்றார்.

சாப்பிடும்போது விசுவநாதய்யர் தனக்கு ஏன் நளினியிடம் கோபம் வந்தது என்று தனக்குள்ளாகவே விசாரணை செய்து பார்த்துக் கொண்டார். காரணம் எதுவும் புலனாகவில்லை. ஆபீஸுக்குப் போகும்போது நளினியை அருகில் அழைத்து ஒரு வார்த்தை சொல்லாமல் அவள் தலை மயிரை ஒரு தரம் தடவிக் கொடுத்துவிட்டுச் சென்றார் விசுவநாதய்யர்.

எதிர் வீட்டிலே கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும், பர்வ தத்தம்மாளும்

விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஐந்நூறு... ஆயிரம் என்று சாஸ்திரிகள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் பர்வதத்தம்மாளின் கட்சி தான் கடைசியாக வெற்றி பெற்றது. ஆனால் தான் பெற்ற வெற்றி காரணமாகப் பர்வதத்தம்மாள் தன் கழுத்திலிருந்த ஒரே ஆபரணமாகிய இரண்டு வடம் தங்கச் சங்கிலியை எடுத்துக் கொடுத்தாள். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் பல வருஷங்களா அணா அணாவாக மிச்சம் பிடித்துத் தபாலாபீஸ்ல் கட்டி யிருந்த நூற்றிருபதில் நூறு ரூபாயை வாங்கி வந்தார்.

கையில் முந்நூறு ரூபாய் சில்லரையுடன் பட்டணத்துக்குக் கிளம்பினார்கள். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும், பர்வதத் தம்மாளும், பட்டணத்துப் பெரிய வக்கீல் சீனிவாசனும்.

விஜயபுரம் ரயில்வே ஸ்டேஷனில் ஸ்டேஷன் குமாஸ்தாக்களில் சிலர் தன்னைப்பற்றி பேசிக்கொண்டிருந்தது ஸ்ரீனிவாசனுக்குத் தெரியாது. தெரிந்திருந்தாலும் அவன் லக்ஷ்யம் செய்திருக்கமாட்டான். அவனைப் போலப் பெரிய வக்கீல்கள் இதை எல்லாம் லக்ஷ்யம் செய்தால் கட்டுமா?

ஒரு டிக்கட் குமாஸ்தா மற்றவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்; “மாயவரம் டிக்கெட்டைக் கொடுத்து விட்டு விஜயபுரத்திலே இறங்கினவனை நம்ம வைத்திநாதன் தம்பியாச்சே என்று கவனிக்காததுபோல இருந்தோம். இப்போ என்னடான்னா, சிகரெட்டும் கையுமாவந்து ஸெகண்டுகிளாஸ் டிக்கெட்டு வாங்கி வண்டியிலே ஏறி உட்கார்ந்துக்கறான் பெரிய மனுஷன்... என்ன சொல்றது?” என்றான்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் அவர் மனைவியும் மூன்றாவது வகுப்பிலேதான் பிரயாணம் செய்தார்கள்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கோ அவர் மனைவிக்கோ ஸ்ரீனிவாசனுக்கோ தெரியாது - அதே இரவு எழும்பூரில் விஜயபுரத்துக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு சீதாராமன் கிளம்பிக் கொண்டிருந்தான் என்பது. அவர்கள் ஏறியிருந்த வண்டி பட்டணத்திலிருந்து வந்த வண்டியைத் திண்டிவனத்தில் சந்தித்தது; ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க வில்லை!

# விஜயபுரத்தில்

“நளினி! அடி நளினி! எங்கேயடிம்மா தொலைஞ்சு போயிட்டே!” என்று சமையல் அறையிலிருந்தபடியே குரல் கொடுத்தாள் சின்னம்மா.

“ஏன் சின்னம்மா! இதோ இருக்கேனே. முதல் தடவை நீ கூப்பிட்டதே காது கேட்டது. ஏன் இன்னும் கேட்டுண்டே உள்ளே வரத்துக்குள்ளே எட்டுத் தரம் கூப்பிட்டுடறயே!” என்று கூறிக்கொண்டே. அந்தக் கோபத்திலும் தன் விளை யாட்டுத் தனத்தை மறக்காமல், குதித்துக் குதித்துக் கொண்டே உள்ளே வந்தாள் நளினி.

“கெட்ட கேட்டுக்கு வாய்வேறே கிழியறது! திண்ணை யிலே நின்னுண்டு தெருவோட போற தடியனை எல்லாம் பார்த்துண்டு... கல்யாணம் பண்ணிக் குடியும் குடித்தனமுமா நாலு பிள்ளை பெத்தெடுக்க வயசாச்சு!” என்றாள் சின்னம்மா.

“நாலு பிள்ளையா?” என்று கேட்டுவிட்டுக் கலகல வென்று சிரித்தாள் நளினி.

அவள் சிரித்தது சின்னம்மாவுக்கு அதிக ஆத்திரத்தை ஊட்டியது. “வர வர நன்னாத்தானிருக்கு உன் காரியம் எல்லாம்! சொன்னா சித்தி படுத்தறா அப்படீம்பா ஊரெல்லாம். ஒங்கப்பாவுக்கு வேறே பயந்துண்டு கிடக்கவேண்டியிருக்கு!” என்றாள்.

இதைக் கேட்டுக்கொண்டே தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யர் உள்ளே வந்துவிட்டார்: “பாவம், அந்தப் பொண்ணைப்போட்டு ஏன் சதாப் படுத்திண்டே இருக்கே! தாயில்லாப் பொண்ன்னு கொஞ்சம் கரிசனமாகத்தான் இரேன்” என்றார்.

“அதெல்லாம் சரி; தாயிருக்கிற பிள்ளை பசியாலே துடித்து வாடறது கேப்பாரில்லை. அதுக்குச் சாதம் பிசைஞ்சு வைச்சு அரைமணியா உலர்ந்து போறது. சாதத்தை ஊட்டுடின்னு கூப்பிட்டுச் சொன்னால் நான் பொல்லாதவள்; அவள் தாயில்லாப் பெண்...” என்றாள் சின்னம்மா.

“ஏண்டியம்மா நளினி! காலாகாலத்திலே அந்தக் குழந்தைக்கு வேண்டியதைச் செய்துவிட்டு அப்புறம் ஏதாவது கூத்தடிக்கப்படாதா?” என்றார் விசுவநாதய்யர்.

“இல்லேப்பா; மளிகைக்கடை வைத்தா மாமா பிள்ளை ராமு வந்தான். அவங்கிட்டே அவன் சித்தப்பாவைப்பத்தி விசாரிச்சுண்டிருந்தேன்....” என்றாள் நளினி.

“உம்....” என்றார் விசுவநாதய்யர்.

“பத்து வயசு ஆறதுக்குள்ளே எத்தனை ஊர் வம்படி அம்மா உனக்கு!” என்றாள் சின்னம்மாள்.

“ராமு சொன்னான் - அவன் அம்மா சொல்லிண்டிருக் கானு. இந்தக் கட்டுப்பெட்டியும் அந்த அசட்டுப் பொம்மனாட்டியுமா அந்த வக்கீலை நம்பிப் பணத்தை எடுத்துண்டு பட்டணத்துக்குப் போயிருக்காளே, என்ன ஆகுமோன்னு சொன்னாளாம்” என்றாள் நளினி.

“வைத்தியநாதய்யர் என்ன சொன்னாராம்?” என்று கேட்டார் விசுவநாதய்யர்.

“வைத்தா மாமா சொன்னாராம்: ‘கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அப்படி ஒண்ணும் ஏமாந்து பணத்தை விட்டு விடமாட்டார். கெட்டிக்காரர்தான்’ அப்படின்னாராம். “உங்க தம்பி சாமர்த்தியம் உங்களுக்கே தெரியாது.” என்றாளாம் அவர் மனைவி. “என்னத்தை பண்றது. ஸ்ரீனிவாசனை எனக்குக் கூடத்தான் பிடிக்கவில்லை. ஆனால், தம்பியாச்சே; எங்காதுக்கு வராதடா”ன்னு எப்படி மனந் துணிஞ்சு சொல்றது? அப்படின்னாராம் வைத்தா மாமா, அவர் மனைவி பதில் சொன்னாளாம். “இந்தக் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், அவர் பெண்டாட்டி; அவர் மச்சினன் இவா விஷயமா உங்க தம்பியாலே சிவனேன்னு இருக்கிற நம்மபேரு சந்தி சிரிக்கப் போகிறது” என்றாளாம். மற்றதை எல்லாம் கேக்கறதுக் குள்ளே சின்னம்மா கூப்பிட்டா - “வந்துட்டேன்” என்றாள் நளினி.

“உனக்கு அக்கிரகாரத்திலே ‘நியூஸ் பேப்பர்’னு நல்ல பேர் தாண்டி வச்சிருக்கா” என்றாள் சின்னம்மா சிரித்துக் கொண்டே.

“ராமு எங்கே இப்போ?” என்று விசாரித்தார் விசுவநாதய்யர். மற்ற விஷயங்களையும் அவனைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று எண்ணினார் அவர்.

நளினி சொன்னாள்: “நீ கேட்டால் அவன் ஒண்ணும் சொல்லவே மாட்டான். எங்கிட்ட சொல்றான்னா உங்கிட்டேயும் சொல்வானா என்ன? தவிர, மேட்டுத் தெருவிலே குத்துப் பம்பரம் ஆடப் போயிட்டான்” என்றாள். “இனிமே சாயந்தரம் பார்த்தாத்தான் அவனைப் பாக்கியை விசாரிக்கலாம்” என்று வருத்தத்துடன் சொன்னாள் நளினி.

பிறகு குதித்துக்கொண்டே சமையலறைக்குள் போய் அழ ஆரம்பித்துக் கொண்டிருந்த ராஜுவை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு, இடதுகையில் சாதம் பிசைந்து வைத் திருந்த வெள்ளிப் பேலாவை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். “அம்மு சாப்பிடறயாடா?” என்று தன் இடுப் பிலிருந்த ராஜுவைக் கேட்டுக்கொண்டே, கூடத்தில் இருந்த சின்னம்மாவை லக்ஷ்யமே செய்யாமல் மீண்டும் வாசல் பக்கம் போய்விட்டாள்.

“நன்னாருக்குடி - கேட்பாரில்லே! இந்தப் பெண் அடிக்கிறகூத்து?” என்று முணுமுணுத்தாள் சின்னம்மா.

“கெட்டிக்காரக் குட்டி! ஊரிலே எத்தனை அசடும் அசமஞ்சமும் இருக்கு! அவாளை எல்லாம் போலவா இருக்கா நம்ம நளினி?” என்று பெருமையுடனேயே சொன்னார் விசுவநாதய்யர்.

இதை மறுத்துச் சொல்லச் சின்னம்மாவாலும் முடியாது. அவள் சொன்னாள்; “இருந்தாலும் அடங்காப் பிடாரியாக, வம்பு அளக்கரவளாக இருக்கப்படாது!”

“தானே சரியாகப் போறது, சின்னப் பெண் தானே!” என்றார் விசுவநாதய்யர்.

“நாளைக்குக் கல்யாணம் பண்ணிண்டு ஒத்தராத்திலே. போய் அடங்கி நடக்கத் தெரிஞ்சுக்க வேண்டாமா?” என்றாள் சின்னம்மா.

“ஏதோ நம்ம நளினியைப் பிரியமா வச்சுக்கிறவனாகத் தான் ஒருத்தன்

வருவான்” என்றார் விசுவநாதய்யர்.

“அது எப்படியானாலும் சரி. எங்கேயாவது இளையாளாக மாத்திரம் கொடுத்துடாதேங்கோ! எவ்வளவு பிரியமாக இருந்தாலும் சரிதான். மூத்தாள் குழந்தைகளைப் படுத்தறான்னு ஊரிலே அபவாதம் சொல்லிண்டுதான் இருப்பா” என்றாள் சின்னம்மா.

விசுவநாதய்யருக்கும் கோபம் வந்தது. ஆனால் பேச்சை வளர்த்திக் கோபத்தையும் வளர விடுவானேன் என்று பேச்சை நிறுத்துகிற சாக்கில் சொன்னார்: “சரி சரி வம்பளந்துண்டு நிக்க எனக்குப் பொழுதில்லை. வெந்நீர் எடுத்து வை; ஸ்நானம் பண்ணிவிட்டு ஆபீசுக்குக் கிளம்பணும்.”

இடுப்பில் குழந்தையுடன் வாசல் திண்ணைக்குச் சென்ற நளினி, வழக்கம் போலச் சாப்பிடமாட்டேன் என்று பிடி வாதம் பிடித்த குழந்தையிடம் பயமுறுத்தலாகவும் வேடிக்கை யாகவும் “பூச்சி! பூச்சி!” என்று கூப்பிட்டாள்.

“ச்சி... ச்சி....” என்று மழலை பேசியது குழந்தை.

“சாப்பிடறயா! அம்முவை எல்லாம் பூச்சிக்குப் போட்டுடட்டுமா?” என்றாள் நளினி.

“ச்சி... ஓடு” என்றது குழந்தை.

வாலை ஆட்டிக்கொண்டு நாலு கால்ப் பாய்ச்சலாக அங்கு ஓடிவந்த பூச்சிக்கு ‘அம்மு’ நிறையவே கிடைத்தது. பருப்பும் நெய்யும் விட்டுப் பிசைந்த சோற்றைத் தினம் சாப்பிட்டு அந்தப் பூச்சி கொழு கொழுவென்றுதான் இருந்தது. அதன் வால் பிய்ந்துவிடும்போல ஆடிக்கொண்டிருந்தது.

பூச்சிக்குக் கண்டு மிஞ்சிய சாதத்தைக் குழந்தைக்கு ஊட்டி விட்டு வெள்ளிப் பேலா காலியானதும் உள்ளே போக நளினி யோசனை செய்த சமயத்திலே அக்கிரகாரத்து பிள்ளையார் கோவிலைத் தாண்டிக்கொண்டு ஒரு குதிரை வண்டி வந்தது. விஜயபுரத்துக்குப் பக்கத்திலே வெள்ளைக் குதிரை, அதுவும் அந்த மாதிரி வெள்ளைக் குதிரைபூட்டிய வண்டி அது ஒன்று தான் உண்டு. சாதாரணமாக அக்கிர காரத்திற்கு வரும் யாரும்

அந்த வண்டியை அமர்த்திக் கொண்டு வருவதில்லை. யாராவது மைனர்ப் பிள்ளைமார்களோ, உல்லாச புருஷர்களோ அல்லது பட்டணத்துப் பெரிய வக்கீல் ஸ்ரீனிவாசனைப்போலப் பிறர் செலவில் பிரயாணம் செய்கிறவர்களோதான் அந்த வண்டியில் ஏறுவார்கள். அந்த வண்டிக்காரன், தன் வண்டியின் மதிப்புப் பூராவையும் உணர்ந்தவன். சற்று அதிகமாகவேதான் கூலி கேட்பான்.

அந்தக் குதிரை வண்டி அக்கிரகாரத்துக்குத் திரும்பி வருவதைக் கண்ட நளினி, இடுப்பில் வயிறு நிறைந்த குழந்தையுடன், கையில் காலி வெள்ளிப் பேலாவுடனும் “அதோ பார், குதிரை வண்டி” என்று குழந்தையிடம் சொல்லி விட்டுத் தானே குதிரை வண்டியைப் பார்த்துக்கொண்டு நின்றாள். இரண்டு நாள்களுக்கு முன் ஒரு குதிரை வண்டி அதேமாதிரி வந்து கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வீட்டு வாசலில் நின்றதும், அதிலிருந்து “பட்டணத்து மாமா?” என்று தான் பெயர் சூட்டிய வாலிபன் இறங்கியதும், அதற்குப் பிறகு நடந்த சம்பவங்களும் ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகம் வந்தன நளினிக்கு.

இந்தக் குதிரை வண்டியும் நேரே வந்து நளினியின் வீட்டிற்கெதிரேதான் நின்றது! அதே வாலிபன்தான் அதிலிருந்து இறங்கினான். இறங்கிய சீதாராமன் தன் தமக்கையின் வீட்டைப் பார்க்குமுன் நளினி வீட்டைத்தான் பார்த்தான். நளினி இடுப்பில் குழந்தையுடன் இருப்பதைப் பார்த்தான். போன தடவையும் விஜயபுரம் அக்கிரகாரத்தில் இவளைத் தான் முதலில் பார்த்தேன். இப்பொழுது இவளையேதான். பார்க்கிறேன்!” என்று சொல்லிக் கொண்டே திரும்பித் தன் தமக்கையின் வீட்டுப் பக்கம் காலடி எடுத்து வைத்தான். வீடு பூட்டியிருந்தது அவன் கண்ணில் பட்டது.

திரும்பி நளினியின் வீட்டுப் பக்கம் வந்து, “அவாள்ளாம் எங்கே?” என்றான்.

“ஊரிலில்லை” என்று முதலில் சுருக்கமாய்ப் பதில் அளித்தாள் நளினி. பிறகு அது போதாதென்று எண்ணிய வளாக விவரமாகச் சொன்னாள். “உங்க கேஸை நடத்தப் பட்டணத்துக்குப் போயிருக்கா” என்றாள்.

“கேஸா! என்ன? கேஸா?” என்றான் சீதாராமன் பிறகு, “அட, பரமசிவா!”

என்றான்.

“உங்க அக்காதான்....” என்று சொல்ல ஆரம்பித்தாள் நளினி.

“அது சரி; உங்கப்பா இருந்தாக் கூப்பிடு” என்றான் சீதாராமன்.

தன் தகப்பனாரிடம் விஷயத்தைச் சொல்ல உள்ளே போனாள் நளினி. சொல்லிவிட்டு இரண்டே நிமிஷத்தில் வெளியே வந்தாள். “பெட்டி படுக்கையைக் கொண்டு வந்து இங்கே வைக்கச் சொன்னா. உங்களை உள்ளே வரச் சொன்னா” என்று சீதாராமனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

பெட்டி படுக்கையை உள்ளே கொண்டு வந்து வைத்து விட்டுக் கூலியை வாங்கிக்கொண்டு வண்டிக்காரன் போய் விட்டான். விசுவநாதய்யரும் சீதாராமனும் உள்ளே முன் கூடத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப் பங்களில் நளினி சாதாரணமாக வெளியே வந்திருக்க மாட்டாள். ஆனால், என்னவோ தெரியவில்லை - இடுப் பிலிருந்த குழந்தையைக் கூடக் கீழே விடாமல் வெள்ளிப் பேலாவை மட்டும் சமையல் அறையில் வைத்து விட்டு மீண்டும் திண்ணைக்கு நகர்ந்தாள்.

வாசல் திண்ணையில் ஒரு புது மனிதன் உட்கார்ந் திருப்பதைக் கவனித்தாள்.

“யாரு மாமா?” என்று விசாரித்தாள் நளினி.

“சீதாராமன் இங்கேதான் இருக்கான்?” என்று விசாரித் தான் புது மனிதன்.

“ஆமாம், நீங்க யாரு?” என்று விடாமல் கேட்டாள் நளினி.

“என் பெயர் குருஸ்வாமி” என்றார் வந்தவர்.

“நீங்க வந்திருக்கிறதாகப் பட்டணத்து மாமா கிட்டச் சொல்லட்டுமா?” என்றாள் நளினி.

“வேண்டாம். தானே வருவான். பத்து நிமிஷம் கழித்துப் பார்க்கிறேன்” என்றார் குருஸ்வாமி.

இவ்வளவு நேரம் நளினியின் இடுப்பிலே சும்மா இருந்த குழந்தை ராஜு குருஸ்வாமியைப் பார்த்துக் கையையும் காலையும் வீசினான்.

“ஓடா... போடா....” என்றான் ராஜு.

குருஸ்வாமி சிரித்தார்.

நளினிக்கு ஆச்சரியமாக இருந்தது. குழந்தை ராஜுவுக்கு அந்த குருஸ்வாமியைக் கண்டால் பிடிக்கவில்லை. இத்தனைக்கும் அவர் சும்மா பேசாமல்தான் உட்கார்ந் திருந்தார்.

# சீதாராமனும் குருஸ்வாமியும்

உள்ளே முன் கூடத்தில் உட்கார்ந்து பேசத் தொடங்கிய சீதாராமனுக்கும் விசுவநாதய்யருக்கும் இடையே பேசுவதற்கு அதிக விஷயம் இல்லாததில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

புதுசாக சீதாராமனை அன்றுதான் சந்தித்த விசுவநாதய்யர் முக்கியமான பல விஷயங்களைப் பற்றி எதுவும் பேச முடிய வில்லை.

சீதாராமன் சொன்னான்: “தப்பாக ஏதோ அரெஸ்டு பண்ணிக்கொண்டு போய்விட்டார்கள். சென்னை சேர்ந்ததுமே என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுவித்து விட்டார்கள்.”

தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். “என்னவோ எல்லாம் நல்லபடியாக முடிந்தது” “கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் அவர் சம்சாரமும் நேற்றுத் தான் கிளம்பினார்கள். பாவம்! வீண் செலவு” என்றார் சட்டென்று இப்படிச் சொன்னது தவறோ என்று அவருக்கே தோன்றியது. “நீங்கள் விடுவிக்கப்பட்டது பற்றி அவர்கள் ரொம்பவும் சந்தோஷப் படுவார்கள்” என்றார்.

“ஆமாம்: அக்காதான் என்னைப் பற்றி ரொம்பவும் கவலைப் பட்டிருப்பாள்” என்றான் சீதாராமன்.

“ஆமாம் ஆமாம்” என்று சொல்லித் தலையை ஆட்டினார் விசுவநாதய்யர்.

“அக்காவுக்கு எப்பொழுதுமே என்னிடம்தான் பிரியம் ஜாஸ்தி. என்னைத்தான் அவள் பிள்ளைபோல வைத்து வளர்த்தா” என்றான் சீதாராமன்.

“நேத்திக்கித்தான் கிளம்பிப் போனார்கள்” என்றார் விசுவநாதய்யர். மறுபடியும், வேறு என்ன சொல்வது என்று அவருக்குத் தெரியவில்லை.

“இன்றே தந்தி அடிக்கிறேன். இன்றே புறப்பட்டு நாளைக்கு வந்துவிடலாம்” என்றான் சீதாராமன்.

“ஆமாம், அதுதான் நல்லது; நம்ம வைத்தா தம்பியோடு கூடத்தான் போயிருக்கா, விலாசம் விசாரிச்சு நானே ஆபீஸ் போனதும் தந்தி அடிச்சுடறேன்” என்றார் விசுவநாதய்யர்.

“உடனே புறப்பட்டு வந்துவிடச் சொல்லி அடியுங்கோ” என்றான் சீதாராமன்.

இவ்வளவு உரிமை கொண்டாடிக் கொண்டு அவருடன் பேசிக் கொண்டிருப்பது தவறு என்று பட்டது சீதாராமனுக்கு. அவர் யார்? தன் அக்காவின் வீட்டுக்கு எதிர் வீட்டில் வசிப்பவர் என்பதனால் அவருடன் உறவாட அவனுக்கு ஏற்பட்டு விடுமா என்ன? தவிர, திருடியதாகக் குற்றம் சாட்டப் பட்டு ஜெயிலுக்குப் போனவன் எப்படிப் பட்டவனோ என்று அவர் ஆச்சரியப்படாமல் இருப்பாரா? இந்த மட்டும் உட்கார வைத்துப் பேசினாரே. அதுவே பெரிசு என்று எண்ணினான் சீதாராமன்.

எழுந்தான்: “நான் போய் வரட்டுமா?” என்றான்.

விசுவநாதய்யரும் எழுந்தார். “எங்கே போகப் போறேள்! நாளைக் காலையிலே அவாள் வந்துடறா. அதுவரையில் இங்கேயே தங்கலாமே!” என்றார்.

“என்னால் உங்களுக்கு அசௌகரியம்” என்றான் சீதாராமன்.

“அசௌகரியம் என்ன? ஒன்றுமில்லை; ஒருநாள் நீங்கள் இங்கே தங்கினதால் எனக்கு ஒன்றும் அப்படி அசௌகரியம் ஏற்பட்டு விடாது. இங்கேயே இருக்கலாம்” என்றார் விசுவநாதய்யர்.

“முன்னே பின்னே தெரியாதவனிடம் நீங்க ரொம்ப ஆதரவா இருக்கேள்” என்றான் சீதாராமன்.

“அப்படி ஒண்ணும் இல்லே. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் எனக்கு ரொம்பவும் வேண்டியவர். அவர் சம்சாரமும் எங்காத்துக்கு ரொம்பவும் சிநேகிதம்தான். சட்டையைக் கழட்டி விட்டு ஸ்நானம் பண்ணுங்கோ. இரண்டாங் கட்டிலே வெந்நீர் இருக்கு. நான் ஆபீஸுக்குப் போய்ப் பதினோரு மணிக்கு வரேன். அப்புறம் சாப்பிடலாம்” என்றார் விசுவ நாதய்யர்.

“நளினி! நளினி!” என்று கூப்பிட்டார்.

இடுப்பில் ராஜுவுடன் நளினி உள்ளே வந்ததும் அவளிடம் சொன்னார்: “இந்த மாமாவுக்கும் குளிக்க வெந்நீர் எடுத்து வை. சின்னம்மா கிட்டேச் சொல்லு - இவரும் இங்கே சாப்பிடுவார்னு.”

நளினி சொன்னாள்: “சரி: ஆனால் இந்த பட்டணத்து மாமாவைத் தேடிண்டு வாசல்லே யாரோ ஒத்தர் காத்திண்டிருக்கார்!”

“யார் அது?” என்றான் சீதாராமன் திடுக்கிட்டவனாக.

அவன் முகத்தில் படர்ந்த கவலைக் குறியை நளினியும், விசுவநாதய்யரும் கவனிக்காமல் இல்லை.

“யாரோ குருஸ்வாமியாம். வந்து பத்து நிமிஷமாச்சு. வாசல் திண்ணையில் உட்கார்ந்திருக்கார்” என்றாள் நளினி.

“குருஸ்வாமியா?” என்றான் சீதாராமன். அவன் முகத்தில் படர்ந்த கவலைக் குறி மறைந்தது. அவன் குரலிலே ஓர் அலட்சியம் தொனித்தது. ஆனால் ஓர் அசட்டுக் குறியும் படர்ந்தது; ஏதோ விஷயம் தெரியாது தடுமாறுகிறவன் போலிருந்தான் அவன்.

இரண்டொரு வினாடியில் சமாளித்துக் கொண்டான். பிறகு சொன்னான். “என்ன விஷயம் என்று கேட்டுக் கொண்டு வருகிறேன்” என்று சொல்லிக் கொண்டே வாசல் பக்கம் போனான்.

விசுவநாதய்யர் சட்டையை மாட்டிக் கொண்டு ஆபீசுக்குக் கிளம்பத் தயாரானார்.

நளினி தன் இடுப்பிலிருந்த ராஜுவைக் கீழே விட்டு விட்டு அவளுடைய பட்டணத்து மாமாவைப் பின் தொடர்ந்து வாசல் பக்கம் போனாள்.

வாசலில் வந்த சீதாராமனைக் கண்டவுடன் குருஸ்வாமி எழுந்து திண்ணையிலிருந்து இறங்கி சீதாராமனை நோக்கி வந்தார். இருவரும் - எதிரும் புதிருமாகத் தெரு திண்ணையில் நெருங்கி உட்கார்ந்தார்கள்.

சீதாராமன் கேட்டான்: “எப்பொழுது நீங்கள் இங்கே வந்தீர்கள்?” என்று.

“நீ வந்த ரெயிலிலேயே தான் நானும் வந்தேன்” என்றார் குருஸ்வாமி புன்னகையுடன்.

“ஓஹோ!.... உங்களுக்கு விஜயபுரத்தில் யாரும் உறவு இருப்பதாக எனக்குத் தெரியாதே!” என்றான் சீதாராமன்.

“நானும் விஜயபுரம் வரதாக நினைக்கவேயில்லை” என்றார் குருஸ்வாமி. இரண்டொரு நிமிஷங்களுக்குப் பிறகு அழுத்தமாக “உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்!” என்றார்.

“என்னைப் பார்க்கவா?” என்றான் சீதாராமன் ஆச்சரியத் துடன்.

“ஆமாம். உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்!” என்றார் குருஸ்வாமி.

“நான் வந்த ரெயிலிலேதான் வந்தேன் என்கிறீர்கள்; ஆனால் நான் பார்க்கவில்லையே!” என்றான் சீதாராமன்.

“நீ இரண்டாவது வகுப்பில் வந்தாய். நான் மூன்றாவது வகுப்பில் வந்தேன்” என்றார் குருஸ்வாமி.

“அது சரி...”

“அதுதான் சரியல்ல என்று சொல்ல வந்தேன். நீ இரண்டாவது வகுப்பில் ஏறியது இதுதான் முதல் தடவை. நான் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்ய நேர்ந்ததும். பல வருஷங்களில், இதுதான் முதல் தடவை” என்றார் குருஸ்வாமி.

“அப்படியா?” என்றான் சீதாராமன் ஓர் ஏளனச் சிரிப்புடன்.

“அந்த நிலைமையை மாற்றிக்கொண்டு போவது என்கிற உத்தேசத்துடன்தான் உன்னைப் பார்க்க இப்போது வந்தேன்” என்றார் குருஸ்வாமி.

“என்னை நீ பார்த்ததால் நிலைமை மாறிவிடும் என்று எனக்கு நம்பிக்கையில்லையே!” என்றான் சீதாராமன்.

“எனக்குப் பூரண நம்பிக்கையிருக்கிறது” என்றார் குருஸ்வாமி.

“அதைப்பற்றி எனக்கு ஒரு ஆக்ஷேபமும் இல்லை. விஜய புரத்திலே

இரண்டு நாள் தங்கினால் நீ என்னை மறுபடியும் வந்து பார். எனக்கு இப்போ நாழியாகிறது" என்று எழுந்தான் சீதாராமன்.

அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் குருஸ்வாமி. அவர் பிடியிலிருந்து உதறமுடியவில்லை சீதாராமனால். உதறித் தள்ளிவிட்டு நகர்ந்துவிட முடியாது.

"என்ன வேண்டும் உனக்கு?" என்றான் சீதாராமன்.

"அப்படிப் பேசு; அதுதான் சரி" என்றார் குருஸ்வாமி. சற்று நேரங் கழித்துச் சொன்னார்: "உட்காரப்பா உட்காரு. பிறத்தியார் கவனிக்காமல் காதோடு காது வைத்த மாதிரி காரியத்தை முடித்துக் கொள்வதுதான் பரஸ்பரம் லாபகரமான வழி. உட்காரு."

சீதாராமன் உட்கார்ந்தான். தோல்வியுற்றுவிட்டதைக் காட்டிக்கொண்டால் ஆபத்து என்று உணர்ந்தவனாகச் சொன்னான்: "உன்னைப் பட்டணத்திலே ரொம்பப் பேர் தேடிண்டிருக்காளாமே?"

"தேடட்டுமே! இந்தக் குருஸ்வாமி அதற்கெல்லாம் பயந்துவிடற ஆசாமியில்லை" என்றார் குருஸ்வாமி.

"தெரிகிறது."

"தெரிந்தா? இன்னொன்றும் தெரிந்துகொள் - உனக்கு நல்லது. நான் சொல்றபடி கேட்காது போனால் உன்னையும் நாளைக்கே பலர் தேட ஆரம்பித்து விடுவார்கள்" என்று பயமுறுத்தினார் குருஸ்வாமி.

"தேடட்டுமே! குருஸ்வாமி செய்கிற காரியத்தை சீதாராமனால் செய்ய முடியாதா?" என்றான் சீதாராமன்.

"அவ்வளவு நன்றாகச் செய்ய முடியாது என்றுதான் நான் சொல்கிறேன். சீதாராமனுக்கு இம்மாதரி விஷயங்களில் அனுபவம் போதாது" என்றார் குருஸ்வாமி.

"இதென்ன வெட்டிப் பேச்சு? வந்த காரியத்தைச் சொல்லு" என்றான் சீதாராமன் பொறுமை இழந்தவனாக.

“அப்படி வா தம்பி!” என்றார் குருஸ்வாமி. மேலும் சொன்னார்: “நான் நியாயப்படி நடக்கிறவன். தவிர உன் சாமர்த்தியத்தையும் ஒப்புக்கொள்கிறேன். என்னையே ஏமாற்றி விட்டாயே நீ! சபாஷ்! எனக்கு வேண்டியது நியாயம்தான்.”

“நீ சொல்வது எனக்குப் புரியவில்லை” “புரியறதுக்கு அவசியமே கிடையாது தம்பி. எனக்குச் சேரவேண்டியது பதினாயிரம்தான்” என்றார் குருஸ்வாமி.

“பதினாயிரமா? ஏதப்பா எங்கிட்டப் பதினாயிரமும் இருபதினாயிரமும்!” என்றான் சீதாராமன்.

- ‘ஏது எப்படி என்றெல்லாம் உரக்கச் சொல்லலாமா?’ என்று கூறி நகைத்தார் குருஸ்வாமி.

இதற்குள் ஆபீசுக்குக் கிளம்பத் தயாராக விசுவநாதய்யர் வெளியே வந்தார். அவர் சீதாராமனிடம். “குளிச்சு விட்டுத் தயாராக இருங்கள்; நான் பதினோரு மணிக்கு வரேன்” என்றார்.

“சரி” என்றான் சீதாராமன். “தந்தியை அடித்து விடுங்கள்” என்றான்.

விசுவநாதய்யர் போனபிறகு குருஸ்வாமியிடம் சீதாராமன் சொன்னான்: “நீ சொல்ற விஷயங்களைக் கவனத்தில் வைக்கிறேன். எதற்கும் சாயங்காலம் வா நீ.”

குருஸ்வாமி சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னார்: “வரேன். ஆனால் அதற்குள் எங்கிட்ட ஏதாவது விளை யாடலாம்னு ஏற்பாடு செய்யாதே - உன்னால் சமாளிக்க முடியாது.”

குருஸ்வாமி போனபிறகு கொல்லைக் கூடத்திற்குக் குளிக்கப் போனான் சீதாராமன்.

# மூன்று வருஷங்களுக்குப் பிறகு

குருஸ்வாமியை விஜயபுரம் அக்கிரகாரத்தில் தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யர் வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருக்க விட்டு விட்டு, கொல்லைப்பக்கம் குளிப்பதற்காகப் போன சீதாராமன் யார் கண்ணிலும் படாமல் அப்படியே மறைந்து போய் மூன்று வருஷங்களாகி விட்டன. குருஸ்வாமி தன்னையும் ஏமாற்றத் துணிவும் சாமர்த்தியமும் உள்ள ஒருவன் பிறந்தானே என்று ஆச்சரியத்தில் மூழ்கியவராக அன்று பூராவும் காத்துக் கொண்டு இருந்துவிட்டு அஸ்தமிக்கும் சமயத்தில் ரயிலேறிச் சென்னை செல்ல முயற்சிக்கையில், முதலில் டிக்கெட் இல்லாத குற்றத்துக்காகவும், பிறகு யார் என்று யாரோ கூறிவிட வேறு பெரிய குற்றங்களுக்காகவும் கைது செய்யப் பட்டார். அவருக்கிருந்த சாமர்த்தியத்தில் பாதி, கையில் காசில்லாத காரணத்தினால் மறைந்தேவிட்டது. மற்றப் பாதியும் சீதாராமனிடம் தோற்று விட்டதினாலே போய் விட்டது போலும்! எது எப்படியானாலும் குருஸ்வாமிக்கு நாலு வருஷங்கள் தண்டனை விதித்து விட்டார்கள்.

சீதாராமன் என்ன ஆனான் என்று யாருக்கும் தெரியாது. தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யர் பட்டணத்துக்கு வக்கீல் விலாசத்தில் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்குத் தந்தி அடித்து விட்டுத் தன் வீட்டுக்கு வந்தபோது, விருந்தாளியைக் காண வில்லை. அவன் பெட்டி படுக்கை எல்லாம் வைத்த இடத் திலேயே இருந்தன. அதைப்பற்றி அவர் சிறிதும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. எப்படி எந்த நிமிஷம் அவன் மறைந்தான் என்று எல்லா விஷயங்களையும் கூர்மையாகவே கவனித்துக் கொண்டிருந்த நளினிக்குக் கூடத் தெரியாது. குருஸ்வாமி என்பவன் தனக்காகத் திண்ணையிலே காத்திருந் தான் என்று சீதாராமனுக்குத் தெரியும். அதுபற்றி அவனுக்கு அவ்வளவாகத் திருப்தியில்லை என்று அவளுக்குத் தெரியும். ஏதோ பண விஷயமாக இருவரும் தகராறு செய்து கொண்டிருந் தார்கள் என்று அவர்கள் பேசிய விஷயங்களிலிருந்து அவள் அநுமானித்துக் கொண்டிருந்தாள். மத்தியானம் மீண்டும்

அவர்களிருவரிடையேயும் விவாதம் நடக்கும் என்று எதிர் பார்த்திருந்தாள் அவள்.

சீதாராமனைக் காணவில்லை என்றவுடனே விசுவ நாதய்யருக்கு முதலில் தோன்றிய விஷயம்: பட்டணத்துப் பையன் கிணற்றில் தப்பித் தவறி விழுந்துவிட்டிருப்பானோ என்பது தான்! ஆழமில்லாக் கிணறுதான் அவர் வீட்டுக் கிணறு. அவரே அதில் இறங்கித் துளாவிப் பார்த்துவிட்டார்.

சின்னம்மாளுக்கு ஒரே கோபம். வழக்கமாகப் பத்து மணிக்கெல்லாம் கணவனுக்குச் சாப்பாடு போட்டுவிட்டுச் சற்று நேரம் அக்கடா என்று படுத்திருப்பாள் அவள். இன்று அவள் சாப்பாடும் கெட்டுவிட்டது; ஓய்வும் கெட்டுவிட்டது! கோபம் வருவது இயற்கைதானே! “ஊரிலிருக்கிற கரியாப் போவானுக்கெல்லாம் இடங்கொடுத் திண்டிருந்தால் என்ன எல்லாம் நடக்குமோ!” என்றாள் அவள்.

“கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளைத் தெரிந்த தோஷம்” என்று முணுமுணுத்துக்கொண்டே தலையை ஈரம் போகத் துவட்டிவிட்டுத் தனியே சாப்பிட உட்கார்ந்தார் விசுவ நாதய்யர்.

“பர்வதத்தம்மாளுக்கு வாய்ச்சிருக்கிற அருமைக்குத் தம்பியைப்பற்றிச் சொல்லிமுடியாது போங்கோ!” என்றாள் சின்னம்மா.

“எல்லோருமே உன் தம்பி மாதிரி இருந்துவிட முடியுமா?” என்றார் விசுவநாதய்யர்.

“என் தம்பியை இழுப்பானேன் இங்கே! அவன் கிடக்கான் எங்கேயோ!” என்று சிணுங்கினாள் சின்னம்மா.

சீதாராமனுடைய வருகையும் திடீர் மறைவும் இப்படியாக விசுவநாதய்யருக்கும் அவர் சம்சாரத்திற்கும் இடையே ஒரு சண்டையை மூட்டிவிட்டன - அவ்வளவுதான்.

பல நாளாக சீதாராமனைப்பற்றிய ஞாபகமே இல்லாத நளினிக்கு இன்று அதெல்லாம் நடந்து சரியாக மூன்று வருஷங்களான பிறகு என்னவோ ஞாபகம் வந்தது. சீதா ராமனைப் பற்றிய சமாச்சாரங்கள் எல்லாம் அவளுக்கு ஒன்றுவிடாமல் நன்றாக ஞாபகத்திலிருந்தன என்பது சற்று

ஆச்சரியப்பட வேண்டிய விஷயமே.

நளினி வாசல் திண்ணையில் தூணில் சாய்ந்தபடியே உட்கார்ந்துகொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் யோசனையில் ஆழ்ந்திருப்பது புதிதல்ல. அவளுக்கென்ன கவலையிருந்தது யோசனைகளைத் தவிர? காலாகாலத்தில் அவள் அப்பா கலியாணத்தைப் பண்ணி வைத்திருந்தாரானால் இதற்குள்ளாகவே அவளுக்குக் குடும்பக் கவலை எல்லாம் ஏற்பட்டிருக்கும். வயசு பதினைந்தாகப் போகிறது; இன்னும் கலியாணத்திற்கான ஏற்பாடுகளையே காணவில்லை. அவள் வயசுக்குச் சற்று வளர்த்தியான பெண் தான் நளினி. தவிரவும் அவள் பயமே இல்லாமல். சாதாரணமாக, தான் பெண், பயந்து வெட்கிச் சமையல் அறையிலேயே கிடக்க வேண்டும் என்பதையே மறந்துவிட்டு எல்லோருடனும் சமமாக வார்த்தையாடுவாள்.

“அவனை ஒண்ணும் சொல்லாதே!” என்று விசுவ நாதய்யர் சொல்லிச் சொல்லி வந்ததன் பலனாகச் சின்னம்மாளும் அவளை எதுவும் சொல்வதை நிறுத்திப் பல நாட்களாகி விட்டன.

“எப்படியாவது போகிறாள். எனக்கென்ன? நான் பெற்றெடுத்த பெண்ணா?” என்று முணுமுணுத்துக் கொண்டே சும்மா இருக்கக் கற்றுக்கொண்டு விட்டாள். ராஜுவுக்குப் பின் பிறந்த பேபிக்குச் சாதம் ஊட்டக்கூட அவள் நளினியைக் கூப்பிடுவது கிடையாது!

இப்படியாக நளினி வாசல் திண்ணையில் தூணில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்து அழியாக் கனவுகள் கண்டு கொண்டிருப்பது தினசரிக் காரியமாகிவிட்டது என்றே சொல்ல வேண்டும். அக்கிரகாரத்திலே நடப்பதெல்லாம் நளினிக்குத் தெரியும். அவளுக்குத் தெரியாமல்தான் அங்கு ஒன்றும் நடந்து விட முடியாதே! யார் வீட்டுக்கு யார் யார் வருகிறார்கள்? யார் யார் வீட்டிலே சமீபத்திலே என்னென்ன நடக்க இருக்கிறது? - என்று தன் வயசுக்கு மீறிய ஓர் அறிவுடனே நளினி சொல்லுவாள். ஆனால் ஒன்று அவளாக வம்பு வளர்க்கத் தன் வீட்டு வாசல் இறங்கி எங்கும் போவது கிடையாது. யாராவது வந்து தன்னுடன் பேசினால் தான் அவள் பேசுவாள் - கூச்ச மில்லாமலே யாருடனும்

பேசுவாள். மற்றப்படி அவள் எல்லா வற்றையும் கவனித்துக் கொண்டு மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்த படியே இருக்க ஆக்ஷேபிப்பதே யில்லை.

எதிர்வீட்டு வாசலில் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வந்து உட்கார்ந்ததைக் கண்டவுடனே நளினி அவரைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள். மூன்று வருடங்களாக, சீதாராமன் வந்து போனது முதலே அவருக்குக் கெட்ட காலந்தான் என்று சொல்லவேண்டும். 'பாவம்! ஆளே எப்படி மாறிப் போய் விட்டார்!' என்று நினைத்தாள் நளினி. அப்படிப்பட்ட தொழில் அவருடையது. சீதாராமன் பண்ணிய பாவத்திற் கெல்லாம் அவர் பிராயச்சித்தம் செய்யவேண்டி யிருந்தது. சீதாராமன்தான் அப்படிப்பட்ட பாவம் என்ன பண்ணினான் என்று அக்கிரகார வாசிகளுக்கு நிச்சயமாகத் தெரியுமா? அதுவும் ஒன்றும் இல்லை. ஒருதரம் வந்தான்; யார் கண்ணிலும் படாமல் கொல்லைப்புறம் சுவர் ஏறிக் குதித்து ஓடி விட்டான்! அவன் செய்தது என்னவானால் என்ன? ஊரிலே அதே அக்கிரகாரத்திலே பரம்பரையாகப் பல குடும்பங்களுக்குப் புரோகிதர் என்று சொல்லிக்கொண்டு எதிர் வரிசையிலே கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்குப் போட்டியாக, ராமச்சந்திர சாஸ்திரிகள் என்று ஒருவர் கும்ப கோணத்திலிருந்து வந்து குடியேறிவிட்டார். அவ்வளவு தான் அருமை மச்சினனால் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியார் கண்ட பலன்.

பர்வதத்தம்மாளை நினைக்கும்போது நளினிக்கே சிரிப்பு வந்தது. ஆனால் அது முழுச் சிரிப்பு அல்ல; பரிதாபங் கலந்த சிரிப்பு. பர்வதத்தம்மாள் இப்பொழுதெல்லாம் முன் போலத் தன் தம்பியின் பெருமையைப் பேசுவதற்காக, ஏதாவது கடன் வாங்க வருகிற சாக்கில் எதிர்வீட்டுக்கோ பக்கத்து வீட்டுக்கோ போவது கிடையாது; உண்மையில் அவள் எங்குமே கிளம்புவது கிடையாது. பெட்டிப்பாம்பு தான் - அடங்கிக் கிடந்தாள். ஆனால் இத்தனைக்கும் கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் வாய் திறந்து அவளை எதுவும் சொல்வது கிடையாது. ஆனால் அதனால் நிலைமை மாறி விடுமா? அல்லது உண்மை மறைந்து அழிந்துவிடுமா?

சென்னையிலிருந்து, வழக்கு நடத்தாமலே வெற்றி கண்டு விட்ட

பெருமிதத்துடன், வக்கீல் வாங்கிக்கொண்ட இரு நூற்றைம்பது ரூபாயும் திரும்பவில்லை என்றாலும், பாதக மில்லை என்று விசுவநாதய்யர் தந்தி கண்டவுடனே கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகளும், பர்வதத்தம்மாளும் திரும்பினார்கள். ஆனால் விசுவநாதய்யர் அவர்களை உள்ளே அழைத்துப் போய் ரகசியமாக விஷயத்தைச் சொன்னவுடனேயே அவர் களுடைய முகங்கள் தொங்கிவிட்டன. முதல் இரண்டு நாள் என்னவோ விஷயம் ரகசியமாகத்தான் இருந்தது; பிறகு அக்கிரகாரம் பூராவும் எப்படியோ இது பரவிவிட்டது. எல்லோரும் சீதாராமனைப் பற்றியே பேசத் தலைப்பட்டார்கள்.

ரகசியமாக இருந்திருக்க வேண்டிய அச்செய்தி எப்படி ஊரெல்லாம் பரவியது என்பது நளினிக்கு அன்றும் சரி இன்றும் சரி - ஆச்சரியமாகவே இருந்தது. சின்னம்மா சொன்னது நளினியின் காதிலும் விழாமல் இல்லை: “நம் ஆத்திலேதான் ஒரு நியூஸ் பேப்பர் இருக்கே?” என்று அவள் சொன்னாள். ஆனால் நளினி யாரிடமும் சீதாராமனைப் பேசவில்லை என்பது உண்மை. விசுவநாதய்யரைப் பற்றிச் சந்தேகிக்க இடமே கிடையாது. தானுண்டு தன் வேலை யுண்டு என்று இருப்பவர் அவர். இந்த விஷயத்தில் தான் தவறிப்போய் ஏதோ கொஞ்சம் பிறர் விஷயத்திலும் ஈடுபட்டு வக்கீல் அமர்த்தி எல்லாம் செய்தார் - தோல்வியுற்றார். இனி, தன் ஆயுளில் அவர் பிறர் காரியங்களில் தலையிடத் துணிய மாட்டார். சின்னம்மாளும் சொல்லியிருக்க மாட்டாள். கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகளும் அவர் சம்சாரமும் இதைப்பற்றிப் பேசியே இருக்கமாட்டார்கள். பின் எப்படி எல்லாச் செய்திகளும் வெளிவந்துவிட்டது! ஊகமாகக் கூட இல்லை - பூரா விவரங் களுடன் எப்படியோ வெளிவந்திருந்தது! இது, விடை காண முடியாத ஒரு புதிராகப்பட்டது நளினிக்கு. ஆனால், ஆளில்லாத அந்தரத் தபால்கள் நம்மூரில் புது விஷயம் அல்லவே! ரகசியம் என்று நாம் எண்ணிப் பத்திரப்படுத்தி வைக்கும் எவ்வளவு விஷயங்கள் பகிரங்கமாக அம்பலத்துக்குக் காரணமில்லாமலே வந்துவிடுகின்றன!

சென்னையிலிருந்து விஜயபுரம் திரும்பிய விநாடி யிலிருந்தே கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் துரதிஷ்டம் தொடங்கிவிட்டது என்று

சொல்லவேண்டும். நாளுக்கு நாள் அவர் புரோகிதம் குறைந்தது. ஒரு விசேஷ தினமென்றால் நிற்கச் சாவகாசமில்லாமல் பம்பரமாகச் சுழன்று சம்பாதிக்கும் வைதிகப் பிராமணர் இப்போது வீட்டுத் திண்ணையை விட்டு இறங்குவதே கிடையாது. அவர் அப்படி என்னதான் பெரிய தவறு செய்துவிட்டார் என்பதுதான் நளினிக்குப் புரிய வில்லை.

எதிர்வீட்டுத் திண்ணையில் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் இரண்டே நிமிஷம்தான் உட்கார்ந்திருந்தார். தெருவோடு அவருக்குப் போட்டியாகச் சமீபத்தில் வந்து முளைத்த கும்பகோணம் ராமச்சந்திர சாஸ்திரிகள் தர்ப்பைக்கட்டும் கையுமாகப் போவதைக் கண்டதும், மனம் தாளாது உள்ளே எழுந்து போய்விட்டார்.

நளினியும் உள்ளே போக எழுந்தாள். போய்க் குளித்து விட்டு வந்தாள். அப்பா கூப்பிடுகிற சமயத்துக்குச் சரியாக இருக்கும். இல்லாவிட்டால் சின்னம்மாவிடம் அனாவசிய மாக வசவு கேட்க நேரிடும் அல்லவா?

எழுந்த நளினி நின்றாள். தூரத்தில் எங்கேயோ ரயில் ஊதுகிற சப்தம் கேட்டது. ஓடம் போக்கி ஆற்றுப்பாலத்தின் மேலே ரயில் ஓடுகிற சப்தம் கடகடவென்று காலை அமைதியைக் கலைத்துக் கொண்டு எழுந்து ஓய்ந்தது. அக்கிரகாரத்துக் கோடியில் இருந்த பிள்ளையார் கோயிலைத் தாண்டிக் கடகடவென்று குதிரைச் சலங்கை மணியின் சப்தையும் அழுத்திக்கொண்டு ஒரு குதிரை வண்டி உருண்டு வரும் சப்தம் கேட்டது.

நின்று யார் வீட்டுக்கு யார் வருவது என்று பார்க்கத் தாமதித்தாள் நளினி.

# கல்யாணப் பேச்சு

வாழ்க்கையிலே வேடிக்கை பார்ப்பதற்கென்றே பிறந்தவர்கள் பலர் உண்டு. எந்த அனுபவமும் அவர்களை நெருக்கித் தொடாது. தாமரை இலையில் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் இருந்து வாழ்ந்துவிட்டு நகர்ந்து விடுவார்கள். கஷ்டமோ சுகமோ - துக்கமோ. அவர்கள் உள்ளத்திலே உரைப்பது கிடையாது. கனவு கண்டு விழித்தவர்கள் போலப் பிரமாதமான அனுபவத்தையும்கூட உதறிவிட்டு இருந்து விடுவார்கள்! ஒரு நாடகத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறவனைப்போல் அவர்கள் வாழ்க்கை பூராவுமே ஒரு நாடகமாகக் கழிந்துவிடும். எல்லாவற்றையும் கவனித்து, மற்றவர்களைவிடச் சற்று அதிகமாகவே நுணுக்கங்களை ஆராய்ந்து, துளித்துளி ஈடுபட்டும் விடுவார்கள். ஆனால் எல்லாம் நாடகம்தானே, இதில் ஈடுபடவேண்டிய அவசியமே கிடையாதே, என்று அவர்கள் மனசில் எப்போதும் சிந்தனை இருக்கும்.

இப்படி நாடகம் பார்க்கிற மாதிரி வாழ்க்கையைக் கழித்து விடுபவர்களை அதிர்ஷ்டசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுடைய அதிர்ஷ்டம் உண்மை யானது; தனம் பொருள் பதவிபோல வெறும் மாயை அல்ல. ஒரு விதமான மனோபாவத்தில் எழுந்த காரணத் தத்துவத்தையே அளித்து விடுகிறது, தத்துவமோ கொள்கையோ மற்றும் எவ்விதமான ஈடுபாடுகளோ இல்லாத வாழ்க்கை நடத்து கிறவர்களைவிட அவர்கள் நல்வாழ்க்கை நடத்துகிறார்கள்.

மனிதர்களுக்கு, மனிதகுலத்துக்கு எவ்வளவு தினுசான அனுபவங்கள் உண்டோ அவ்வளவும் தனி மனிதர்களுக்கும் உண்டென்பது உண்மை என்றே தோன்றுகிறது. உதாரணமாக இந்தப் பட்டும் படாமலும் இருக்கிற தன்மை ஒவ்வொரு மனிதனுடைய ஆயுளிலும் ஒரு பருவத்தில் இருக்கிறது. ஒரு சிலருக்கு அது அதிக காலம் நீடிக்கிறது; பலருக்கு அது சீக்கிரத்திலேயே மறைந்து விடுகிறது. அப்படியிருப்பது சாத்தியமல்ல என்று வாதிப்பவர்கள்கூட உண்டு என்றுதான் சொல்லவேண்டும்; அது

வேதாந்திகளின் மனப்பான்மை; பலருக்கும் - சாதாரணமான பலருக்கும் ஏற்காது என்று சொல்கிறவர்களும் உண்டு. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பருவத்தில் பொருந்துவதாகவே அமைந்திருக்கிறது. அப்படி அமைந்திருப்பதனால்தானே வாழ்க்கை நடத்துவதே சாத்தியமாகிறது?

எல்லையற்றது, மீளமுடியாதது என்று எண்ணுகிற பல துயரங்கள் ஒருவனுக்கு ஏற்படத்தான் ஏற்படுகின்றன. ஒன்றை மீறமுடியாது என்று எண்ணுகிற பொழுதே இன்னொன்று ஏற்பட்டுவிடும். இவ்வளவையும் மீறி வாழ முயற்சி செய்யாதவர்கள் மிகச் சிலரே. வாழ்க்கை என்கிற முயற்சிக்குப் பட்டும் படாமலும் இருக்கிற தன்மை சற்று அதிகமாகவே தேவையாக இருக்கிறது.

இதெல்லாம் அனாவசியமான தத்துவ விசாரம் என்றே தோன்றுகிறது. நளினி என்கிற சிறுமி - பதினான்கு வயது தாண்டிப் பெரியவளாகிக் கொண்டிருப்பவள் - சமையற் கட்டில் உட்கார்ந்து கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருக் கலாமே தவிர வேறு எதுவும் செய்யக்கூடாது என்று சின்னம்மாளும் சின்னம்மாளையே போன்ற விஜயபுரம் அக்கிரகாரமும் சொல்கிறது. இது தத்துவமல்ல. வழக்கத்தால் ஏற்பட்டுவிட்ட ஒரு மரபு, ஒரு கட்டுப்பாடு - அவ்வளவுதான்.

இந்தக் கட்டுப்பாடு அவசியமல்ல; இப்படி ஒன்று இருப்பதே இந்த நாளில் அசந்தர்ப்பமானது என்று நளினி எண்ணுகிறாள் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், இந்த மாதிரி விஷயங்களைப் பற்றி எண்ணிப்பார்க்க இன்னும் நளினி பழகவில்லை. அவள் பாட்டுக்குத் தன் இஷ்டப்படி நடந்து கொள்கிறாள். அதுவும் சின்னம்மா சொல்வதற்கு நேர் எதிராக நடந்து கொள்வதே தனக்கு நல்லது என்கிற முடிவுக்கு அவள் ஆரம்ப காலத்திலேயே வந்துவிட்டாள் என்று தான் தோன்றுகிறது.

“வாசலில் போகாதே!” என்று சின்னம்மா உத்தர விட்டாளானால், போகத்தான் வேண்டும் என்று ஓர் எண்ணம் அவளுக்கு ஏற்படுகிறது. சின்னம்மாள் திட்டினால் விசுவ நாதய்யர் பரிந்துகொண்டு, “தாயில்லாக் குழந்தை” என்று ஆரம்பித்துவிடுவார். மற்றத் தாயில்லாக் குழந்தைகளின் விஷயம் எப்படியோ - நளினியின் விஷயத்தில் தாயில்லாக் குழந்தையாக

இருப்பதே மிகவும் சிரேஷ்டமான காரியமாக இருந்தது.

“வயது வந்த பெண் திண்ணையிலேயே உட்கார்ந் திருந்தால், தெருவிலே என்ன சொல்லுவார்கள்?” என்று சின்னம்மா கேட்டாள்.

“திண்ணைக்கு வராததுகள் மகராஜி எல்லாம் ஒழுங்காகத் தான் இருக்கான்னு அர்த்தமோ?” என்பார் விசுவநாதய்யர்.

“அதுக்குச் சொல்லல்லே! கல்யாணத்தைப் பண்ணிக் கொடுத்துட்டா அதற்கப்புறம் நம்ம பொறுப்பு விட்டது” என்பாள் சின்னம்மா.

“தானே ஆற காலத்திலே ஆறது” என்பார் விசுவ நாதய்யர். இந்தக் கல்யாணம் அஸ்திரத்துக்குத் தன்னால் பதில் சொல்ல இயலாது என்று அவருக்குத் தெரியும். கல்யாணத்தைப் பற்றிச் சின்னம்மா தொடங்கியவுடனேயே அவர் எழுந்து நகர ஆரம்பித்துவிடுவார்.

“ஆற காலம்னா இன்னும் ஆறு வருஷம் ஆகணும் போலிருக்கு? வயசும் பதினஞ்சு ஆகப்போறது...” என்பாள் சின்னம்மா தன் வெற்றியைத் தொடர்ந்து.

“பதினாலு ஆகல்லே இன்னும் - அதுக்குள்ளே பதினஞ்சு, பதினாறுன்னு...” என்று விசுவநாதய்யர் முணுமுணுப்பார்.

“தானே நாளைக்கு ஆயிடுது! அப்புறம்?” என்பாள் சின்னம்மா, அவள் அதைச் சொல்கிற பாவத்திலே நாளைக்கே பதினாறு ஆகிவிடும்போலப் பயம் தொனிக்கும்!

விசுவநாதய்யர் பதில் சொல்லாமல் பேச்சை வேறு வழியில் திருப்ப யத்தனித்தார். “நாளைக்கு நாலுபேர் என்னைத் தான் சொல்லுவா: தாயில்லாப் பொண்ணு, அதுக்குக் கலியாணமாகனுமென்று இவளுக்குக் கவலையிருக்கு மான்னு....”

விசுவநாதய்யர் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு வாசலுக்கோ ஆபீஸுக்கோ, வேறு எங்கேயோ போய் விடுவார்.

தன்னைப்பற்றிய இந்த விவாதத்தையும் நாடகத்தைக் கவனிப்பதுபோலக் கவனித்து மனத்தில் வாங்கிக் கொண்டாள் நளினி. தன்னைப்பற்றியது

என்பதற்காக, அது அவள் மனசில் அதிகமாக உரைக்கவில்லை. தெருவில் நின்று வண்டி வந்தால் யார் வீட்டுக்கு யார் வருவது என்று வேடிக்கை பார்க்கிற மாதிரியே இதையும் வேறு யாரையோ பற்றிய விவாதம் என்று எண்ணியவள்போல வேடிக்கை பார்த்தாள்.

சில சமயம் அவள் தனக்குக் கல்யாணம் ஆவதுபற்றியும் சிந்திப்பதுண்டு. பட்டும் படாமலுமிருக்கிற தன்மை அவளிடம் எவ்வளவுதான் ஊறிப் போயிருந்தது என்றாலும் அக்கிர காரத்தில் பிறந்த பெண், வயசாகிக் கொண்டிருக்கிற பெண், வளர்ந்து பெரியவளாகி மற்றவர்களைப் போலக் குடித்தனம் நடத்த ஆசைப்படுகிற பெண் என்பதனால் அவள் தனக்கு வரப்போகிற மணாளனைப் பற்றி எண்ணாமல் இருக்க முடியாதல்லவா?

ஆனால் அவள் எண்ணிச் செய்வதென்ன? சின்னம்மா தொந்தரவுக்காகத் தானே போய்த் தேடி யாரையாவது அழைத்து வந்து, “இவர்தான் என் புருஷர்” என்று சொல்லிவிடுவதா? அது தற்போதைய நாகரீகத்தில் விஜயபுரம் அக்கிரகாரத்தில் சாத்தியமான காரியம் அல்லவே! விஜயபுரம் அக்கிரகாரத்துச் சம்பிரதாயப்படி அப்பா பணம் சேகரித்து வைத்தாக வேண்டும்; அம்மா கல்யாணத்துக்கென்று அப்பளாம் இட்டு வைப்பது முதல் மற்றும் பல சாமான்களும் சேர்த்தாக வேண்டும்; இவ்வளவும் ஆன பிறகு ஜாதகம் பார்த்துப் பொருந்திய வரனை அழைத்து வந்து அவனுக்குப் பெண்ணைக்காட்டி....

நளினியே தேடிக்கொண்டுவிட முடியுமானால் தேடிக் கொண்டுவிடுவாள். வாசலில் நின்று சும்மா, ஒரு பயனும் இல்லாமல், கால் வலிக்க, வேடிக்கை பார்த்துக் கொண்டிருப் பதற்கே ஆட்சேபங்கள் சொன்ன சின்னம்மா, நளினி மனத்தில் இருந்த இந்த எண்ணத்தை அறிந்துகொண்டிருந்தாளானால் இன்னும் என்னென்ன சொல்லியிருப்பாளோ!

தன் மனத்திலிருந்தது என்ன என்று சரியாக நளினிக்கே தெரியாது என்று தான் சொல்ல வேண்டும். தெரிந்திருந்தால் சின்னம்மாவுக்குக் கோபமூட்ட வேண்டும் என்கிற ஒரு காரணத்துக்காகவேணும் அவள் அதை வெளியிட்டே சொல்லி யிருப்பாள். வேடிக்கை பார்ப்பதில் உள்ள ஈடுபாடு

காரணமாகத் தான் என்று வைத்துக்கொள்ளலாம் - நளினிக்கு வேடிக்கை பார்ப்பதற்கு ஏற்ற சந்தர்ப்பங்களைச் சிருஷ்டித்துக் கொள்ளவும் சாமர்த்தியம் இருந்தது.

விஜயபுரம் அக்கிரகாரத்திற்கு இரண்டுதரம் வந்து இரண்டுதரமும் தன்னாலேயே வரவேற்கப்பட்ட அந்த சீதாராமனைப் பற்றி நினைத்தபோதெல்லாம் அவள் சற்று தடுமாற்றம் அடைந்தாள். அதென்னமோ, அவள் மனத்தில் தனக்கு வரப்போகிறவன் சீதாராமன் மாதிரிதான் இருக்க வேண்டும் என்று ஊர்ஜீதமாகி யிருந்தது. சீதாராமனாகவே இருந்தால்கூட நல்லதுதான்; ஆனால் ஊரார் எல்லோரும் அவனைப் பாங்க் கொள்ளைக்காரன் என்றும் அயோக்கியப் பதர் என்றும் பலவாறு கூறியது அவள் காதில் விழாமல் இல்லை. பாவம்! சாதுவான கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் பிழைப்பிலே மண் விழுந்தது அதனால்தான் என்று வேறு அவனைத் தூற்றினார்கள்.

ஆனால் நளினி நினைக்கவில்லை - சீதாராமன் அயோக்கியன் என்றே அவள் நினைக்கவில்லை. ஓடிப்போன அவன் எதற்காக அப்படிப்பயந்து ஓடிப்போக வேண்டும் என்று தானே தெளிவாகும்; பிறகு மீண்டும் ஒருதரம் சீதாராமன் வருவான் விஜயபுரம் அக்கிரகாரத்துக்கு என்று எண்ணினாள் அவள்.

அன்று காலையில் விஜயபுரம் அக்கிரகாரத்திற்குள் வந்து கொண்டிருந்த வண்டியில் சீதாராமனே வந்தாலும்....

என்று எண்ணினாள் நளினி. உள்ளே போக எழுந்தாள்; நின்று பார்த்தாள்.

வண்டி நேரே கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வீட்டுக்கும் அவள் வீட்டுக்கும் நடுவேதான் - முன் இரு சந்தர்ப்பங்களில் போலவே - நின்றது. ஆனால் வண்டியிலிருந்து இறங்கியது சீதாராமன் அல்ல. ஆனால் சீதாராமன் மாதிரியும்தான் இருந்தது என்று கவனித்தாள் நளினி. நரைத்த சிகையும் ஏழெட்டு நாள் தாடியும் பஞ்சகச்சமும், நெற்றியில் விபூதியுமாக வண்டி யிலிருந்து இறங்கியவருக்கு சீதாராமன் சாயல் இருந்தது வாஸ்தவம்தான். ஆனால் அது சீதாராமன் அல்ல.

# மீண்டும் வந்தவன்

சீதாராமனே வந்திருந்தான் என்றால் நளினி அதிக திருப்தி அடைந்திருப்பாள் என்பது உண்மைதான். அவனை விட வயதானவராக அவன் சாயலாகவே வேறொருவர் வந்திருந்ததும் ஒரு விதத்தில் நளினிக்குத் திருப்தியே தந்தது.

சீதாராமனை அச் சந்தர்ப்பத்தில் விஜயபுரம் அக்ரகார வாசிகள் எப்படி வரவேற்றிருப்பார்கள் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. மூன்று வருஷங்களுக்குமுன் நடந்த சம்பவங்கள் அநேகருடைய ஞாபகத்திலிருந்து அழிந்தே போயிருக்கும் அல்லது அந்த ஞாபகங்களின் வேகம் சற்றுக் குறைவாகவே இருக்கும். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் காரணமாக “பாவம், சாது! அவர் பிழைப்பிலே மண்ணைப் போட வந்து முளைத்தானே!” என்று சீதாராமனைத் திட்டியவர்கள் தான் அதிகமே தவிர, பாங்கிக் கொள்ளைக் காரன், அயோக்கியப்பதர் என்று சீதாராமனையே தெரிந்து திரட்டியவர்கள் சொல்லப் போனால் மிகவும் குறைவு தான். சொல்லப்போனால் மிகவும் குறைவுதான்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் என்னவோ அன்றே அவனை மன்னித்துவிட்டார். அவரால் மன்னிக்க முடிந்தது. விதி என்கிற ஒன்று எல்லாவற்றிற்கும் பின்னால் இருந்து கொண்டு எல்லோரையும் ஆட்டி வைக்கிறது. யாரும் தன்னுடைய காரியங்களுக்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதற் கில்லை என்கிற ஒரு சித்தாந்தத்தைப் படைத்துவிட்டவர் களுடைய வாழ்க்கை உண்மையிலேயே சுலபமானதாகி விடுகிறது. அவர்களுக்கு விரோதிகளும் அதிகம் ஏற்படுவ தில்லை. எல்லோரையும் விதியின் விளையாட்டுக் கருவிகள் என்று அவர்கள் எண்ணுவதுபோல அவர்களே விதியின் விளையாட்டுக் கருவிகளாகக் காற்றடிக்கிற பக்கம் ஒதுங்கிக் கொண்டு எப்படியோ காமா சோமாவென்று மேடுபள்ளம் அதிகமில்லாத வாழ்க்கை நடத்திவிடுகிறார்கள்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு மிகவும் சிரமமான தசைதான் அது.

ஆனால் அவர் ஜாதகத்தைப் பார்த்துக் கூடத் தன் சிரமதசை எப்பொழுது விலகும் என்று அறிந்து கொள்ள ஆசைப்படவில்லை. விலகுமா என்றுகூட அவர் சிந்திக்க வில்லை. கொஞ்ச காலத்துக்கு முன்பிருந்த சிரமமல்லாத தசைக்கும் இப்பொழுதுள்ள சிரமதசைக்கும் உள்ள வித்தி யாசம் மிகவும் சொல்பமே என்று அறிந்தவர் போல இரண்டையும் ஏற்றுக் கொண்டு அனுபவித்தார்.

பர்வதத்தம்மாளோ அப்படியல்ல! சிரமத்தில் பாதி அவளாகக் கிளறிவிட்டுக் கொண்டு பட்ட சிரமம். அதனாலேயே அதிக சிரமம் தந்தது என்றுகூடச் சொல்லலாம். "தம்பி, தம்பி" என்று பெருமை பீத்திக்கொண்டு அடுத்த வீடுகளுக்குப் போய் ஏதாவது கடன் வாங்க வந்த சாக்கில் பட்டணத்துத் தம்பியின் பிரதாபங்களைப் பற்றி ஒரு சர்க்கம் சொல்லிவிட்டு வந்த அந்த மனநிலைதான் அவளை அதிகமாகத் துன் புறுத்தியது. அக்கிரகாரத்து ஸ்திரீகள் நாலுபேர் கூடினால் நாக்கில் நரம்பில்லாமல் பிறரைப் பற்றித் துளியும் அனுதாபமே தொனிக்காமல் வம்பளக்கக் கூடியவர்கள் தான். எனினும் தனித்தனியே ஸ்திரீகளாகக் கருதும் போது மிகவும் மென்மை யான இளகிய அனுதாபம் நிறைந்த மனம் படைத்தவர்கள் தான். அதாவது பிறரைப் பற்றி வம்பளக்கும் போதே தங்களுக்கு அம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் என்ன செய்வோம் என்று சிந்திக்கிறவர்கள் தான் வம்பளக்கும் கோஷ்டியில் யாராவது ஒருவர் "ஐயோ பாவம்!, என்று ஒருதுளி அனு தாபமும் பரிவும் காட்டிவிட்டால் போதும் - எல்லோருமே "ஐயோ பாவம்!" என்று அங்கலாய்க்கத் தொடங்கி விடு வார்கள். மனத்தில் இருக்கும் அனுதாபம் பொங்கி வழிந்து பொல பொலக்கத் தொடங்கிவிடும்."

பர்வதத்தம்மாளைப் பற்றி முன்பெல்லாம் நல்லபிப் பிராயம் வைத்திராதவர்களுக்குக்கூட சீதாராமன் காரணமாகவும் (தெரிந்தே தெரியாமலோதான்!) கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் சிரமதசை காரணமாகவும் இப்போது மனசிலே நல்லபிப் பிராயம்தான். நளினியின் சின்னம்மாளே இதற்கு உதாரணம். முன்பெல்லாம் பர்வதத்தம்மாள் வந்தால் சின்னம்மா முகம் கொடுத்துக்கூடப் பேசமாட்டாள். இப்பொழுது நளினிக்குப் போட்டியாக அவள்கூடச் சிறிது நேரம் சிலசமயம் பர்வதத்

தம்மாளுடன் பேச வருவாள். வேறு எதுவும் முக்கியமான விஷயம்பற்றி இராது. ஊர் வம்பு, பிறருக்குச் சொல்லா விட்டால் திருப்தி தராத வீட்டுக் காரியங்கள் - இந்த மாதிரி.

நளினியின் தகப்பனார் விசுவநாதய்யர் தந்தி மெஷின், அதுபாட்டுக்குக் கட்டுக் கட வாசிக்குமே தவிர அந்தக் கட்டுக் கடவின் அர்த்தமெல்லாம் அதன் பொறுப்பல்ல. நாலைந்து நாட்களே அவருக்கு சீதாராமனைப் பற்றி ஞாபகம் இருந்தது. அதற்குப் பிறகு அவனை அடியோடு மறந்துவிட்டார். அவருக்கு எவ்வளவோ கவலைகள்!

இன்று காலையில் நளினி எதிர்வீட்டுக்கு யாரோ விருந்தாளி வந்து இறங்குவதைக் கவனித்துக்கொண்டு நிற்கையில் ஸ்நானம் செய்துவிட்டுத் தலையைத் துவட்டிக் கொண்டே அவர் வாசலுக்கு வந்தார். வேடிக்கையாக நளினியைக் கோபித்துக்கொண்டார். “இந்த அக்கிரகாரத்திலே உனக்கு வேடிக்கை பார்க்க நாள் பூராவும் அப்படி என்னதான் இருக்கிறதோ!” என்றார்.

“வேடிக்கை பார்க்கறதுக்குன்னு பட்டணத்திலே பெண்ணுக்கு ஒரு மாளிகை கட்டித் தாருங்களேன்” என்று கூறிக்கொண்டே சின்னம்மா வந்தாள்.

“மாளிகை கட்டித் தருபவனாக வந்தால் தானே கட்டித் தரான் - நீ சொல்லணுமோ! நளினிக்கு நல்ல அதிர்ஷ்ட ஜாதகம்” என்றார் விசுவநாதய்யர்.

“தெரியறதே! வரவேண்டிய காலத்திலே மாப்பிள்ளை கூட வராதிருக்கிறதே அதிர்ஷ்டம்தான்” என்று கேலி செய்தாள் சின்னம்மா.

இந்த விவாதத்தைக் காதில் வாங்கியும் வாங்காமலும், ஆனால் சிந்தனையில் போட்டுக் கொள்ளாமலே நின்றிருந்த நளினி தன் தகப்பனார் பக்கம் திரும்பிச் சொன்னாள்: “எதிராளாத்துப் பர்வதத்தம்மாளுடைய தஞ்சாவூர் தம்பி வந்திருக்கிறார். இப்பத்தான் வந்து வண்டியிலிருந்து இறங்கினார்.”

ஆமாம்; நளினி ஊகித்தது சரியே. வந்திருந்தது தஞ்சாவூரிலிருந்த

ஜெயராம சாஸ்திரிகள்தான். அவர் சாதாரண மாக விஜயபுரத்துக்கு வரப்பட்டவரல்ல. தன் சகோதரியிடம் வாஞ்சைக் குறைவு என்பதல்ல. அவர் ஊரைவிட்டு வந்து விட்டாரானால் அவருடைய ஜீவனம் சிரமப்பட்டுப் போகும். தவிர, நாலைந்து குழந்தைகளையும் வைத்துக் கொண்டு அவர் மனைவி தனியாகக் கஷ்டப்பட வேண்டி வந்துவிடும். இதை எல்லாம் உத்தேசித்து அவர் ஊரை விட்டுக் கிளம்புவதே கிடையாது. மிகவும் அவசியமான காரியம் இருந்தாலொழியக் கிளம்பமாட்டார்.

இப்பொழுது அவர் விஜயபுரம் வந்திருந்தது மிகவும் அவசியமான ஒரு காரியத்தை முன்னிட்டுத்தான். என்ன காரியம் என்று நளினியோ, விசுவநாதய்யரோ, சின்னம்மாளோ அவர்கள் வீட்டுத் திண்ணையிலிருந்து அவரைப் பார்த்துக் கொண்டு நின்றபொழுது ஊகிக்கவில்லை.

ஜெயராம சாஸ்திரிகள் வைதிகர்தான். ஏதோ புஸ்தகங் களிலிருந்தும், குருமுகமாக அத்தியயனம் செய்தும் நெட்டுருப் போட்டிருந்த மந்திரங்களைக் கடகடவென்று உருட்டிவிட்டு அணாக் கணக்கில் தட்சிணை வாங்கி, ரூபாய்க் கணக்காக அதைப் பெருகவிட்டு, தம்பிடிக் கணக்கில் செலவு செய்து மிச்சம் பிடித்து ஏதோ தங்குவதற்கு ஒரு வீடு, கூட்டுச் சீட்டு இரண்டொன்றில் கொஞ்சம் பணம் என்று லௌகிகம் தெரிந்த மனிதராகத் தான் காலந் தள்ளி வந்தார். தஞ்சாவூர் நகரிலிருந்த எத்தனையோ வைதிகர்களில் அவரும் ஒருவர்; சற்றுக் கெட்டிக்காரர். கூடியவரையில் நியம நிஷ்டை தவறாதவர் என்று அவருக்குப் பெயர்.

அவர் வந்து தமக்கை வீட்டு வாசலில் வண்டியிலிருந்து இறங்குமுன்னரே ஒரு தினுசாக எதிர்வீட்டில் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற பெண்ணைப் பார்த்துவிட்டார். பார்ப்பதற்குப் பெண் லட்சணமாகத் தான் இருந்தாள். அவர் தம்பி சீதாராமன் சொன்னது வாஸ்தவம்தான். சர்க்கார் உத்தியோகம் பார்த்து வந்தவருடைய பெண். பார்க்க அழகாகவும் இருந்தாள் - தாயில்லாத பெண்ணென்று சற்றுச் சிறப்பாகவே எல்லாம் செய்வார்கள். தன் தம்பியினுடைய ஆசை பைத்தியக் காரத்தனமான ஆசை என்றே முதலில் ஜெயராம சாஸ்திரிகளுக்குப் பட்டது.

ஆனால் யோசித்துப் பார்க்கும்போது அவர் தம்பிக்குத் தான் என்ன

குறைவு? வயது அதிகமில்லை. பார்க்க நன்றாகத் தான் இருந்தான். பி.ஏ. படித்தவன். கொஞ்ச காலம் நல்ல உத்தியோகமும் பார்த்தவன். எப்படியோ கையில் கொஞ்சம் பணம் சேரவே சொந்தத் தொழில் செய்தான். சொந்தத் தொழில் செய்வது லாபகரமானது. பிறரிடம் கைகட்டிச் சேவகஞ் செய்து கண்ட லாபம் என்ன என்று அவன் கேட்டதும் உண்மைதான். இரண்டு வருஷமாக நாணயமாகவே தொழில் செய்கிறான். ரைஸ் மில் ஒன்று, எண்ணை மில் ஒன்று, ஒரு மளிகைக் கடை - எல்லாம் சிறிய அளவில்தான். என்னவோ இதுவரை நஷ்டம் வராமல் ஏதோ கூடியவரையில் லாபகர மாகவே தான் நடந்தும் வருகிறது. பொறுப்புத் தெரியாதவன் என்று சொல்வதற்கில்லை. ஆனால் தமையன் என்கிற முறையில், தகப்பனார் ஸ்தானத்தில் இருந்து அவனுக்குச் செய்யவேண்டியதைச் செய்துவிடுவது தன் கடமை என்று உணர்ந்தார் ஜெயராம சாஸ்திரிகள்.

அவர் யோசனைதான் அது. விஜயபுரம் தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யர் சம்மதித்தால் அவர் பெண் நளினியை மணந்துகொள்ளச் சீதாராமனுக்கு ஆசை.

“பெண் வீட்டுக்காராளாக வரணுமே தவிர நம்ம போய்க் கேட்கலாமோடா?” என்று ஆட்சேபங்கள் செய்து பார்த்தார் சாஸ்திரிகள்.

“பெண் வீட்டுக்காராளுக்கு என்னைப்பற்றி விவரம் தெரியாது. தப்பாக நினைக்கும்படியாகக் கூடச் சந்தர்ப்பங்கள் இருந்தன” என்றான் சீதாராமன்.

“மூன்று வருஷத்துக்கு முன்னோடி விஜயபுரம் போனேன்னு சொன்னயே, அப்போ ஏதாவது....” என்று ஜெயராம சாஸ்திரிகள் கேட்டார். இந்த நாகரிக உலகத்தின் வேதத்திற்கேற்ப நடந்து சமாளித்துக் கொள்வது சாஸ்திரி களுக்குச் சிரமமாகத்தான் இருந்தது. அவர் தீங்கு செய்தாலும், தவறு செய்தாலும், பாவம் செய்தாலும் தற்கால சௌகரியத் தார்த்தத்தை உத்தேசித்தும் பிற்காலத்தில் ஏற்ற பரிகாரமும் பிராயச்சித்தமும் செய்துவிடத் தயாராக இருக்கிற மனோ பாவத்திலேயேதான் செய்பவர். யாரும் பிராயச்சித்தத்தை தீமையின் விளைவை அனுபவிக்க முடியாமல்

போய்விட முடியும் என்று அவர் எதிர்பார்த்திருப்பவரல்ல. சீதாராமன் என்னென்ன பாபங்கள் செய்தானோ, என்னென்ன பரிகாரங்கள் செய்து எப்படி எப்படி அனுபவித்துச் சரிக்கட்ட இருந்தானோ என்பதுபற்றி அவர் மனத்தில் உள்ளூரப் பெருங் கவலைதான். அவன் பட்டணத்துப் பாங்கியில் வேலையாக இருந்து, அதை விட்டு வந்தபின் நடந்த சில சம்பவங்கள் அவர் மனத்திற்கு இன்று நினைத்தாலும் திகைப்பும் பீதியையும் ஊட்டு வனவாகவே இருந்தன. ஆனால் அதற்காகத் தம்பியை விட்டுக் கொடுத்துவிட முடியுமா?

சீதாராமன் மற்றதற்கெல்லாம் பதில் சொல்லாமல் ஒரே அடியாகச் சொன்னான்: "நீ விஜயபுரம் போய்ப்பார். நான் தஞ்சாவூரில் இருக்கிற சமாசாரம் கூடத் தெரியாது. நீயும் அக்காவைப் பார்த்துப் பல வருஷங்களாகின்றன. போய் விட்டு வா. அந்தப் பெண்ணுக்கு இன்னும் கலியாண மாகா விட்டால் விசாரித்துப் பார். சம்மதித்தார்களானால் முகூர்த்தம் கூட வைத்துக்கொண்டு வந்துவிடு" என்றான்.

"பைத்தியக்காரப் பயல்! ரெண்டு எழுத்துப் படிச்சுட்டா மனசிலே என்னெல்லாமோ தோணத் தொடங்கி விடறது. அப்புறம் கட்டிப்பிடிக்க முடியறதில்லை" என்று முணு முணுத்துக் கொண்டதான் ஜெயராம சாஸ்திரிகள் விஜய புரத்துக்குக் கிளம்பினார். காலை ரயிலில் கிளம்பினார் - மாலை அல்லது இரவுக்குள் திரும்பிவிடுவதாக.

வண்டியிலிருந்து இறங்கும்போதே பெண்ணைப் பார்த்தாகிவிட்டது - கல்யாணமாகவில்லை. சரி, அக்காவை விசாரித்தால் மற்றவை தெரிந்துவிடுகிறது என்று எண்ணிக் கொண்டே வீட்டிற்குள் போனார்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு என்னவோ விசுவ நாதய்யரைச் சந்தித்து அது விஷயமாகக் கேட்கவே மனம் வரவில்லை. அசாத்தியமான காரியத்தைச் சாதிக்க முடியாதா, பார்க்கலாமே என்று பார்ப்பதற்குப் பெண்களுக்குள்ள சுபாவமோ, அல்லது நளினி தன் தம்பிக்கு மனைவியாக வந்து வாய்க்கமாட்டாளா என்கிற ஓர் ஆசையோ, அல்லது நளினிக்கு சீதாராமனிடம் ஒரு பிரியம் விழுந்திருந்தது என்று கண்டு கொள்ள இருந்த ஒரு இயற்கையான சாதுர்யமோ தூண்ட

சின்னம்மாவிடம் பர்வதத்தம்மாள், அன்று மத்தியானமே விஷயத்தைப் பிரஸ்தாபித்து விட்டாள். இந்தக் கல்யாணத் துடன் விஜயபுர அக்கிரகாரத்திலே தன் மதிப்பே ஒரு படி உயர்ந்துவிடும் என்று அவள் எண்ணினாள்.

கல்யாணமாகிவிட்டால் போதும், மாப்பிள்ளை யாரானால் என்ன என்பது சின்னம்மாவின் அந்தரங்க அபிப்பிராயம். ஆனால் வெளிப்படையாக, அவரைக் கேட்கணும் என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிட்டாள்.

மாலையில் விசுவநாதய்யர் ஆபீஸிலிருந்து திரும்பி வந்த பிறகு சின்னம்மாவுக்கும் அவருக்கும் இடையே இது குறித்து விவாதம் நிகழ்ந்தது. விசுவநாதய்யருக்கு சீதாராமன் நல்ல வரன் என்றே பட்டது. ஆனால் பழைய கலவரம்....?

அவர் நளினியைக் கேட்டார்.

“போ, அப்பா!” என்றாள் நளினி என்றுமில்லாத லஜ்ஜையுடன்.

“இல்லையம்மா; சொல்லு, கேலி இல்லை. உன் சந்தோஷம் இதைப் பொறுத்துத்தானே இருக்கு?” என்றார் விசுவநாதய்யர்.

“அந்தக் குருஸ்வாமின்னு ஒருத்தர் வந்தப்போ அவருக்குப் பயந்துண்டு ஓடிப் போனாரே.... எனக்குச் சொல்லத் தெரியல்லையப்பா!” என்று மனத்திலிருந்ததை மறைத்தும் மறைக்காமலும் பதில் அளித்தாள் நளினி.

சின்னம்மா குறுக்கிட்டாள்: “அதெல்லாம் பழைய சமாசாரம். அந்தக் குருஸ்வாமி காலிப்பயல். ஜெயில்லே இருக்கான். என்ன மிரட்டினானோ என்னவோ!”

“அது சரி. ஆனால் இவர் ஒண்ணும் தப்புத் தண்டாச் செய்யல்லேன்னு தெரிஞ்சுட்டா எனக்கு நிம்மதியாக இருக்கும். இல்லாட்டா ஆயுஸு பூராவும்...” என்றாள் நளினி.

விசுவநாதய்யர் அன்று மாலையே ஜெயராம சாஸ்திரிகளைச் சந்தித்துத் தன் பெண்ணின் ஜாதகத்தைக் கொடுத்தார். ஜசதகம் பொருந்தியே இருந்தது.

கல்யாணத்துக்கான பேச்சுகளெல்லாம் முடிந்த பிறகு கல்யாணத்துக்கான ஏற்பாடுகளெல்லாம் நடந்தது.

நளினிக்கு மட்டும் மனசிலே ஒரு கலவரம்: “எனக்கு நிச்சயமாக அவர் குற்றம் செய்யவில்லை என்று தெரிந்தால் தான் நிம்மதி பிறக்கும்” என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். விசுவநாதய்யரிடம் இரண்டொரு தரம் பிரஸ்தாபித்தாள்.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை. என் மாப்பிள்ளை ரொம்ப நல்லவன். நீ வேணுமானால் கல்யாணம் ஆன பிறகு அவனைக் கேட்டுப் பாரேன்” என்றார்.

கல்யாணம் ஆவதற்கு முன் நளினிக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவும் இல்லை.

# அடைத்த கதவு

சீதாராமனுக்கும் நளினிக்கும் கல்லியாணம் சற்று விமரிசையாகவே நடந்தது என்று தான் சொல்லவேண்டும். அதாவது தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யரின் நிலைமைக்குக் கல்யாண “செரப்புகள்” சற்று அதிகம்தான். இது சாத்திய மானதற்குக் காரணம் சீதராமன்தான். அவன் வரதட்சணையாக எதுவும் வாங்கிக் கொள்ள மறுத்துவிடவே. பெண்ணுக் கென்று சற்றுப் பெருமையாகவே மற்றச் செலவுகளைச் சிறப்பாகப் பெற்றதில் அவருக்குப் பரம திருப்தி தான். அவனும் நல்ல ஸ்திதியில் இருப்பதாகவே விசாரித்து அறிந்து கொண்டு எல்லையற்ற ஆனந்தத்தில் அழுந்தினார்.

தாயில்லாப் பெண்ணை எப்படியோ காப்பாற்றிக் கணவனிடம் ஒப்புவிக்கும் பொறுப்புக்கழிந்து விட்டதே என்று சின்னம்மாவுக்கும் சந்தோஷம்தான். அதுவும் எப்படிப் பட்ட மாப்பிள்ளை! மூக்கும் முழியுமாக, சிவப்பாக, கண் நிறைந்த வாலிபன்! ஏதோ சொத்தும் சிறப்பும் இருந்தது என்று சொல்லிக் கொண்டார்கள் - நல்லதுதான். எல்லாவற்றிற்கும் மேலாக சீதாராமன் சேஷ ஹோமம் எல்லாம் ஆனபிறகு தன் மனைவியையும் தன்னுடன் தஞ்சைக்கு அன்றைக்கே அழைத்துப் போகவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது அவளுக்குப் பிடித்திருந்தது. நளினி இனி தன் பொறுப்பாக விஜயபுரத்தில் இருக்கமாட்டாள் என்பது ஒன்று - அவன் கணவன் அவளைப் பிரியமாக வைத்துக் கொள்வான் என்பதற்கு இது ஓர் அடையாளம் என்று கருதினாள் சின்னம்மா.

அந்தப் புது சம்பந்தம் பற்றி கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி களுக்கும், பர்வதத்தம்மாளுக்கும் பரம திருப்தி. விஜயபுரம் அக்கிரகாரத்தில் அவர்கள் சீதாராமன் காரணமாக இழந்து விட்ட செல்வாக்கை எல்லாம் நளினி காரணமாகத் திரும்பவும் பெற்றவர்களாகி விட்டார்கள். நாளடைவில் முந்திய நிலையைத் தான் எட்டிவிட முடியும் என்கிற நம்பிக்கை பிறந்து கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகளுக்கும் புத்துயிர் தந்தது.

விஜயபுரம் அக்கிரகாரவாசிகளில் சீதாராமனைப் பற்றிக் கெட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தவர்கள் கூட இப்பொழுது கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் காரணமாகவும், தந்திக் குமாஸ்தா விசுவநாதய்யர் காரணமாகவும் அவனைப் பற்றிச் சற்று மரியாதையாகவே பேசத் தொடங்கினார்கள். முன் நடந்ததெல்லாம் ஏதோ சிறுபிள்ளை விளையாட்டு என்று எண்ணி மறந்துவிட்டவர்கள் போலப் பேசினார்கள்.

சீதாராமன் - நளினியின் கல்யாணம் ஊரில் மற்றவர்கள் எல்லோருக்கும் திருப்தியளித்தது. ஆனால் சீதாராமனுக்கோ நளினிக்கோ திருப்தியளித்ததாக மட்டும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

மணப்பந்தலில் உதடுகளைக் கடித்துக்கொண்டு கண்களில் ஒரு மிரண்ட பார்வையுடன், தான் மாலையிட்டுக் கரம் பற்றியவனைப் பற்றி ஒருவிதமான முடிவுக்கும் வரமுடியாமல் உட்கார்ந்திருந்த நளினியைப் பார்க்க பார்க்க சீதாராமனுக்குக் கலவரமாக இருந்தது. அவளுடைய முகபாவம் அவனால் தெளிவு செய்துகொள்ள முடியாததாக இருந்தது. அவள் இந்தக் கல்யாணத்தில் விருப்பமோ பெருமையோ கொள்ள வில்லை என்கிற எண்ணம் சீதாராமன் மனத்தில் தோன்றியது. இந்த எண்ணத்தைத் தொடர்ந்து பலதரப்பட்ட கலவரங்கள் அவன் மனத்தில் எழுந்தன. பருவத்திற்குரிய குணம் என்று அவன் அதை ஒதுக்கிவிட்டிருக்கலாம். ஆனால் என்னவோ தெரியவில்லை. ஏதோ தன்னைப்பற்றிய ஒரு பயங்கொள்ளித் தனம் அவனைத் தூண்டியது மனதை ஒரு நிலைக்கு வர வொட்டாமல் அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

நளினியின் மனோநிலை விவரிக்கும் தரமானதல்ல. அவள் அறிய விரும்பியது ஒன்றுதான்: “சீதாராமனுக்கும், குரு ஸ்வாமிக்கும், அந்தப் பாங்கிக் கொள்ளைக்கும் உள்ள சம்பந்தம் என்ன? சீதாராமன் அந்தப் பணத்தைத் திருட வில்லையானால் அவன் அன்று அப்படிப் பயந்து கொல்லைப் புறமாக ஓடுவானேன்? திருடியது சீதாராமன்தான் என்றால்....?” அதற்குமேல் சிந்திக்க நளினிக்குத் தைரியம் இல்லை. ஆயுள் பூராவும் ஒரு திருடனுடன் வாழ்ந்து, அவன் திருடன் என்கிற

ஞாபகம் ஒவ்வொரு நிமிஷமும் மனத்தைப் பிய்க்க ... அதற்குச் சம்மதிப்பதாக இல்லை நளினி.

கல்யாணத்திற்கு முன்னதாகவே இந்தச் சந்தேகம் தீர்ந்து விட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். கலியாணத்திற்கு முன்னால் அவள் சீதாராமனைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் நேரில் கேட்டிருப்பாள். அவன் பதிலைப் பொறுத்திருக்கும் கலியாணம் நடப்பதும் நடக்காததும். ஆனால் இவ்வளவு தூரம் நடந்த பிறகு எப்படி நிறுத்துவது கல்யாணத்தை? கழுத்தில் தாலியும் ஏறிவிட்டது. கொஞ்சம் விசாரமாகவேதான் இருந்தது நளினிக்கு. ஆனால் எது எப்படியானாலும் சரி. அவர் திருடன் என்றால்? பாங்கியில் மோசடி நடத்தியவர் என்றால்? - மேலே சிந்திப்பதற்குச் சற்றுப் பயமாகவே இருந்தது நளினிக்கு.

ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் நிச்சயம் என்று தன் மனத்திலேயே முடிவுகட்டிக் கொள்ள விரும்புகிறவள் போலத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டாள். ஆனால் அப்படித் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வருவதும் மிகவும் சிரமமான காரியமாகத்தான் இருந்தது.

உலக வாழ்க்கையைத் திண்ணையில் நின்று வேடிக்கை பார்த்து வாழ்க்கைப் பிரச்னைகளை நாடகப் பிரச்னைகளாகப் பாவித்துப் பழகியவள் அவள். தவிரவும் தீவிரமான முடிவு எதற்கும் வருவதற்குப் போதிய மனோதிடமும் அறிவு முதிர்ச்சியும் பெறாதவள். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் - சீதாராமனைப் பற்றிய வரையில் - அவளுக்கு ஒரு மனோ திடமும், சிந்திப்பதற்கான ஒரு முதிர்ச்சியும் ஏற்பட்டிருந்தது வாஸ்தவமே. குழந்தையுள்ளத்தில் சீதாராமனைப் பற்றிய வரையில் இரண்டே இரண்டு காட்சிகள்தான் நின்றன. ஒன்று முதல்தடவை சீதாராமன் விஜயபுரம் வந்தபோது அவனைப் போலீஸார் கைது செய்து அழைத்துப் போனது; இரண்டாவது குருஸ்வாமியும் அவனும் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து விவாதம் செய்தது.

கல்யாணமாகிய உடனேயே தஞ்சைக்குப் புறப்பட்டார்கள் சீதாராமனும் அவனுடன் வந்தவர்களும். நளினியும் தன்னுடன் வரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான் சீதாராமன். நளினிக்கும் இஷ்டமே.

இரண்டாம் வகுப்பு வண்டியில் நளினியும் சீதாராமனும் மட்டும் இருந்தார்கள். தெய்வாதீனமாகத் தனக்குச் சௌகரியமாக ஏற்பட்ட காரியம் அது என்று அவளுக்குப் பட்டது.

சீதாராமன் தான் முதலில் பேசினான்: "பட்டணத்து மாமான்னு நீ முதல் தடவை நான் வந்தபோது...." என்று சொல்லிக்கொண்டே அவளண்டையில் நெருங்கி உட்கார்ந்தான்.

சுபாவமாக உள்ள ஒரு நாணமும் கேட்க விரும்பிய கேள்வியைச் சரியாகக் கேட்கவேண்டுமே என்கிற விருப்பமும் தூண்ட நளினி சற்றே தூர நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். எப்படித் தைரியமாக, என்ன கேட்பது என்று முதலில் தெரியவில்லை.

"குருஸ்வாமி என்ற ஒருவர் வந்த அன்றைக்கு...." என்று தட்டுத்தடுமாறி ஆரம்பித்தாள்.

சீதாராமனின் ஞாபகம் சட்டென்று இன்ப உலகத் திலிருந்து அவ்வளவு இன்பகரமானதல்லாத ஒரு விஷயத்துக்குத் திரும்பியது என்பதை அவன் முகபாவம் காட்டியது. சற்றுக் கசந்த கடுமையான குரலில், "அதைப்பற்றி என்ன இப்போது?" என்றான்.

சட்டென்று அவன் முகம் மாறியதையும் அவன் குரல் கடுமையானதையும் நளினி கவனியாமல் இல்லை. கவனித்தாள். அவள் மனத்திலிருந்த சந்தேகம் சந்தேக நிலையைத் தாண்டி ஊர்ஜிதமாகிற மாதிரியாகிவிட்டது. ஆனால் தன் கனவுகளை இழக்க இவ்வுலகில் யார்தான் தயாராயிருக்கிறார்கள்? கனவென்று தெரிந்தாலும் உண்மையாகவே இருந்துவிடாதா என்று அவஸ்தைப்படுகிறார்கள் தானே மனிதர்கள்!

படபடத்த உள்ளத்துடன் நளினி சற்றே தைரியத்தை வரவழைத்துக்கொண்டே கேட்டாள். "அப்படியானால் அன்று குருஸ்வாமி கூறியதெல்லாம் உண்மையேதானா?"

சீதாராமன் பதில் சொல்லவில்லை. ஆனால் அவள் குரலில் ஒலித்த ஓர் ஏக்கமும், நிராசையும், கன விழந்த பாவமும் அவன் உள்ளத்தில் சுரீரென்று தைத்தன. தஞ்சை போய்ச் சேருகிற வரையில் அவளுடன்

இன்னின்ன பேசுவது, இப்படி இப்படி நடந்து கொள்வது என்று திட்டமிட்டிருந்த சீதாராமன் அவள் வார்த்தைகளாலும் குரலாலும் கிளறிவிடப் பட்ட சிந்தனைகளில் ஈடுபட்டவனாக உட்கார்ந்திருந்தான். அதுவரை அவன் உணர்ந்திராத ஓர் உணர்ச்சி அவனுக்கேற் பட்டது. பிராயச்சித்தமே இல்லாத ஒரு குற்றத்தைச் செய்து விட்டவன்போல. அவன் தலையிறங்கி சிந்தனைகளில் ஆழ்ந்தவனாக உட்கார்ந்திருந்தான். நளினியைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவன் விரும்பியபோது அவள் மனத்தில் தன்னைப்பற்றி எந்தவிதமான ஞாபகங்கள் இருக்கும் என்று தான் சிந்திக்காதது தன் தவறுதான் என்று எண்ணமிட்டான்.

எப்படியோ ரெயிலில் தனிமையில் இருவரும் பொழுதைக் கழித்துவிட்டார்கள். புதுசாகக் கல்யாணமான தம்பதிகளாகக் குதூகலத்துடன் தஞ்சையில் அவர்கள் ரெயிலைவிட்டு இறங்கவில்லை. நளினியின் முகத்திலே ஒரு சோகபாவம் நிரம்பியிருந்தது. ஆனால் அவள் வாயை இறுக மூடிக் கொண்டு, கண்களில் உள்ள கலக்கத்தை மறைத்துக் கொண்டு தான் இறங்கினாள்.

அவர்களுக்கென்று தனியாக வீடு ஏற்பாடு செய்திருந்தான் சீதாராமன். நேரே அங்கேதான் போனார்கள். அஸ்தமிக்க ஒரு நாழிகை யிருக்க வீடு போய்ச் சேர்ந்தார்கள் சீதாராமனும், நளினியும்.

தன் சிந்தனைகளைத் தப்புகிற உத்தேசத்துடனோ என்னவோ சீதாராமன் தன் கடைப் பக்கம் போய்விட்டுச் சீக்கிரமே வந்துவிடுவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினான். போகுமுன் நளினியிடம், “அந்தப் பழைய கதையை எல்லாம் நீயும் நானும் மறந்துவிடுவதே நல்லது” என்று சொல்லி விட்டுப் போனான்.

அழுகை நிறைந்த மெல்லிய குரலில் நளினி, “அதெப்படி சாத்தியம்?” என்று கேட்டது அவன் காதில் விழுந்திராது.

இரவில் கடைகளுக்கெல்லாம் போய்விட்டு நளினிக் கென்று கதம்பமும், ரோஜாப் பூவும் வாங்கிக்கொண்டு சீதாராமன் வீடு திரும்பும்போது மணி ஒன்பதரைக்கு மேலாகி விட்டது. வெளி வாசற்கதவு தாளிடாமல்

வெறுமனே சாத்தி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்ததுமே அவனுக்கு என்னவோ பக்கென்றது.

"நளினி!" என்று கூப்பிட்டான்.

இருளிலிருந்து யாரும் பதில் அளிக்கவில்லை. விளக்கை ஏற்றிப் பார்த்தான். நளினியின் பெட்டியும், படுக்கையும் வண்டிக்காரன் சாயங்காலம் கொண்டுபோய் வைத்த இடத்திலேயே இருந்தன. அந்தப் பெட்டியின்மேல் வைத்திருந்த ஒரு கடிதம் கண்ணில் பட்டது. அதைப் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லைபோல் இருந்தது அவனுக்கு. ஆயினும் பிரித்தே பார்த்தான் நடுங்கிய கைகளுடன்.

நளினிதான் எழுதியிருந்தாள்: "எவ்வளவு சாமர்த்திய சாலிதான் ஆனாலும் ஓர் அயோக்கியனுடன் வாழ நான் விரும்பவில்லை. திடீரென்று ஏற்பட்ட முடிவு அல்ல இது. என்னைத் தேட வேண்டாம்" என்றும், பின் குறிப்பாக. "நான் விஜயபுரம் போகவில்லை" என்றும் எழுதியிருந்தாள் நளினி.

சீதாராமனின் கைகளிலிருந்து கதம்பமும் ரோஜாப் புஷ்பப் பொட்டலமும் அந்தக் கடிதமும் நழுவித் தரையில் விழுந்தன.

அவன் அவசரத்தில் திறந்து வைத்துவிட்டு வந்திருந்த கதவு - வாசற் கதவு - காற்றில் படாரென்று அடித்துச் சாத்திக் கொண்டது!